D
V211,31 IN
4948

## உள்ளடக்கம்.

5—5—1992


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 105–14 |
| **2. சிறப்புக் குறிப்புகள்—** | |
| (அ) சென்னை-விழுப்புரம் சாலையில் மதுராந்தகம் அருகே கடுமையான விபத்து ஏற்பட்டுள்ளது குறித்தும் அந்த சாலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது குறித்தும். | 142–14 |
| (ஆ) வேலூர் பகுதியில் நியாய விலைக் கடைகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவது குறித்து. | 145–14 |
| (இ) உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை அறிவிக்கை குறித்து. | 147 |
| (ஈ) இலங்கை அகதிகள், அவர்கள் விருப்பத்திற்குமாறாக வெளியேற்றப்படுவது பற்றி மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று நடைபெறும் போராட்டம் குறித்தும், அத்தகைய நடவடிக்கை வன்முறையைத் தூண்டுவதாகவும், இலங்கைப் போராளிகளை ஊக்குவிப்பதாகவும் அமைந்திருப்பது குறித்தும். | 147–15 |
| (உ) யாதவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி மறியல் செய்தபோது அவர்களில் சிலர் கைது செய்யப்பட்டது குறித்து. | 151–15 |
| **3. உரிமைப் பிரச்சினை—** | |
| 'கரண்ட்' (2-8 மே, 1992) வார இதழ் தலையங்கத்தில் பேரவையையும் உறுப்பினர்களையும் அவமதிக்கிற வகையில் செய்திகள் வெளியிட்டுள்ளது குறித்து. | 154–171 |

**4. அறிவிப்பு—** பக்கங்கள்

இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.) 171

**5. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992. 172

**6. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 1992–93 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1991–92 மீது விவாதம்—** 173–243

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் 173, 175, 176, 209, 219–243

திரு. எஸ். டேனியல்ராஜ் 173–178

திரு. எம். ஜி. சேகர் 179–182

திரு. வே. தம்புசாமி 183–188

திரு. செ. து. வரதராஜன் 188–192

திரு. ஆர். ஈஸ்வரன் [illegible]3–196

திரு. நா. சா. பழனிசாமி [illegible]–200

திரு. காஞ்சி பன்னீர் செல்வ[illegible] [illegible]–206

திரு. வி. கே. சின்னசாமி 19[illegible], 206–212

திரு. ஜி. பழனிசாமி 212–215

திரு. எச். எம். ராஜு 215–218

**7. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகிய வற்றைத் தளர்த்துதல். 243–244

(ஆ) பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பெறுதல். 245–246

**8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**

இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992. 244–245

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.** 246


164945

D

V211,31'N92

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை** 

**சித்திரை 23, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2023**

**1992 மே 5, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. ''

புறத்து இருளைப் போக்கும் சுடர்விடக்கூடிய விளக்குகள் எல்லாம் விளக்குகள் ஆகா ; உள்ளத்தின் அகத்து இருளைப் போக்கும் பொய்யாமை எனும் விளக்கே விளக்குகளுள் எல்லாம் சிறந்த விளக்காகும்.

அங்கே விளக்கு இல்லை, இங்கே விளக்கு இல்லை என்று கேட்காதீர்கள். உங்களுடைய வாய்மையே விளக்கு என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 665, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**665—**

**தமிழக அரசு பரிசுசீட்டு விற்பனை.**

*** 8737—திரு. ஆ. சுப்புரத்தினம் :**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசு பரிசு சீட்டு துறையில் தற்போது எத்தனை வகையான பரிசு சீட்டுகள் நடத்தப்படுகின்றன?

(ஆ) இவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

(இ) இவற்றின் விற்பனையை அதிகரிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் துறையால் தற்பொழுது ஆறு வகையான பரிசுச் சீட்டுத் திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் விற்பனை வரி செலுத்தியது போக ஆண்டுக்கு சராசரியாக சுமார் ரூ 2 கோடி நிகர வருமானம் கிடைக்கிறது.

(இ) பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிப்பதற்கான வகைகளை ஆராய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனையின்படி அரசு அதிகாரிகள் மட்டத்தில் குழு ஒன் நியமிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, பம்பர் பிரைசஸ் என்று அழைக்கப்படும் சிறப்பு முதல் பரிசுகள் பல நேரங்களில் விற்கப்படாத சீட்டுகளுக்கு விழுமாறு பார்த்துக் கொள்ளப்படுகிறது என்ற ஒரு கருத்து பரிசு சீட்டு விற்பனையாளர்களிடத்தில் நிலவுகிறது. எனவே தான் தமிழக பரிசு சீட்டுகள் விற்பனை முன்பு போல இல்லை என்று சொல்லுகிறார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ? ஆம் எனில் இந்த கருத்தை மாற்றுவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குலுக்கலுக்காக உற்பத்தி செய்யப்பட்ட பரிசு சீட்டுகள் அத்தனையும் கணக்கில் இப்போது எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அந்த வகையிலே வாங்கியவர்கள் போக, வாங்காமல் அரசின் கையிருப்பிலே இருப்பது ஆகியவைகளுக்கு குலுக்கல் விழுகின்றன. பலபேர் அதிலே யோசனை தெரிவித்திருக்கிறார்கள். முகவர்களும் யோசனை தெரிவித்திருக்கிறார்கள். விற்பனை செய்யப்பட்ட சீட்டுகளுக்கு மட்டும் குலுக்கல் நடத்துவதன் மூலம் வாங்கியவர்களுக்கு வசதி ஏற்படும் என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாநில பரிசு சீட்டுகள் தமிழகத்தில் தற்போது மிக அதிகமான அளவில் விற்பனை ஆகின்றன. இவைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா ? நமது மாநில பரிசு சீட்டுகள் இந்தியாவின் பிற பகுதிகளில் அதிகமான அளவில் விற்பனை செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மற்றும் வெளி மாநில பரிசுச் சீட்டு விற்பனையைத் தடை செய்து, அரசு 6—10—1989 அன்று ஒரு ஆணையை பிறப்பித்தது. அதற்கு பின்பு 13—2—1991-லும் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தடையாணையை எதிர்த்து சில தனியார் மற்றும் மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தில் தடை உத்தரவைப் பெற்று தமிழ்நாட்டில் தொடர்ந்து பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்து வருகின்றன. மேற்படி உச்ச நீதி மன்றத்தின் நிலுவையில் உள்ள வழக்குகளில் தமிழக அரசுக்கு சாதகமாக தீர்ப்பு கிடைத்ததும் தனியார் நடத்தும் வெளி மாநில பரிசுச் சீட்டு விற்பனையை தடை செய்து தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் விற்பனையை அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே அதிகமான லாட்டரி சீட்டுகள் விற்கும் இடம் நமது தமிழ்நாடு தான். எல்லா மாநில டிக்கட்டுகளும் தமிழ்நாட்டிலே கிடைக்கிறது. நம்முடைய தமிழ்நாடு லாட்டரியில் பரிசு விழுந்தால், பணம் வாங்க மிகவும் காலதாமதம் ஆகிறது. மற்ற லாட்டரி சீட்டுகளுக்கு பரிசு விழுந்தால் உடனே பணம் ஏஜென்டுகள் மூலம் கிடைத்துவிடுகிறது. அதனால் மக்கள் மற்ற மாநில லாட்டரி டிக்கட்டுகளை வாங்க விரும்புகிறார்கள். அரசு அதை அறியுமா ? இதிலே அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் கூறியபடி வெளி மாநிலங்களிலேயுள்ள தனியாரும், அரசின் சார்பாகவும் பரிசுச் சீட்டுகளை தமிழகத்திலே விற்பனை செய்வதை தடை செய்வோமானால் தமிழகத்தினுடைய பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்பனையாக வழியிருக்கும் என்ற காரணத்தால் தான் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் அந்த ஆணைகள் உச்ச நீதிமன்றத்தால், தடை செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வழக்கு முடிகின்றவரையில் இந்த நிலைமை நீடிக்கும். மற்றும் பரிசுத் தொகையை வழங்குவது பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். மற்ற மற்ற மாநிலங்களும், தனியாரும் நடத்துவதைப் பொறுத்தவரையில் பணத்தை அந்தந்த ஏஜென்டுகளுக்குக் கொடுத்து விடுவதன் காரணமாக அவர்கள் கூடுமானவரை உடனுக்குடன் தந்து விடுகிறார்கள். ஆனால்

அரசின் சார்பாக இந்த பொறுப்புகளை நாம் ஏற்றுக்கொண்டிருப்பதால் சில நாட்கள் காலதாமதம் ஆகலாமே தவிர அது கொடுக்கப்படாமல் இல்லை. அவர்கள் கையாளுகின்ற அதே முறையை நாம் கையாளுவோமானால் அதிலே சில இழுக்குகள் ஏற்படும், முறைகேடுகள் நடக்கும், பலர் குற்றம் சாட்டுவதற்கு இடம் ஏற்பட்டுவிடும் என்கிற காரணத்தால்தான் குற்றமற்ற வகையில், குறையில்லாத வகையில் இந்த பரிசுச் சீட்டை நடத்த வேண்டுமென்ற காரணத்தால்தான் அரசு இந்தத் தொகையை வழங்குகின்ற பணியை மட்டும் செய்து வருகிறது.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. சி. ஞானசேகரன்.

__திரு. சி. ஞானசேகரன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய லாட்டரிச் சீட்டுகளைப் போன்றும், அதே போல மற்ற லாட்டரிச் சீட்டுகளைப் போன்றும் பலபேர் இன்று போலி டிக்கெட்டுகளை அடித்து லாட்டரிச் சீட்டுகளை தமிழகம் முழுவதும் விற்றுக்கொண்டு, பகல் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தமிழக மக்கள் பெரும்பாலும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த போலி லாட்டரிச் சீட்டுகளை எல்லாம் உடனடியாக நிறுத்துவதற்கும், அதேபோல சுப்ரீம் கோர்ட்டில் தடை செய்யப்பட்டிருக்கிற, அதாவது வெளி மாநில லாட்டரிச் சீட்டுகளை தமிழகத்தில் விற்கக் கூடாது என்கின்ற அந்த ஸ்டேயை வெக்கேட் செய்யவும் அந்த ஆணையை செயல்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் ஏற்பட்டுள்ள தடையாணையை நீக்குவதற்கு அரசு ஒரு பக்கம் முயற்சி செய்துகொண்டு வருகிறது. போலியான லாட்டரிச் சீட்டுகளை விற்பனை செய்வதை தடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது போல, பொதுவாக வெளி மாநிலங்களில் இருந்து தனியாரோ அல்லது மற்றவர்களோ அனுமதி பெறாமல் அப்படி விற்பனை செய்வார்களேயானால் அதை தடை செய்கின்றோம். போலித் தன்மையிலே யாராவது அப்படி விற்பனை செய்வார்களேயானால் அது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நமக்கு உரிமை உண்டு. அந்தப் பணியினை அரசு செய்து கொண்டு வருகிறது. யாராவது அதை சுட்டிக் காட்டுவார்களேயானால் அதன் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. எஸ். எஸ். ராமசுப்பு.



__திரு. எஸ். எஸ். ராமசுப்பு:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஒரு ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் லாட்டரிச் சீட்டு மூலமாக அரசுக்கு வருமானம் வருகிறது என்று சொன்னார்கள். ஆனால், ஏராளமாக லாட்டரிச் சீட்டுகள் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மற்றும் தமிழக அரசு மூலமாகவும் வெளியிடப்பட்டு மக்கள் மத்தியில் விற்கப்பட்ட போதிலும் கூட அரசுக்கு வருகின்ற வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆதலால் லாட்டரிச் சீட்டை முறைப்படுத்தி அதற்கு வரி ஒன்றை விதித்து அதன் மூலமாக அரசுக்கு வருமானத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968-69-வது ஆண்டு இந்த பரிசுச் சீட்டு குலுக்கல் தமிழகத்தில் தொடங்கப்பட்டது. 1991-92 வரையில், அதாவது இதுவரையில் 51 கோடியே 87 லட்சம் ரூபாய் நிகர வருமானமாக கிடைத்திருக்கிறது. வரி விதிப்பின் மூலமாக 1986-87 முதல் 1991-92 வரையில் நமக்கு 6 கோடியே 85 லட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இந்த 51 கோடியே 87 லட்சம் ரூபாயில் பெரும்பாலும் கிராமப்புறங்களில் மேற் கொள்ளப்படுகின்ற குடி தண்ணீர் மேம்பாடு, குடியிருப்பு, நல்வாழ்வு போன்ற பணிகளுக்கு நிதி ஆதாரமாக இதில் 75 சதவிகிதம் நாம் செலவழித்துக் கொண்டு வருகிறோம். ஆகவே, இதனை அதிகமாக ஆக்குவதற்கும், இதிலே ஏற்படுகின்ற தடைகளை மாற்றுவதற்கும் நீக்குவதற்கும் தான் வணிக வரி ஆணையாளர், நிதித் துறைச் செயலாளர் மற்றும் பரிசுச் சீட்டு இயக்குநர் ஆகிய மூவரையும் கொண்ட ஒரு குழுவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற பிரச்சினைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து இந்த மாநிலத்தினுடைய பரிசுச் சீட்டுகளை எந்த வகையிலே சிறப்புக்குரியதாகவும், அதன் மூலமாக அதிக வருமானம் வரத்தக்க வகையிலும் மாற்றியமைக்க முடியுமோ அந்த வகையில் மாற்றியமைப்பதற்கான முயற்சிகளை இந்தக் குழுவினுடைய அறிக்கை கிடைத்த பிறகு அரசு மேற்கொள்ளும்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ திரு. கே. பி. ராஜு.

__திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு__ பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டில் பரிசு விழுகின்றபோது, பரிசாக தருகின்ற அந்தப் பணத்தை அரசின் சிறு சேமிப்பில் சேமித்து வைக்க அரசு வழிவகை செய்யுமா? அதுபோல வெளி மாநிலங்களில் விழுகின்ற பரிசுப் பணத்தையும் நம்முடைய சிறு சேமிப்பில் சேமித்து வைத்தால் அரசுக்கு வருமானம் அதிகமாகும். ஆகவே, பரிசு விழுகின்ற பரிசுத் தொகையை சிறு சேமிப்பில் சேர்க்கின்ற எண்ணம் அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 மே 5

முற்பகல் 9-40.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று பரிசுச் சீட்டுகள் மூலம் விழுகின்ற தொகையை சிறு சேமிப்பில் சேர்த்தால் நல்லதுதான். ஆனால் சேர்க்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் அவர்களை அணுகி அந்தத் தொகையை சிறு சேமிப்பிலே போடுவதன் மூலம் மேலும் அவர்களுக்கு வருமானம் கிடைக்குமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் எடுத்துச் சொல்லி வரலாம். நானும் எடுத்துச் சொல்லி வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சத்தியமூர்த்தி.

திரு. வை. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு உத்தேசமாக தமிழக பரிசுச் சீட்டு மூலம் 2 கோடி ரூபாய் வருவாய் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த வருவாய் கடந்த ஆண்டுகளோடு ஒப்பிடும்போது முறையாக ஆண்டுக்காண்டு கூடுதலாக வந்து கொண்டிருக்கிறதா அல்லது குறைந்து கொண்டிருக்கிறதா? குறையுமானால் அல்லது ஆண்டுக்காண்டு முறைப்படி கூடவில்லை என்று சொன்னால் அதற்கான காரண காரியம் என்ன என்பதை அரசு ஆராய்ந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் 4 ஆண்டுகளில், 1968-69 1969-70, 1970-71, 1971-72 ஆகிய ஆண்டுகளில் கூடுதலாகக் கிடைத்தது. அதற்குப் பிறகு பல்வேறு மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் இங்கே விற்கத் தொடங்கிய பிறகு ஓரளவுக்குக் குறையத் தொடங்கியது. சில ஆண்டுகளில் $2\frac{1}{2}$ கோடி, சில ஆண்டுகளில் $1\frac{1}{4}$ கோடி, சில ஆண்டுகளில் 3 கோடி என்ற அளவில் வந்திருப்பதைத்தான் நான் சராசரியாக 2 கோடி என்று குறிப்பிட்டேன். அதை சீர்படுத்தி, செம்மைபடுத்துவதற்கு, அதிக வருவாய் ஈட்டும் வகையில் சூழ்நிலையை உருவாக்கத்தான் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. குழுவின் அறிக்கை விரைவிலே எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசுச் சீட்டுகள் தனியார் ஏஜண்டுகள் மூலம் விற்பனை செய்யும்போது, தமிழ்நாடு முழுவதும் மட்டுமின்றி அயல் மாநிலங்களிலும் ஏஜண்டுகள் வைத்து விற்கிறார்கள். அவர்களை ஒழுங்குபடுத்தும் முகமாக தமிழக அரசே அதிகாரிகளை நியமித்து, பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1992 மே 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஓரளவுக்கு லாபம் இருக்கிறது என்ற நோக்கத்தின் அடிப்படையில் தனியார் ஏஜண்டுகள் மிக மும்முரமாக அதற்காக தனி முயற்சிகள் எடுத்து செய்வார்கள். இதையும் அதிகாரிகள் செய்வார்கள் என்று சொன்னால், தனி முகவர்களுக்கு இருக்கும் அக்கறை அதிகாரிகளுக்கு இருக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. பரிசு சீட்டு கட்டுகள்தான் திருப்பி நம்மிடத்திலே அனுப்பி வைக்கப்படுமே தவிர, அதை விற்றுவிட்டு பணத்தை அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜீ.

திரு. எச். எம். ராஜீ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது சில சமயங்களில் இலாபம் குறைந்து கொண்டு வருகிறது. சில சமயங்களில் 2 கோடி அளவுக்கு லாபம் வருகிறதென்று சொல்லுகிறார்கள். தமிழ்நாட்டைக் காட்டிலும் மற்ற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் அதிக அளவில் தமிழ்நாட்டில் விற்பனையாகின்றன. நாம் ஏன் அவர்கள் போல் நமது மாநிலத்திலுள்ள பரிசுச் சீட்டுகளை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பி, அவர்களைப் போல் அதிக லாபத்தை ஈட்டக்கூடாது? அதற்கு ஏதாவது சிறப்புத் திட்டம் அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலும் சரி, பிற மாநிலங்களிலும் சரி, தமிழக பரிசுச் சீட்டுகளை பிரிப்பதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது. முகவர்கள் மூலமாகவும் அந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சில மாநிலங்களுக்கும் நமக்கும் உடன்பாடு இருக்கிறது. அவர்கள் பரிசுச் சீட்டு இங்கே வரலாம், நம்முடைய பரிசுச் சீட்டுகள் அவர்களுக்குச் செல்லலாம் என்று பல மாநிலங்களுடன் நாம் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டில் அதிகமான அளவுக்குப் பரிசுச் சீட்டுகள் விற்கக் காரணம், இங்கே இருக்கும் பத்திரிகைகளில்தான் ஜோஸ்யம், ராசி பலன்கள் எல்லாம் அதிகமாக, பக்கத்துக்குப் பக்கம் வருகிற காரணத்தால் அதில் மயங்கி இருக்கிற மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்த அதிருஷ்டம், ராசியை நம்பி இங்கே சீட்டுகளை வாங்குகிறார்கள். இந்த நிலை மற்ற மாநிலங்களில், அதாவது பக்கம் பக்கமாக ராசி பலன் போடும் பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 666, டாக்டர் பீட்ரிக் டி. 'சோசா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

666—

Family Courts at District Leve.

*4319-Dr. BEATRIX D' SOUZA : Will the Hon. the Minister for Law be pleased to state ;

(a) Whether the Government will consider the introduction of Family Courts at District Level ?

(b) Whether the Government will consider the exclusion of lawyers from these Courts ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) மாவட்ட அளவில் குடும்ப நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. (குறுக்கீடுகள்.)

(ஆ) குடும்ப நீதிமன்றச் சட்டம் 1984 பிரிவு 13-ன் படி வழக்கறிஞர்கள் இந் நீதிமன்றங்களில் வழக்காட இடமில்லை. எனினும் நீதி வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதினால் வழக்குரைஞர்களின் உதவியை நாடலாம் என மேற்படி சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கை தூக்குகின்ற காரணத்தினாலேயே கூப்பிடப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டு திரு. ஞானசேகரனும், திரு. வி. கே. சின்னசாமியும் அமைச்சர் பதில் சொல்ல ஆரம்பிக்கின்ற போதே கை தூக்கக்கூடாது. பதில் சொல்லி முடித்ததற்குப் பிறகு அதில் உங்களுக்கு ஒரு துணைக் கேள்விக்கு இடம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு கை தூக்க வேண்டும். இரண்டுபேரும் போட்டி போட்டுக் கொண்டு அமைச்சர் பதில் சொல்ல எழுகின்றபோதே கை தூக்குகிறீர்களே.

Dr. Beatrix D' Souza : Hon. Speaker Sir, there are two family courts in Tamil Nadu and both are situated in Madras and they are terribly overburdened. The criteria for setting up a family court is that there should be a population of one million. There are four such urban centres in Tamil Nadu. Will the Government consider setting up family courts in these districts ?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாவட்ட அளவில் இந்த நீதிமன்றங்களை அமைப்பதில்லை. மக்கள் தொகை அடிப்படையிலேதான் அமைக்கப்படுகிறது. 10 லட்சம் பேர் இருந்தால் அங்கே ஒரு குடும்ப நீதிமன்றம் அமைக்கப்படுகிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல சென்னையில் 53 லட்சம் மக்கள் இப்போது வாழ்கிறார்கள். ஆனால் இரண்டு கோர்ட்டுகள் தான் இருக்கின்றன. எனவே, விரைவில் ஒரு கோர்ட் இந்த ஆண்டே தொடங்க அரசு முடிவு செய்திருக்கிறது. அடுத்து, மதுரை, கோவை ஆகிய மாநகரங்களிலும் முதல் முதலாக இந்த மூன்று நீதிமன்றங்கள் இல்லாமலேயே 4-வது, 5-வது நீதிமன்றங்களாக விரைவில் அமைக்க இருக்கிறோம். ஆகவே மாவட்ட அடிப்படையில் இல்லாமல் மக்கள் தொகை அடிப்படையில் அமைக்கப்படுகிறது. அதாவது 10 லட்சம் மக்கள் தொகை இருந்தால் ஒரு கோர்ட் என்ற அடிப்படையில் விரைவில் தமிழகமெங்கும் இந்தக் குடும்ப நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

Dr. Beatrix D' Souza : Hon. Speaker Sir, one reason for the over-burdening of these courts is that the procedure is long. At present the counselling or advice given to the parties is done after they come to court. In India where divorce is almost a last resort—absolutely the last resort—when people come to the court we can presume that the marriage has irretrievably broken down and there is no sense in having counselling at that time because it is waste of time. Will the Government consider having counselling before the parties file the petition and a certificate can be got from the counselling party saying that the marriage has broken down and only then they can come to court ? Then there will be less number of cases in the court.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The concept of reconciliation and settlement is the life breath of Family Court. சமாதானம் செய்து வைத்து, சண்டைகள் இல்லாமல், வழக்கை மேலும் மேலும் விரிவுபடுத்தாமல் இருக்கின்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதாகும். அது மட்டுமல்ல, The Family Court Act, 1984 is a Central Act. இந்த சட்டத்தின் 13-வது விதியில் என்ன கூறப்பட்டிருக்கிறதென்றால், 'Right to recall proceedings.' வழக்கறிஞர்கள் வைத்துக் கொள்ளவும் சில நேரங்களில் அனுமதிக்கப்படுகிறது.

" Notwithstanding anything contained in any law, no party to a suit or proceeding before a family court shall be entitled as right to be represented by a legal practioner provided that if the family court considered it necessary in the interest of justice, it may seek the assistance of a legal expert as amicus curie."

என்ற வகையில், தேவைப்பட்டால் நீதிபதியின் அனுமதி பெற்று அமைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு விதியும் இதில் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்த சபைக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **அது மட்டுமல்லாமல், கிராமப் பகுதிகளிலே விவசாயக் குடும்பங்களில் ஒரு பங்கு தகராறு காரணமாக பல வழக்குகள் சென்றிருக்கின்றன. அதற்கு கிராமத்திலே ஒரு கதை கூட சொல்வார்கள். வயல் வரப்பு தகராறுக்காக வழக்கு மன்றம் சென்றேன், வழக்கும் வாய்தாவும் அப்படியே இருக்கிறது. ஆனால் வயல் மட்டும் வக்கீலுக்குச் சொந்தமாகிவிட்டது என்று சொல்கிற ஒரு நிலைமை கிராமப்பகுதியில் நிலவி வருகிறது. ஆகவே இது போன்ற குடும்ப விவகாரங்களை முடிப்பதற்கு, அதைத் தவிர்ப்பதற்கு மக்கள் அடிப்படையில் மட்டும் இல்லாமல், ஒவ்வொரு மாவட்டந்தோறும் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** இங்கே வழக்கறிஞர்கள் மத்தியில் பலத்த ஆட்சேபம் இருக்கிறது. ஆகவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது இருக்கலாம்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஃபாமிலி கோர்ட் என்பதே குடும்பவிவகாரங்களை மட்டுமே எக்ஸ்குளுசீவாக கவனிப்பதற்காக மத்திய அரசால் உருவாக்கப்பட்ட சட்டம். எனவே மற்ற விவகாரங்களை இது கவனிக்காது. மாவட்ட அளவிலே என்று சொன்னால், நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மக்கள் அடிப்படையிலேதான், ஒரு பத்து இலட்சம் மக்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஒரு நீதிமன்றம் என்பது தான் வழிகாட்டு நெறி என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில் மட்டுமே இந்தக் குடும்ப நீதிமன்றங்கள் அமைக்கும் சூழ்நிலையில் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னேன், இது இடங்களில் முதற்கட்டமாக. ஆக மாநிலம் எங்கும் 10 இலட்சம் மக்கள் தொகை என்ற அளவிற்கு இந்த நீதி மன்றம் தொடர்ந்து செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே நகரமா, கிராமமா என்ற வித்தியாசத்தை அரசு பார்க்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் இந்தக் குடும்ப நீதி மன்றங்கள் அமைப்பது மிக மிக அவசியம் என்பதை நாங்கள் அனைவரும் வலியுறுத்துகிறோம். ஜனத்தொகை அடிப்படையில் இல்லாமல் யார் வாழ்க்கையில் கைவிடப்பட்டிருக்கிறார்கள் என்ற கணக்கினை எடுத்து அந்த அளவிலே நீதிமன்றத்தைத் துவக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதே நேரத்தில் ஒரு நீதிமன்றத்தில் ஒருவழக்கு நடந்தது. **அப்படியானால் மாவட்டத்திற்கு ஒரு நிலை என்று இருக்கிற நிலைகள் எல்லாம் கடந்த காலத்திலே இருந்தது என்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாவட்டம் பூராவும் நிலைமை அப்படி இருக்கிறது. ஆகவே அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்காக, நீதிமன்றத்தில் நீதி கிடைப்பதற்காக குடும்ப நீதிமன்றங்களை மாவட்ட அளவிலே, ஜனத்தொகையின் அடிப்படையில் அல்லாமல் விதவைகள், கைம்பெண்கள், வாழ்க்கையில் கைவிடப்பட்டவர்கள் என்று கணக்கை எடுத்து அதன் அடிப்படையில் குடும்ப நீதிமன்றம் துவக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 மே 5

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளாக இந்த நீதி மன்றம் செயல்பட்டு வருகிறது, சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 500 வழக்குகள் தாவா தீர்க்கப்பட்டு வருகிறது. இன்று நிலுவையில் 1,126 வழக்குகள் இருக்கின்றன. எனவே தான் புதிய கோர்ட்டுகள். இன்னும் சொல்லப்போனால் கணவனால் கைவிடப்பட்ட அனுதாபத்திற்குரிய சகோதரிகள் 6 இலட்சம் ரூபாய் வரை 'மெயின்டெனென்ஸ்' பணமாகப் பெற்று வருகிறார்கள். இந்த கோர்ட் வருவதற்கு முன்பு ஐம்பதாயிரம் ரூபாய் மட்டுமே பெற்றிருந்தார்கள். இப்போது 12 மடங்கு அதிகமாக, இந்த நீதிமன்றம் வந்த காரணத்தால், அவர்களுடைய குறைகள் எல்லாம் போக்கப்பட்டு ஆறு இலட்சம் ரூபாய் இன்றைக்கு அந்தக் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. ஆக இந்த முறை சீராக இருப்பதால் அதுதான் தொடரும் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறபோது** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது.

வினா எண். 552. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

552—

பிற்பட்டோர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கல்

*3870— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் வாழும் பிற்பட்டோர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் எத்தனை நபர்களுக்கு இலவச் மனைப்பட்டா வழங்கப் பட்டன?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 மே 5]

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மிகவும் பிற்பட்டோரில் சில பிரிவினருக்குத்தான் வீட்டுமனை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

(ஆ) எனவே இக்கேள்வி எழவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கக் கூடியவர்கள் வீட்டுமனை இல்லாமல் பல ஆண்டுகளாக மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதிலே கான்ட்ரவர்சி என்ன வந்துவிடுகிறது என்றால், அரிசனங்களுக்கு மட்டும் வீட்டுமனை வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், நான் அந்தச் சமுதாயத்தைச் சார்ந்திருக்கிற காரணத்தால் அவர்கள், ''நீங்கள் உங்கள் சாதியைச் சார்ந்தவர்களுக்குத்தானே வாங்கிக் கொடுக்கிறீர்கள்'' என்று விரக்தி மனப்பான்மையோடு இருக்கின்ற காரணத்தால் இந்தக் கேள்வியைக் கேட்டேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, யார் யார் வறுமைக்கோட்டிற்குக் கீழே வீட்டு மனை இல்லாமல் இருக்கிறார்களோ, அவர்கள் எந்த சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் வீட்டு மனை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் இதேபோன்ற ஒரு கேள்வியை ஒரு மாதத்திற்கு முன்னாலே கேட்டு விளக்கமாக அவர்களுக்குப் பதில் அளித்து இருக்கிறேன். அதே கேள்வியைத்தான் மீண்டும் வேறு வகையிலே கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த எண்ணம் அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களிலே பல பிரிவினர் நலிந்தவர்களாக, குறிப்பாக ஆதி திராவிட மக்களைப் போன்றும், அதற்கும் கீழாகவும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை அரசு தெரிந்து கொண்டிருக்கிறது என்றாலும், பிற்படுத்தப்பட்டவர்கள் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று எடுத்துக் கொண்டால் மிகப் பெரிய அளவிலே எண்ணிக்கை வளர்ந்து விட்டது. ஆகவே, அதிலே யாருக்கு வீட்டுமனை ஒதுக்கீடு செய்வது என்று எண்ணுகிற போது நிதி ஆதாரங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும் : ஆகவேதான் நிதிநிலையை மனதிலே வைத்துக் கொண்டு அரசு இந்தக் கருத்தைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி. ஏ . எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நகரங்களிலே மட்டும் 'ஸ்லம் கிளியரன்ஸ்' என்ற அடிப்படையிலே அடுக்குமாடி வீடுகளை எல்லாம் கட்டிக் கொண்டிருக்கிறோம். கிராமப்புறங்களிலே அதற்கென்று தனியாக ஒரு தாசில்தாரை நியமித்து எங்கெங்கெல்லாம் அங்கே குடிசைகளிலே, வீடுகளிலே கணவன் மனைவி தங்கள் குழந்தைகள், கல்யாணம் செய்த மகன், மருமகள் இருந்து கொண்டு இருக்கிறார்களோ அப்பேர்ப்பட்டவர்களுக்காவது ஒரு கணக்கு எடுக்கச் சொல்லி, அந்த அடிப்படையிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியில் வாழக்கூடிய மக்களுக்கு உடனடியாக ஒரு மூன்று ஆண்டுத் திட்டம் என்று ஒரு திட்டத்தைப் போட்டாகிலும் அவர்களுக்கு அந்த வீட்டு அடிமனை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற அந்தத் திட்டத்தின் கீழ் 4 பிரிவினர்தான் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்— சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், நரிக்குறவர் மற்றும் ஒட்டர்கள். ஆனால், பிற்படுத்தப்பட்டவர் என்று எடுத்துக்கொண்டால் 30 சதவீதம் ; மிகவும் பிற்படுத்தப்பட்டவர் 20 சதவீதம்; இந்த 20 சதவீதத்திலே எவ்வளவு பேருக்கு ஒதுக்குவது, எந்தப் பிரிவினருக்கு ஒதுக்குவது என்பதிலேதான் சிக்கலே இருக்கிறது. நகரத்திலே நீங்கள் குறிப்பிட்டதைப் போல, எல்லாக் கண்காணிப்பும், எல்லா வசதிகளும் நகரத்திலே இருப்பவர்களுக்குச் சுலபமாகக் கிடைத்து விடுகிறது ; கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்குக் கிடைப்பதிலேதான் கொஞ்சம் சங்கடங்கள் இருக்கின்றன. ஆனாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கிராமத்தினுடைய தேவைகளை முதல் உரிமையாக, முன்னுரிமையாகக் கவனித்து எடுத்து வருகிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அதையொட்டித்தான் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களிலே எப்படிப்பட்டவர்களுக்கு, வாழ்க்கையிலே நலிந்து கொண்டு இருப்பவர்களுக்கு இந்தக் குறைந்த அளவு உதவியையாவது, வசதியையாவது வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிற திட்டத்தையாவது நிறைவேற்றலாமா என்பதைப் பற்றி துறை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட பட்டியலிலே இருக்கின்றவர்களுக்கும் வீட்டுமனை கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு நரிக்குறவர்களை மட்டும் இணைத்து இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு மேலே இருளர் என்று ஒரு



இனம் இருக்கிறது. அவர்கள் பெரும்பாலும் பாம்புகளைப் பிடித்து, பாம்பு தோல்களை உரித்து, அவர்களும் பாம்புகளைப் போன்று உடலிலே ஆடையின்றி, கல்வி கலாச்சார நிலையிலே அவர்கள் மிக பின்தங்கி இருக்கிறார்கள். ஊருக்கு ஒருவர் இருவர் கூட இல்லாத ஒரு நிலையிலே இருக்கின்ற அந்த மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலை வருகின்றபோது அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லி அரசு அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா இல்லை என்று சொல்கிறார்கள். அரசின் நிதிநிலை பற்றாக்குறை என்று அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நகரத்திலே நான் கேட்கவில்லை ; கிராமப்புறங்களிலே மேய்ச்சல் நிலம் என்று புறம்போக்கு நிலங்கள் நிறைய இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களை வசதி படைத்தவர்கள் பிடித்து இன்றைக்கு வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. போளூர் வரதன் : அந்த நிலங்களை அரசு கிளாசிபிகேஷனை மாற்றினாலே வீட்டுமனை இல்லாதவர்களுக்கு, எல்லா இனத்திலேயும் பொருளாதாரத்தில் நலிவுற்று இருக்கிற அத்தனை பேருக்கும் கொடுக்கக் கூடிய அளவிற்கு தமிழகத்திலே மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை, கிளாசிபிகேஷன் மாற்றிக் கொடுத்தாலே எல்லா இன மக்களுக்கும் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த பாம்பு பிடிக்கிற தொழிலிலே ஈடுபட்டு இருப்போருக்கு வீட்டு மனைகள் ஒதுக்கப்படுமா, அவர்களுக்கு வசதி செய்து தரப்படுமா என்ற கேள்வியின் முதற் பகுதியிலே கேட்டு இருக்கிறார்கள். அதைத்தான் நான் முன்னாலேயே குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட பிரிவினர் ஒருவர், இருவர் அல்ல, பல பிரிவினர் இதற்குள்ளே வருகிறார்கள். அப்படிப்பட்ட பல லட்சக்கணக்கானோர்கள் இப்படிப்பட்ட நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் அரசு இதைக் கவனமாகவும் மிகுந்த தீவிர உணர்வோடும் பரிசீலித்துக் கொண்டு வருகிறது என்று தெரிவித்தேன். இந்தக் கேள்வியின் அடுத்த பகுதியாக, இடம் கையகப்படுத்துவதற்கு அரசாங்கத்தினுடைய பல்வேறு புறம்போக்கு நிலங்கள் வேறு பெயர்களிலே இருக்கிறதே, அதை மாற்றக்கூடாதா என்று கேட்கிறார்கள். அதைப்பற்றி இந்த மன்றத்திலேயே பல உறுப்பினர்கள் பல மாதிரியாகக் கேள்விகள் கேட்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்,

அதற்குப்பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கிற புறம்போக்கு நிலங்களை எல்லாம் மாற்றிவிட்டால், அதற்குப் பிறகு, அதற்காக, எந்தக் காரணத்திற்காக, எந்த அவசியத்திற்காக அவைகள் புறம்போக்கு நிலங்களாக வைக்கப்பட்டு இருக்கின்றதோ, அந்த நிலைமையே மாறிவிடும் என்பதை, இந்த மூலக்கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களே, அப்படி மாற்றி விட்டார்கள் என்று முன்பு ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிறபோது, அவர்களுடைய கேள்வியிலே வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இது ஒரு அபாயகரமான எண்ணம். ஆனாலும், எங்கேயாவது கையகப்படுத்துகிற அப்படிப்பட்ட அரசு நிலங்கள் இருக்குமேயானால், அதையும் அரசாங்கம் கவனத்திலே எடுத்துக் கொண்டுதான் பரிசீலிக்கிறது.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவசமாக வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு கடந்த காலங்களில் நிதி ஏதும் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா? அப்படி நிதி ஒதுக்கப்பட்டிருந்தால், அந்தக் குறியீடு எட்டப்பட்டு இருக்கிறதா? நிதி ஒதுக்கப்படாமல் பட்டா வழங்கவேண்டும் என்று, இத்தனை பேருக்காவது வழங்க வேண்டும் என்று மாவட்டங்களிலே ஏதும் இலக்கு நிர்ணயித்து, இதுவரையில் செயல்பட்டு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டவர்கள் என்று பொதுப் பட்டியலிலே வைத்துக் கொண்டிருந்த காலத்தில், 1981 ஆம் ஆண்டிலேதான், மாண்புமிகு, டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியின் போது, இந்த இட ஒதுக்கீடு செய்கின்ற திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அப்போது அன்றைக்கு இருந்த நிதிநிலைமைக்கு ஏற்ப, ஆண்டுக்காண்டு, நிதி வசதிகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. சுமார் 10 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு பரிசீலிக்கிறபோது, இதற்காக 2 கோடி ரூபாயிலிருந்து 2¼ கோடி ரூபாய் வரை இதற்காக செலவிட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 16 ஆயிரம் வீட்டு மனைகளுக்கு பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், சென்ற ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு முந்தைய ஆண்டு, 1 கோடி ரூபாய் ஒதுக்கப் பெற்று, அதிலே 30 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டும், அதைத் தொடர்ந்து, இப்படிப்பட்ட நில ஆர்ஜிதங்களுக்காக இன்னும் அதிக அளவிலே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இலவச வீடுகள் பெறும் அளவிற்கு பொருளாதாரத்தில் பின்தங்கி உள்ள குடும்பங்கள் எத்தனை உள்ளன என்பதை அறிய ஜாபிதா கணக்குகள் எடுத்து, தாலுக்கா வாரியாக அரசு வைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புள்ளி விவரங்கள் அரசினிடத்திலே தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 667. திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

667—

மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி செயல்படுதல்.

*7880—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் உருக்காலை அருகே மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரிக்காக கட்டப்பட்டு வரும் புதிய கட்டிடத்தில் மருத்துவக் கல்லூரி எப்போதிலிருந்து செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. சு.முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் உருக்காலை அருகே அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்கு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. பு பிரதான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. அக்கட்டிடத்திற்கான கதவுகள், ஜன்னல்கள் ஆகியவைகள் செய்து அமைக்கும் பணி முன்னேற்றமடைந்து கொண்டு இருக்கிறது என்றும் அனேகமாக இம்மாத கடைசிக்குள் முடிக்கப்படும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலே இயங்கி வருகின்ற மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களுக்குப் போதிய வசதிகள் இல்லை. அவர்கள் பரீட்சை எழுதுவதற்குக் கூட தயங்கக்கூடிய நிலையில் வேறு கல்லூரிகளிலே சென்று பயிற்சி பெறக்கூடிய நிலையை மாற்றி, அவர்களுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கல்லூரிக்கு நேராக நான் சென்று பார்த்து, அத்தியாவசியமாக இப்போது தேவைப்படுவதை, டெம்பரரியாக ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், நிரந்தரமாக கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அந்தக் கட்டிடங்கள் இந்த மாதம் கடைசிக்குள்ளாக முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனேகமாக, இந்தக் கட்டிடம் முடிந்தால், அந்தப் பிரச்சினை முழுவதுமாக தீருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இன்னும் பெண்களுக்கு தங்குகிற விடுதிக்குக் கூட மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் பணம் ஒதுக்கி அந்தப் பணியும் துவங்க இருக்கிறது. எனவே, நிச்சயமாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

முற்பகல் 10–05

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சேலம் உருக்காலையில் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற அந்த மருத்துவக் கல்லூரியிலே இன்றைய தினம் சேலம் நகரத்திலே இருக்கின்ற அந்த மருத்துவ மனையையும் சேர்த்து இணைத்து அதற்கு ஒரு திட்டம் அரசிடம் தயார் நிலையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருக்காலைக்கு அருகிலே இருக்கிற இடத்திலே ஏறத்தாழ 150 ஏக்கர் பரப்பளவிலே மருத்துவக் கல்லூரியை மட்டுமே இப்போது கட்டுவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். மருத்துவ மனையைப் பொறுத்தவரை, சேலம் நகரத்ினுடைய மையத்திலே அமைந்திருக்கின்ற அந்த மருத்துவமனையை இந்தக் கல்லூரிக்காக இப்போது நாம் பயன்படுத்திக் கொள்ள இருக்கிறோம். எதிர் காலத்திலேதான் தனியாக இங்கே மருத்துவமனை ஆரம்பிக்க வேண்டுமா என்பது பற்றி ஆலோசிக்கப்படும். ஆனால் தற்போது சேலத்தில் இருக்கின்ற மருத்துவ மனையையே நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். இடையிலே பத்து கிலோ மீட்டர்தான் இருக்கிறது. எனவே வாகனங்களை வைத்து நாம் அங்கே வந்து அந்த மருத்துவமனையைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 668, திரு. இரா. நடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

668

## ரப்பர் தரம் பிரிப்பு ஆராய்ச்சிக்கூடம்

*8002—திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் ரப்பரின் தரத்தை பகுப்பாய்வு செய்து, தரத்தை பேணுவதற்கு ஏதுவாக ஒரு ரப்பர் தரம் பிரிப்பு ஆராய்ச்சிக் கூடம் நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறு ரப்பர் உற்பத்தியாளர்களின் நலன் கருதி ரப்பர் தரத்தை பகுப்பாய்வு செய்து தருவதற்காக நாகர்கோவில் பதிவு அலுவலகத்தில் ஒரு சிறு தரம் பிரிப்பு ஆய்வகம் அமைக்க அரசு ரப்பர் கழகம் திட்டமிட்டுள்ளது.

(ஆ) ஆய்வகம் அமைக்க இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ஆனால் அரசு ரப்பர் கழகத்தின் நிதி நிலை மோசமாக உள்ளதால் செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. கழக நிதிநிலை சீரமைந்ததும் ஆய்வுக் கூடம் நிர்மாணிக்கப்படும்.

திரு. இரா. நடேசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வுக் கூடம் அமைக்க திட்டமிட்டுள்ளதாகக் கூறியதற்கு நன்றி. வருகின்ற ஆண்டிலே எப்படியாவது அதைச் செயல்படுத்த முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஆகின்ற செலவு ரூ. 3.10 இலட்சம். இந்த நிதியாண்டில் அதை உருவாக்க வேண்டுமென்பதற்காக 92-93-ஆவது நிதியாண்டில் அந்த ஆய்வுக் கூடத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 669, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

669—

கைத்தறி சொசைட்டி நெசவாளர்களுக்கு கூலி:

*4210— திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கைத்தறி சொசைட்டியில் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு ஒரே மாதிரியான கூலி கிடைக்கச் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியில், பலவிதமான இரகங்கள், பலவிதமான மூலப் பொருட்கள் கொண்டு, உற்பத்தி செய்யப் படுவதால் உற்பத்தித் திறன், தொழில் நுட்பம் போன்றவை, நெய்யும் இரகத்திற்கு ஏற்றவாறு மாறுபடுவதால் இந்த மாதிரி திட்டம் தற்போது இல்லை.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ரகத்திற்குக் கூட ஒரு கைத்தறி சங்கத்திற்கும் இன்னொரு கைத்தறி சங்கத்திற்குமிடையே கூலி வேறுபடுவதாகப் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அந்த மாதிரி இடங்களில் அதைச் சரி செய்வதற்கு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறையைப் பொறுத்த அளவு ரகங்கள், தொழில் நுட்பம் 'குவாலிட்டி' அண்டு 'குவான்டிட்டி' இதை இரண்டையும் வைத்துத்தான் கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆதலால் தரத்திற்கு ஏற்றவாறு இடத்திற்கு ஏற்றவாறு அவர்கள் செய்கின்ற உற்பத்திக்கு ஏற்றவாறு தான் கூலி நிர்ணயம் செய்யப்படும், சிலர் ஜனதா சேலையை உற்பத்தி செய்கிறார்கள். சிலர் பட்டு சேலையை உற்பத்தி செய்கிறார்கள். பட்டினுடைய விலை அதிகமாக இருக்கிறது. ஜனதா சேலையினுடைய விலை குறைந்த விலையில் இருக்கிறது. ஆனால் ஜனதா சேலை உற்பத்தி செய்கிறவனுக்கு பட்டு சேலை உற்பத்தி செய்கிறவனுக்குக் கொடுக்கின்ற கூலி கொடுக்க வேண்டுமென்றால் — 50 ரூபாய்க்கு ஜனதா சேலை கிடைக்கிறது. 5,000 ரூபாய்க்கு பட்டு சேலை கிடைக்கிறது. அந்த அளவிற்கு ஜனதா சேலையினுடைய விலையை உயர்த்தினால் மக்கள் வாங்க மாட்டார்கள். தொழில் இல்லாமல் பாதிப்பிற்கு ஆளாவார்கள். அதற்காகத்தான் செய்கின்ற பொருளை வைத்து, செய்கின்ற தொழில் நுட்பத்தை வைத்து கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஜனதா ரகம் என்று எடுத்துக்கொண்டால் கூட, அந்த ஜனதா ரகத் துணிகள் நெய்வதற்கு தமிழ் நாடு முழுவதும் ஒரே சீரான கூலி கொடுக்கப்படுகின்றதா? அப்படியில்லை என்றால், அதற்காக ஒரே வகையான கூலி கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் ஒரு நாள் முழுவதும் இந்த நெசவு வேலையைச் செய்து கொண்டு கடைசியாக அவர்கள் பெறுகிற ஊதியத்தைப் பார்க்கிற போது மிகவும் குறைவாக இருக்கிறது. மற்ற தொழில்களைச் செய்கிறவர்களுக்கெல்லாம் கிடைக்கிற கூலி இவர்களுக்குக் கிடைக்க முடியாமல், அதனுடைய விலை தரம் ஆகியவற்றைக் கணக்கில் எடுக்க வேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பார்க்கின்றபோது காலையிலிருந்து மாலை வரை நெசவு வேலை செய்து கொண்டு 8 ரூபாய்க்கும் குறைவாக சம்பளத்தை பெறுகிறார்கள் என்று சொன்னால் அது மிகவும் பரிதாபத்திற்குரிய ஒன்று ஆகவே அவர்களுக்குக் கூலியை நிர்ணயம் செய்து தமிழகம் முழுவதும் உள்ள நெசவாளர்களுக்கு ஒரு நாளைக்குக் கூலி இவ்வளவு என்று வரையறுக்கின்ற முயற்சியை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை 1241-ன் கீழ் குறைந்த ஓய்வு ஊதியத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு டியர்னெஸ் அலவன்ஸ் கிடைப்பதற்காக அரசு பரிசிலித்து வருகிறது. அத்தோடு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்கீழ் அவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயம் செய்வதற்கு அரசு பரிசீலித்து வருகிறது. மிக விரைவில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 670, திரு. எம். தங்கவேல், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்

670—

## ஊராட்சி தெருவிளக்குகளுக்கு மின்சாரக் கட்டண வசூல் ரத்து செய்தல்.

*3463— திரு. எம். தங்கவேல்:
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஊராட்சிகளில் உள்ள தெருவிளக்குகளுக்கு பயன்படுத்தப் படும் மின்சாரத்திற்கான கட்டணம் வசூலிப்பதை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதுள்ள நிதி நிலையில் இது சாத்தியமில்லை.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்றைக்குச் சில கிராமப் பஞ்சாயத்துகளில் வருமானமே இல்லாமல், நிதி இல்லாமல் மின்சாரக் கட்டணம் கூட கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் இந்த மின்சாரக் கட்டமே வசூலிக்கப்பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதைக் கருத்தில் கொண்டு அந்த மின்சாரக் கட்டணத்தையே ரத்து செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த மின் அழுத்தம் உள்ள ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு யூனிட்டிற்கு 1 ரூபாய் 57 காசுக்கு மேலே செலவிடப்படுகிறது. ஆனால் இன்றைக்கு அவர்கள் கொடுக்கிற கட்டணம் 1 ரூபாய். இதிலே ஏறத்தாழ 57 பைசா மின்சார வாரியத்திற்கு ஒரு யூனிட்டிற்கு நஷ்டம் வருகிற காரணத்தாலே இன்றைக்குப் பல கோடி ரூபாய் நஷ்டத்தை மின்சார வாரியம் தாங்க வேண்டியிருக்கிறது. தற்போது இருக்கிற மின் உற்பத்தி யினுடைய செலவு அதிகரித்து இருக்கிற காரணத்தாலே, நிலக்கரியினுடைய விலை, கொண்டு வருகிற டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் இவைகள் எல்லாம் கூடியிருக்கிற காரணத்தாலே தற்போது மின்சார வாரியம் அந்தக் கோரிக்கையை பரிசீலிப்பதற்கு ஏற்புடையதாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்சாரக் கட்டணத்தை ரத்து செய்ய முடியாது என்று



தெரிவித்தார்கள். இப்போது இருக்கிற பஞ்சாயத்துகளைக் நகர பஞ்சாயத்துக்கள், கிராம பஞ்சாயத்துக்கள் என்று பிரித்து, கட்டணம் கூட கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிற கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக் குறைந்த கட்டணத்தை நிர்ணயம் செய்தும், டவுன் பஞ்சாயத்துகளுக்கு அதிக வருமானம் உள்ள பஞ்சாயத்துகளுக்குக் கட்டணத்தைக் கூட்டியும் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தமட்டிலே அவைகள் உள்ளாட்சி அமைப்புகளின் கீழே, நிர்வாகத்தின் கீழே இருந்து வருகின்றன. மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டிலே நான் ஏற்கெனவே சொன்னதைப் போல ஒரு ரூபாய் 57 காசுக்கு ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து அதை 1 ரூபாய்க்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப் பல்வேறு சலுகைகள் கொடுத்துக் கொண்டு இருப்பதால் ஏறத்தாழ 800 கோடி ரூபாய்க்கு மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இது போன்ற திட்டங்களை மின்சார வாரியம் செயற்படுத்த முடியாது. அரசினுடைய திட்டத்திலே இதுபோன்ற திட்டங்கள் சேர்க்கப்பட்டால், அரசின் சார்பாக ஏதாவது நிதி வழங்கப்பட்டால் மின்சார வாரியம் அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியமும் ஊராட்சி ஒன்றியமும் நம்முடைய அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதால் இன்றைக்குச் சில ஊராட்சி ஒன்றியங்களிலே பொது நிதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள் பல இருக்கின்றன. அப்படி இல்லாத ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு மானியமாக பொது நிதி வழங்கப்படுகிறது. அந்தப் பணத்தைக் கொண்டு தான் மின் கட்டணம் கட்டப்படுகிறது. அது போல மின்சார வாரியமும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதனால் இரண்டும் அரசுத் துறையைச் சேர்ந்திருக்கின்ற காரணத்தால் அந்த மின் கட்டணத்தை ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகக் கட்டப்படுகின்ற மின் கட்டணத்தை ரத்து செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் அரசுடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும் 1948 சென்ட்ரல் ஆக்ட்படி மின்சார வாரியம் இயங்கி வருகிறது. ஆகவே இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டிலே சலுகைகள் அளிக்கின்றபோது அரசு அந்தப் பணத்தை ஒதுக்கு

செய்தால்தான் சலுகைகளை கொடுக்க முடியும். மின்சார வாரியமே உற்பத்திச் செலவை அதிகரித்து குறைந்த விலையிலே மின்சாரம் கொடுக்கின்ற போது நான் ஏற்கெனவே சொன்னதைப்போல அதிகமான நஷ்டத்தை ஏற்க இயலாது. ஆகவே அதற்காகத்தான் தன்னிறைவுத் திட்டங்கள் என்று கொண்டுவந்து ஊராட்சியிலே நிதி இல்லாத காரணத்தினாலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சிறந்த திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட விளக்குகளைப் போடவேண்டுமென்று அரசிடமிருந்து நிதி கொடுத்திருக்கிறார்கள் எங்களுக்கு ஆக அப்படி அரசிடமிருந்து நிதிகள் வருகின்ற நேரத்திலே நாங்கள் அந்தப் பணிகளை மின்சார வாரியத்தின் மூலம் மேற்கொள்ள முடியும் இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்திற்குப் பேரூராட்சியிலே கூட 150 கோடி ரூபாய் திட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு அரசு அது பற்றிப் பரிசீலிக்குமானால் மின்சார வாரியம் அந்தக் கருத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 671, திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்.

671—

வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்துச் செல்வதை தடை செய்தல்.

*2905—திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்துச் செல்வதை தடை செய்யவும், கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்துக் கொண்டு போவதைத் தடை செய்யவும், கடுமையான நட—வடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசிடம் கருத்துரு உள்ளது நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக். கொள்கிறேன்.

திரு. கு. லாரன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் சாதாரணமாக உணவுத் தட்டுப்பாடு, அரிசி உற்பத்தி குறைவான ஒரு மாநிலம். அண்மைக்காலங்களில் மத்திய அரசும் தன்னுடைய மத்தியத் தொகுப்பிலிருந்து.............. 



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லாரன்ஸ் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கு. லாரன்ஸ் : அரிசியைக் குறைவாகக் கொடுக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரிசியைத் தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கின்றவர்கள் சமூக விரோதச் சக்திகளாகக் கருதப்பட வேண்டும். அவர்கள் மாறாக சமுதாயத்தினுடைய மிக முக்கியமான மனிதர்களாக இன்றைக்கு நடமாடுகிறார்கள். எனவே சமூக விரோத சக்திகளைக் கருத்தில் கொண்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலேயிருந்து வெளி மாநிலங்களுக்கு 4 அல்லது 5 மாவட்டங்களின் வழியாக அரிசி எடுத்துச் செல்லப்பட்டதை அரசு அறிந்து அதை முழுமையாகத் தடுப்பதற்கு இன்றைக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. மாநில எல்லைகளில் செக்போஸ்டுகளைப் போட்டு அங்கே ஆயுதம் தாங்கிய போலீசாரை நிறுத்தி வைத்திருக்கிறோம். அது போக யார் யார் நெல் அரிசியைக் கடத்துகிறார்கள் என்று பார்த்து 10 பேர்களுக்கு மேலே அவர்களைக் கைது செய்து இன்றைக்கு பிளாக் மார்க்கெட்டியர்ஸ் பிரிவென்ஷன் ஆக்ட்டிலே உள்ளே வைத்திருக்கிறோம். சில பேர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுதலையாகி வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அந்த மாவட்டத்திலேயே ஒரு மிகப் பெரிய கடத்தல்காரரை கைது செய்து 2,3 மாதங்கள் உள்ளே இருந்து இப்போது வெளியேவந்து விட்டார். ஆனாலும் அடுத்தவர்கள் மறுபடியும் அதைச் செய்யாமல் இருப்பதற்கு என்னென்ன கடுமையான நடவடிக்கைகள் உண்டோ அத்தனையும் எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கிறது என்பதை நாங்கள் அறிகிறோம். இருந்தாலும் அதை மீறி சில அரசு அதிகாரிகளுடைய உடந்தையோடு இவர்கள் சில காரியங்களை இன்றைக்கும் செய்வதுத் போலத் தெரிகிறது. எனவே அரசு அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு இலட்சக்கணக்கான ரூபாய் அரிசியைப் பறிமுதல் செய்கின்ற சூழ்நிலையில் அவர்களுக்கு இன்செண்ட்டிவ் ஏதும் வழங்கப்படுமா? அதுபோன்று அரிசி கடத்தலைத் தடுப்பதற்காக மக்கள் சக்தியை இந்த அரசு பயன்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, அரசாங்க அதிகாரிகள் யார் யார் கடுமையான நடவடிக்கை எடுத்து இதை தடுக்கிறார்களோ அவர்களை

அரசாங்கம் நிச்சயமாக ஊக்குவிக்கும் என்பதையும் அதே போல இந்தக் கள்ளக் கடத்தல் செய்பவர்களுக்கு யார் உடந்தையாக இருக்கிறார்களோ அவர்களுக்கும் கள்ளக் கடத்தல் செய்பவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படுகிறதோ அதே மாதிரி கடுமையான தண்டனை வழங்குவோம் என்பதையும் புரட்சித் தலைவி அவர்களின் உத்திரவின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய பிரதிநிதிகளாக வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே அரசுக்கு முழு ஒத்துழைப்பு தந்தால் கடத்தலை முழுமையாக ஒழித்துவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 672 திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

672—

குடியிருப்போர் சங்கங்கள் மூலமாக உணவுப்பொருள்கள் வினியோகித்தல்

3470—திரு. டி. எம். ரங்கராஜன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் பல குடும்பங்களில் கணவன்—மனைவி இருவருமே பணிக்குச் செல்வதால் அவர்கள் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து உணவுப்பொருள்களை வாங்க நகரில் உள்ள குடியிருப்போர் சங்கங்கள் (Residence Association) மூலமாக பொருள்களை வினியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்படிப்பட்ட கருத்துரு ஏதும் அரசிடம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னை மாநகரத்தை எடுத்துக் கொண்டால் பல குடும்பங்களிலே கணவனும், மனைவியும் வேலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் வேலையிலிருந்துதிரும்பி வருகின்ற காலக் கட்டத்திற்குள்ளாகவே இந்தப் பொருட்களை வினியோகிக்கின்ற ரேஷன் கடைகள் மூடப்படுகின்றன. இவற்றைத்





தவிர்த்திட தான் இந்த 'ரஷிடன்ட்ஸ் அசோஷியேஷன்' மூலமாக பொருட்கள் வினியோகிக்க முடியுமா என்று கேட்டு இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடியாது என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு காமதேனுவிலே மோபைல் ஷாப்ஸ் எல்லாம் வைத்து இருக்கிறார்கள். அதேபோன்று இந்த ரேஷன் பொருட்களை மோபைல் வேன்கள் மூலமாக அவர்களுக்கு வினியோகிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளைத் திறந்து வைப்பது தற்போது மாலை 7 மணி வரை இருக்கிறது. வேலைக்குச் செல்பவர்கள் எல்லாம் 5 மணிக்கே வேலையிலிருந்து திரும்பி விடுகிறார்கள். அப்படிக் காலதாமதமாக வருபவர்களுக்கு ஏதுவாகத் திறந்து வைப்பதற்கு இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறோம். அந்தந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நியாய விலைக் கடைகளுடைய நேரத்தை அவர்கள் நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களானால் சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதிகமான நேரம் திறந்து வைக்கவேண்டுமென்று விரும்பினால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொல்லி அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மோபைல் கடைகளைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே சில மாவட்டங்களில் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. தேவையானால் சென்னை மாவட்டத்திற்கும் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 673, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

673—

ஒரு நபர் உணவுப் பங்கீட்டு அட்டை ரத்து

*3919—திரு. கே. பி. ராஜு :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஒரு நபர் உணவு பங்கீட்டு அட்டைகளை அரசு ரத்து செய்து விட்டதா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நபர் உணவு பங்கீட்டு அட்டைகளை அரசு ரத்து செய்யவில்லை என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. பி. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரத்து செய்யவில்லை என்று சொன்னார்கள். கிராமங்களுக்குச் சென்றால் வயதான தாய்மார்களும், குழந்தைகளுடைய ஆதரவு இல்லாத வயோதிகர்களும் ஒரு நபர் கார்டுகளை ரேஷன் கடைகளுக்கு எடுத்துச் சென்றால் அவர்களைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள் என்பதை நாங்கள் பல்வேறு இடங்களில் பார்த்திருக்கிறோம். ஆகவே, ஒரு நபர் கார்டுகளுக்கு அரிசி வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, இப்போது புழக்கத்தில் உள்ள அட்டைகளில் ஒரு நபர் கார்டுகள் 2 லட்சத்து 29 ஆயிரத்து 217 கார்டுகள் இருக்கின்றன. ஒரு நபர் பங்கீட்டு அட்டைகளை ரத்து செய்ய வேண்டுமென்று அரசு ஏதும் உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆகவே, புதிதாக அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்க வேண்டுமென்று உத்தரவு அவசியம் இல்லை. ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகிறது. ஏதாவது ஒரு பகுதியில் அவர்களுக்கு வழங்கவில்லை என்று புகார் இருக்குமானால் அவற்றைப் பற்றி எனக்கு எழுதிக் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் எங்களுடைய தொகுதியில் பல்வேறு இடங்களில் அந்த அதிகாரிகள் ஒரு நபர் கார்டுகளைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். கேன்சலே செய்து விட்டார்கள். ஆகவே, மீண்டும் அந்த ஒரு நபர்களுக்கு அந்த ரேஷன் கார்டுகளை வழங்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்காவது தவறாக அப்படி ரத்து செய்யப்பட்டிருந்தால் அவைகளை மறுபடியும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 674, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



674—

## நுகர்பொருள் வாணிபத்தை தனியாரிடம் விடுதல்

*9159— திரு. சி. இராமசுவாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நஷ்டம் ஏற்படுவதால், மற்ற மாநிலங்களைப் போல், தனியாரிடம் விடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நஷ்டத்தில் இயங்கினாலும் அது மிக முக்கியமான பணியைச் செய்கின்ற காரணத்தால் அதை தனியாரிடம் விடுவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது? அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் செய்கின்ற பணிகள் இன்றைக்கு கொள்முதலைச் செய்து அவைகளைச் சேமிப்பது, வினியோகம் செய்வது, அனைத்தையும் அரசின் சார்பாக செய்து, இப்போது நியாய விலைக் கடைகளுக்கும், அதேபோல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கும், அதேபோல் காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை பணியாளர்களுக்கும், இலங்கை அகதிகளுக்கும் இப்படிப் பட்ட அனைவருக்கும் அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அரசு, நாம் அதிலே ஏற்படுகின்ற நஷ்டத்தைச் சரிக்கட்டுகின்ற அளவுக்கு மானியமும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இது போக நஷ்டம் ஏற்பட்டாலும் இது ஒரு முக்கியமான பணியைச் செய்கின்றது என்ற காரணத்தாலும் இதைத் தனியாரிடம் விடுவது சரியாக இருக்காது. நம்முடைய மக்களவை ஜனநாயக முறைக்கு ஒத்துவராது என்ற காரணத்தாலும் அரசே இதை மேற்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணிப நோக்கத்தோடு நஷ்டம் ஏற்படாமல் அரசே நடத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய டிரான்ஸாக்ஷன் ஆண்டொன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு, முறைப்படுத்துவதற்கு, இதில் நடைபெறும் தவறுகளைக் களைவதற்கு, கடுமையான நடவடிக்கையினை இந்த அரசு எடுத்து வருகின்றது. இதிலே தவறுகள் நடைபெறுகின்றன என்பது அரசுக்குத் தெரிந்து அதிலே எந்தெந்த இடங்களில் தவறு நடைபெறுகிறது ; இதற்கு அதிகாரிகள் யார் உடந்தையாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் கண்டுபிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இப்போது முயற்சி செய்து கொண்டு இருக்கின்றோம். ஆக, நட்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்கு என்ன வழிவகைகள் உண்டோ, அத்தனையும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 675, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

675—

## புதிய கரும்பு வகைகள் கண்டுபிடிப்பு

*4460—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு வேளண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் தரக்கூடியதும், சர்க்கரைச் சத்து அதிகம் உள்ளதுமான புது கரும்பு இரகங்களை கோவை ஆராய்ச்சிப் பண்ணையில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன வகைக் கரும்புகள் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.



### விவர அறிக்கை

(அ) மற்றும் (ஆ) மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் கரும்பு ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அவை கடலூர், சிருகமணி மற்றும் மேலாளத்தூர். இம்மூன்று கரும்பு ஆராய்ச்சி நிலையங்களும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. மேற்கண்ட மூன்று கரும்பு ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து கண்டுபிடிக்கப்படும் புது ரகங்களை, ரகங்கள் வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப்படுகின்றன. 1991 மற்றும் 1992ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட புது ரகக் கரும்புகளின் விவரம் கீழே வருமாறு :—

*1991 :*

இவ்வாண்டு கோ. க. 91061 (சி. 82059) என்ற ரகம் அதிக விளைச்சலும் அதிக சர்க்கரைச் சத்தும் உள்ள ரகமாகக் கருதி, ரகங்கள் வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ரகம் முன்பட்ட நடவிற்கு ஏற்ற ரகம் ஆகும்.

*1992 :*

இவ்வாண்டிற்கு கோ. 8362 மற்றும் கோ.க. 92061 என்ற ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கோ. 8362 ரகம் நடுபட்டம் மற்றும் பின்பட்ட சாகுபடிக்கு ஏற்ற ரகமாகும். இந்த ரகத்தில் சர்க்கரைச் சத்து மற்றும் மகசூல் கோ. 6304 என்ற ரகத்தைவிட அதிகமாக உள்ளது. கோ.க. 92061 என்ற ரகம், மிகக் குறைந்த வயதுடைய ரகமாக, ரக வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது.

2. கோயம்புத்தூரில் மாநில அரசின் கீழ் செயல்படும் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை ஏதும் இல்லை. தவிர மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும் தேசிய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் கரும்பு இனவிருத்தி நிலையம் ஒன்று கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திலிருந்து புதுரகக் கரும்புகள் ஏதும் வெளியிடப்படுவதில்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எப்படி நெல்போன்ற உணவு தானியங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறதோ அதுபோன்று இன்று சர்க்கரையும் நாட்டிலே ஒரு முக்கியமான உணவுப் பொருளாக விளங்குகிறது. அந்த உணவுப் பொருளை வழங்குவதோடு, இன்று சர்க்கரையை உற்பத்தி பண்ணக்கூடிய கரும்பு வகைகள், நெல் போன்று, உயர்ந்த ரக விளைச்சலாக விளைந்தால்தான் அரசாங்கத்திற்கு அதனால் வருமானமும் விவசாயிகளுக்கு வருமானமும் வருவதாக இருக்கும். அண்மையிலே கண்டுபிடிக்கப்பட்ட கரும்புகள், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்

30 ஆண்டுகளுக்கு முன்பு, அன்றிருந்த நெல் ஒரு டன்னாக, சராசரியாக ஒரு ஏக்கருக்கு இருக்கிறது. என்றால், அது இன்று 2 டன்னாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, கரும்பு 40 டன்னாக 20 ஆண்டுகளுக்கு முன்பு விளைந்த கரும்பு தான். தமிழ் மாநிலத்திலே 40 டன்னாகத்தான் இன்றும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதை விட உயர்ந்த ரகக் கரும்பு, அதிக சர்க்கரை தரக்கூடிய 671, 63.04 போன்ற கரும்புகள் எல்லாம் இன்று பல்வேறு இடங்களிலே அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. வியாதிகளும் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அதிக விளைச்சல் தரக்கூடிய கரும்பும் சர்க்கரைச் சத்து அதிகம் தரக்கூடிய கரும்பும், இன்னும் அந்தந்த ஆலைகளுக்கு ஏற்ப கண்டுபிடித்து, அந்த இடங்களில் மண் பரிசோதனை செய்து, அது வழக்கத்தில் கொண்டு வரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 3 இடங்களிலே கரும்பு ஆராய்ச்சி மையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. 1991 ஆம் ஆண்டு கோ.கா. 9106 என்ற ரகமும், 1992 ஆம் ஆண்டிலே கோ. 8362 மற்றும் கோ.கா. 92061 என்ற ரகமும் பயிரிடப்பட்டுள்ளது. இப்போது கரும்பு உற்பத்தியிலே ஒரு விவசாயிக்கு அதிக மகசூல் கிடைக்க வேண்டுமென்பதும் அதனைப்போல ஆலைகளுக்கு அந்தக் கரும்பிலே இருக்கக்கூடிய சர்க்கரைச் சத்தும் கூடுதலாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே ஆராய்ச்சி மையங்கள் தொடர்ந்து பரிசோதனைகளை நடத்தி வந்துகொண்டிருக்கின்றன. விரைவிலே ஒரு நல்ல முடிவினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் பொது மக்களுக்கும் இந்தத் துறை வழங்கும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கரும்பு அடிப்படை விலையிலே சில கட்டுப்படியாகாத விவசாயிகள் இருந்தாலும்கூட, அதிக விளைச்சலைத் தரக்கூடிய கரும்பைக் கண்டுபிடித்தால், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல விவசாயிகளுக்கு மட்டுமல்ல, கரும்பால் இந்த அரசுக்கு ஒரு கணிசமான, ஒரு மிகப் பெரிய வருமானம், கிடைக்க இருக்கிறது. அந்தக் கரும்புகளெல்லாம் புழக்கத்திலே இல்லாத கரும்புகள். அதிகாரிகள் அவைகளை லிஸ்ட்டிலே கொடுக்கிறார்களே தவிர, அவைகள் புழக்கத்திலே இல்லாத கரும்புகள். ஆகவே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, எந்தெந்த ஆலைப்பகுதியிலே எந்தெந்த கரும்பு வரும் என்று ஆராய்ந்து அந்த ஆலை இருக்கின்ற பகுதிகளுக்கு அவைகளை அறிமுகம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு சில ஆலையதிபர்கள் சில இடங்களிலே சர்க்கரை சத்து வருவதை



மட்டும் எடுத்துக்கொள்கிறார்களே தவிர அதிக விளைச்சல் தருவதை அவர்கள் அங்கே அறிமுகம் செய்யமாட்டேன் என்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, அதைச் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைப் பொறுத்தமட்டிலே அவர்கள் பயிரிடக்கூடிய அந்தக் கரும்புப் பயிருக்கு அதிக மகசூல் கிடைக்கப்பெற வேண்டும் என்பதுநியாயமே. ஆனால், அதனைப் போல சர்க்கரை ஆலையைச் சாரந்தவர்கள் தனக்குக் கிடைக்க வேண்டிய கரும்பிலிருந்து அதிக சதவிகிதச் சர்க்கரைச் சத்தைப் பெற வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால், வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டிலே விவசாயிகளுக்கு அதிக மகசூலைத் தரக்கூடிய கரும்பு ரகங்களையும், அதே ரகங்களிலே அதிக சர்க்கரைச் சத்து கொண்டதாகவும் இருக்கவேண்டுமென்ற உயரிய கருத்திலேதான் ஆராய்ச்சி மேற்கொண்டு பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறோம். எனவேதான் வரும் ஆண்டிலேயிருந்து சர்க்கரை ஆலையைச் சார்ந்த அதிகாரிகளும் அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களையும் இணைத்துஅரசும் ஒரு கூட்டுக் கூட்டத்தைக் கூட்டிஅந்தக் கூட்டத்திலே நல்ல முடிவு எடுக்கப்பட்டு கரும்பாக இருக்கின்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு இவ்வாண்டு தமிழகத்தினுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேளாண்மையைப் பொறுத்தவரையில் நீரைச் சிக்கனமாக மட்டுமல்லாமல் மிகச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, சொற்ப நீரைப் பயன்படுத்தி அதிக விளைச்சல் தரக்கூடிய கரும்பு ரகத்தை தமிழ்நாடு அரசினுடைய ஆராய்ச்சி நிலையங்கள் கண்டுபிடித்துள்ளனவா? அப்படியில்லையெனில் அப்படிப்பட்ட ரகத்தைக் கண்டுபிடிப்பதற்கு அந்த ஆராய்ச்சி மையங்களை அரசு கேட்டுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சொட்டு நீர்ப்பாசனத்திலே எந்த வகையான கரும்புகளையும் உற்பத்தி செய்ய முடியும். எனவே சொட்டு நீர்ப்பாசனத்திற்கென்று தனியான ஒரு ரகம் தேவையில்லை. ஆனால் கிடைக்கின்ற நீரைக்கொண்டு அதிக மகசூலைப் பெறுகின்ற வகையில் விவசாயிகளுக்குப் புரட்சித் தலைவியினுடைய அரசு ஊக்கமும் ஆக்கமும் தந்து வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாா ஆலைகள் மட்டுமல்லாமல் அரசு ஆலைகளும்கூட, சர்க்கரைக்கு அதிகமாக வருகின்ற கரும்பைத்தான் அறிமுகம் செய்கிறார்கள். உதாரணத்திற்கு தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற குருங்குளம் அண்ணா சர்க்கரை ஆலையில் இந்த ஆண்டு நடவு செய்யப்பட்ட கரும்பு அனைத்தும் 35 டன்னிலிருந்து 40 டன்தான் விளைச்சல் தந்திருக்கிறது. எனவே, கரும்பை நிறுத்துகின்ற நிலை, இந்த ஆண்டு அதிகமாக இல்லாத அபாயம் தோன்றியிருக்கிறது. இதனை அரசு அறியுமா? இதனைப் போக்குகின்ற விதத்தில் விளைச்சல் அதிகம் கொடுக்கின்ற புது ரகக் கரும்புகளை அறிமுகம் உடனடியாகச் செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு நான் ஏற்கெனவே கூறிய பதிலிலே விடையிருக்குமென கருதுகிறேன். அரசைப் பொறுத்த மட்டிலே விவசாயிகளுக்கு அதிக மகசூல் தரக்கூடிய கரும்பு ரகங்களை உற்பத்தி செய்வதோடு ஆலை நிர்வாகத்திற்கும் சர்க்கரைச் சத்து சற்றுக் கூடுதலாக இருக்க வேண்டுமென்றஇரண்டு குறிக்கோள்களையும் கொண்டுதான் ஆராய்ச்சி மையங்கள் கரும்பினை பரிசோதனையிலே உருவாக்கி கொண்டிருக்கின்றன. மிக விரைவிலே நல்லதொரு முடிவினை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு இந்தத் துறை வழங்குமென்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 676. திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்

676—

*5352—திரு. பி.வி. இராஜேந்திரன்.—

மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் குழந்தைகள் ாப்பகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?





மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதிகளில் மை
யங்கள் அமைப்பது குறித்து கருத்தில் வைத்துக்கொள்ளப்
படும்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை
வரவர்களே, ஆதிதிராவிட மக்களுடைய மேம்பாட்டுக்காக
மைய அரசு மிகப் பெரிய நிதியை ஒதுக்கீடு செய்து சிறப்புத்
திட்டங்களையும் அதே முன்னடுக்கு வைத்து, மாநிலங்களுக்கும்
பரிந்துரை செய்திருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு சமூக நலத்
துறை அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தைக்கொண்டு
குழந்தைகள் காப்பகம் திறக்கப்படும் என்று சொன்னார்கள். அது
எவ்வளவு விரைவில் திறக்கப்படும்? அல்லது இன்றைக்குக் கல்விக்
கூடங்களையெல்லாம்ஆதிதிராவிடர் நலத்துறை அப்பகுதியில் வசிக்
கின்ற ஆதிதிராவிட மக்களுக்காகவே, தனியாகவே பள்ளிக்கூடங்
களையெல்லாம் திறந்து நடத்துவதைப்போல, சமூகநலத்துறை
யோடு இணைந்து ஆதிதிராவிடர் நலத்துறையும் இதனை ஏற்று
நடத்தயிருக்கிறதா அல்லது சமூக நலத்துறை மட்டும்தான்
அதை நடத்துமா என்பதை உங்கள் வாயிலாக அறிந்து கொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு கிராமப் பகுதிகளிலும்
40-- லிருந்து 70 வரையிலான 2 முதல் 4 வயதுக்கு உட்பட்ட
குழந்தைகள், 2 வயதுடைய குழந்தைகள் 30 பேர் மற்றும் 30
கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் இணைந்து
100 பேர்கள் இருந்தால் அப்பகுதியில் ஒரு குழந்தை
கள் நல மையம் துவக்கப்படுகிறது. இதற்குக் குறைந்த குழந்தை
கள் உள்ள பகுதிகள் பக்கத்தில் அமைந்துள்ள குழந்தைகள்
மையத்துடன் இணைக்கப்படுகின்றன. தமிழ்நாடு ஊட்டச் சத்துத்
திட்டத்தில் அமுல் நடத்தப்படும் மாவட்டங்களில் கூடுதலாகப்
புதிதாகச் சத்துணவு மையங்கள் தேவைக்கேற்ப அமைக்கப்படு
கிறது. அதைப்போல ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதிகளிலும்
இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கும் என்று சொன்னால் புதிய
மையங்களை அமைக்க சமூக நலத்துறை தனித்தன்மையோடு
ஏற்பாடு செய்யும்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவிலே
எந்தெந்தப் பகுதிகளிலே, எந்தெந்த தாலுக்காக்களிலே, அதிக
ான ஆதிதிராவிடர்கள் வசிக்கிறார்களோ, அங்கேயெல்லாம்

மத்திய அரசின் உதவியோடு 'Integrated child Developement scheme' என்ற திட்டத்தை நாம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? இதுவரைக்கும் எத்தனை யூனியன்களிலே இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த 3, 4 ஆண்டுகளிலே நிறைவேற்றுகிற வகையிலே, திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், இரண்டாண்டுகளுக்குள்ளேயே முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். 1991-92-இல் மதுரை, திண்டுக்கல், அண்ணா, சேலம், பெரியார் மாவட்டங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. 1992—93 இல் தர்மபுரி, தென்னாற்காடு, இராமநாதபுரம், பசும்பொன், காமராஜர் ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பீட்ரிக் டிசோசா

Dr. BEATRIDH D. SOUZA: Hon Speaker Sir, my question is relevant. I would like to know whether the Government has taken steps to improve the child care centre in the Secretariate. I have visited it. That is a deplorable condition.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையில் இருக்கிற அந்தக் குழந்தைகள் காப்பகம், இரண்டாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவ்வாறு சீர்கெட்ட நிலைமைக்குப் போயிற்று. இப்போது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 677, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

## சத்துணவுக்கூடம் அமைத்தல்

*7783—செல்வி கோ. மல்லிகா ;

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் புவனகிரி பேரூராட்சியில் 7-வார்டு கள்ளிக்காட்டு காலனிக்கு சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு, கட்டித் தருவதற்கு ஆவன செய்யும்.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் மேற்கொள்ளப்பட்டு விட்டதா? அவர்களே, இதற்கான ஆய்வு சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடம் இந்த நிதியாண்டிலேயே என்பதை அறிய விரும்பு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி பேரூராட்சி, ஏழாவது வார்டு, கள்ளிக்காட்டு காலனிக்கு 1992-93 நிதியாண்டில் புதியக் கட்டிடம் கட்டுவதற்குரிய ஆய்வுகளைச் செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 678. திரு. எம். பெரியவீரன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

## சத்துணவுக் கூடங்கள் புதுப்பித்தல்

678

*8835— திரு. எம். பெரியவீரன் :

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பெரியகுளம் தொகுதி முதல்வர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் நடைபெறும் கட்டிடங்கள் புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொண்டுள்ளம் படைத்த தொழில் அதிபர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் சத்துணவு மையக் கட்டிடங்களைப் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றது. 1992-93 ஆம் ஆண்டில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கோடி ரூபாய் நிதியை, மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, மாநிலத்தில் இருக்கிற அனைத்து மையங்களிலும், தேவையைக் கருத்தில் கொண்டு, இயன்ற அளவுக்கு பெரியகுளம் தொகுதியில் உள்ள சத்துணவு மையக் கட்டிடங்களைப் புதுப்பிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

[1992 மே 5

திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதியில் இரண்டு யூனியன்கள் உள்ளன. அந்த இரண்டு யூனியன்களிலும் எத்தனை சத்துணவுக் கூடங்கள் உள்ளன? எந்தெந்தக் கூடங்களில் பணிசெய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு யூனியன் களிலும் எந்த அளவிற்கு 'சத்துணவுக் கூடங்கள் பழுது பட்டிருக்கின்றன என்கிற' குறிப்பினை, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்பு குறிப்புகள்

(அ) சென்னை-விழுப்புரம் சாலையில் மதுராந்தகம் அருகே கடுமையான விபத்து ஏற்பட்டுள்ளது குறித்தும் அந்த சாலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை-விழுப்புரம் சாலையில், மதுராந்தகம் அருகே அடிக்கடி பஸ் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும், அந்த விபத்துக்கள் குறித்தும் குறிப் பாக நேற்றையதினம் ஒரு மிகக் கடுமையான விபத்து ஏற்பட் டுள்ளது என்பது குறித்தும், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கோரியுள்ளார்கள் (குறுக்கீடு).

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸீரோ ஹவர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஸீரோ ஹவர்தான் ; உங்களுக்கு முன்னர் கொடுத்தது இது. திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கேட்டுக்கொள்கிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து, ஒருவர் இறந்து வேனிலே கொண்டு வருகிறபோது, லாரிக்கும்—வேனுக்கும் ஏற்பட்ட மோதலில்



1992 மே 5]

மேலும் 4 பேர் இறந்துபோய் விட்டார்கள். மேலும், 10 பேர் காயமடைந்து, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இது போன்று, லாரியால்தான் எல்லா இடங்களிலும் நடக்கின்ற விபத்துக்கள், நடந்து கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம், முன்பே நான் குறிப்பிட்டதுபோல, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததுபோல, லாரி ஓட்டுநர்கள் அந்த லாரியை ஓட்டாமல், லாரியை ஓட்டப் பழகுகிறவர்கள் ஓட்டுகிற காரணத்தால்தான், இதுபோன்ற விபத்துகள் ஏற்படுகின்றன. அந்த விபத்துகளைத் தவிர்ப் பதற்கு, லாரி ஓட்டுநர்கள்தான் அந்த வண்டியை ஓட்டு கிறார்களா? அல்லது, கிளீனர்கள் அந்த வண்டியை ஓட்டு கிறார்களா என்பதைப் பரிசீலிப்பதற்கு ஒரு தகுந்த நட வடிக்கையை அரசு மேற்கொள்ளுமா? அதேநேரத்தில், இறந்து போன 4 பேர்களுக்கும், அரசு, முதல்வர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்குமா? அதற்கான அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்கு வரத்து துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்கள் அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்கும் பிறகு விழுப்புரத்திலிருந்து சென்னை வரையிலும் வருகின்ற பாதைகளை அகலப்படுத்து வதற்காக பொதுப்பணித் துறையின் மூலமாக, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இன்றைக்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, விபத்துகளைத் தடுப்பதற்காக விரைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிற ஒரு அரசாக புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, இறந்த ஒருவரை எடுத்து வருகிற நேரத்தில் லாரி வந்து மோதியதன் வாயிலாக, நான்கு பேர்கள் உயிர் இழந்தார்கள் என்பதையும், பத்து பேர்கள் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பதையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஓட்டுனர்தான் வண்டியை ஓட்டவேண்டும் என்று அரசு கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. அதேபோல், ஓட்டுநர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்களா என்பதையும் அவர்களுக்கு அந்த உரிமம் வழங்குகின்றபோது அவர்களைத் தேர்வு செய்கின்ற நேரத்தில் கடுமையான சோதனைக்குப் பிறகு

அவர்களுக்கு இப்போது லைசென்ஸ் வழங்கப்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல சென்னையிலிருந்து விழுப்புரம் வரையிலும், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு நெடுஞ்சாலைத் துறையில் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசோடு பேசி, இன்றைக்கு விரைந்து அந்தப் பணிகளை ஆற்றுவதன் வாயிலாக, சென்னையிலிருந்து செல்வதற்கு இரண்டு வழித் தடங்களும், திரும்பி வருவதற்கு என்று சொல்லப்படுகிற அளவுக்கு four lane இரண்டு வாகனங்கள் ஒரு வழியாகவும், எதிர்புறத்திலே இரண்டு வாகனங்கள் ஒரே நேரத்தில் வருவதற்கு அந்தச் சாலைகளை விரிவுப்படுத்திக் கொண்டிருக்கிற சூழ்நிலையை இன்றைக்கு நாம் பார்க்கின்றோம். அதேபோல, போக்குவரத்து நெரிசல் ஏற்படாது இருக்கின்ற வகையில் சாலையோரங்களிலே போடப்பட்டிருக்கிற பல்வேறு ' என்குரோச்மெண்ட் ' என்று சொல்லப்படுகிற வீடுகள், கடைகள் போன்றவைகளை அகற்றி, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்பிறகு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு எந்த எந்தப் பகுதிகளை, சாலைகளை அகலப்படுத்த வேண்டுமோ அந்த அந்தப் பகுதிகளில் அகலப்படுத்துவதற்காக, எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு குறுகிய காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். விரைந்து செயலாற்றுகின்ற ஒரு அரசாக, நெடுஞ்சாலைத் துறையில் சாலைப் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருப்பதற்காக நடவடிக்கைகளை ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் ' சாலைப் பாதுகாப்பு வாரவிழா ' என்று சொல்லி தமிழகம் முழுவதும் இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். விபத்துக்களைக் குறைப்பதற்காக நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். அதேபோல, ஓட்டுநர்கள் மாணவர்கள், சாலைகளிலே மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்புகள் குறித்தும் அறிவுரைகள் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதேபோல, திரைப்படங்கள் மூலமாக சாலைகளில் எப்படி நாம் நடந்து செல்வது என்பதையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, ஓட்டுநர் உரிமம் வழங்குகின்ற போது, அதிலே கடுமையான சோதனைகளுக்குப் பிறகுதான் உரிமம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். குடிபோதையிலே யார் வந்தாலும் உடனடியாக அவர்களைக் கைது செய்து நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, விபத்துக்களைத் தடுக்கின்ற வகையில் இந்த அரசு விரைந்து பல்வேறு நடவடிக்கைகளை



மேற்கொண்டதன் வாயிலாக இந்தியத் திருநாட்டில் இருக்கின்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இந்த ஆண்டைப் பொறுத்தவரையிலும் விபத்துக்கள் குறைந்திருக்கிற மாநிலமாக நம்முடைய மாநிலம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆற்றல் மிக்க முதலமைச்சராக இருக்கிற நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு நல்ல ஆலோசனைகளைப் போக்குவரத்துத் துறைக்கும், வாகனங்களை எப்படி இயக்க வேண்டும் என்பதையும் கருத்திலே கொண்டு நல்ல அறிவுரைகளை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதை ஏற்று இந்தத் துறை சிறப்பான முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிற காரணத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளைத் தடுக்கின்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இவர்களுக்கு முதல்வருடைய நிதியிலிருந்து உதவிகள் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். அது குறித்து முதல்வரோடு பேசி, அதற்குப் பிறகு அதை அறிவிக்கிறேன் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வேலூர் பகுதியில் நியாயவிலைக் கடைகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. சி. ஞானசேகரன், திரு. என். ஜி. வேணுகோபால் ஆகியோர், வேலூர் பகுதியில் நியாய விலைக் கடைகளிலிருந்து அத்தியாவசியப் பொருள்கள் கடத்தப்பட்டது பற்றிய ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை எழுப்பக் கேட்டுக் கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10–45

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் கஸ்பாவில் உள்ள அமிர்தம் நியாய விலைக் கடையிலேயும் அதே போல தாராபடவேட்டலில் உள்ள நியாய விலைக் கடைகளிலும் போலி பில் போட்டு விற்பனையாளர்கள் ரேஷன் கார்டுகளில் இருக்கக்கூடிய அரிசிகளை மூட்டை மூட்டையாகக் கடத்திச் சென்று கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்தும், அதே போல ரேஷன் கார்டுகள் மண்ணெண்ணையை பேரல் பேரல்களாக வெளி மார்க்கெட்டில் விற்றும் பகல் கொள்ளை அடித்து வருகிறார்கள்.

ஏழையெளிய மக்களுக்காக நல்ல நோக்கத்தோடு குறைந்த விலையிலே தமிழக அரசால் அனுப்பப்படுகிற அரிசி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் கள்ள மார்க்கெட்டுக்குப் போய்விடுவதால், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழையெளிய மக்கள் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள். வேலூரில் சங்கரன்பாளையம் பெட்ரோல் பங்க் அருகில் ரோடு ஓரம் இரண்டு அரிசி மூட்டைகள், ரேஷன் கடை அரிசி மூட்டைகள் கடத்தப்படுவதற்காகக் கொண்டுவரப்பட்ட போது மக்கள் அதைப் பார்த்து அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். இப்படி பல நியாய விலைக்கடைகளுக்கு அரசால் அனுப்பப்படும் அரிசி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை போலி பில் போடப்பட்டு குடும்ப அட்டைகளுக்கு வழங்கியது போல மோசடி செய்து கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்துகொண்டு இருக்கிறார்கள். அப்படி கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருக்கின்ற விற்பனையாளர்கள் மோசடி வேலையினால் மக்கள் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிகழ்வினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மோசடி வேலையில் ஈடுபட்டிருக்கின்ற அந்த விற்பனையாளர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்களை உடனடியாக வேலை நீக்கம் செய்து நாணயமான புதிய விற்பனையாளர்களை அந்த இடத்திலே அரசு நியமனம் செய்யுமா? கடத்தலைத் தடுக்க விழிப்புப் பணிகளை ஆங்காங்கே அரசு உடனடியாக நியமனம் செய்யுமா என்று மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்ன இந்த விஷயம் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஏற்கனவே இரண்டு விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. விற்பனையாளர் மட்டுமல்லாமல், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை யார் நடத்தி வருகிறார்களோ அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். விழிப்பு குழு அமைக்கப்பட்டு விட்டது. சட்டமன்ற உறுப்பினர்களும் ஏற்கனவே விழிப்புக் குழுவிற்கான உறுப்பினர்கள் பட்டியலைக் கொடுத்து இருக்கின்றார்கள். ஆகவே அந்த விழிப்புக் குழுவிலே இருப்பவர்களும் கொஞ்சம் விழிப்பாக இருந்து இதைக் கவனிப்பார்களேயானால் அரசுக்கு உதவியாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதியிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்கு அரசுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.



<u>(இ) உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை அறிவிக்கை குறித்து.</u>

<u>திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரிமை மீறல் பிரச்சினைப் பற்றி..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து சில பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. உங்களுடைய உரிமை மீறல் பிரச்சினை என்னுடைய ஆய்விலே இருக்கிறது. என்னுடைய அறைக்கு வரவும். சம்பந்தப்பட்ட உறுப்பினரையும் உங்களையும் அழைத்து வைத்துப் பேச இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. என்னுடைய அறைக்கு வாருங்கள்.

<u>திரு. ஆர். சிங்காரம் :</u> இங்கே சொல்லிவிடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை, என்னுடைய அறைக்கு வாருங்கள். அங்கே வைத்து உங்களையும் சம்பந்தப்பட்ட உறுப்பினரையும் வைத்துப் பேச இருக்கிறேன். (குறுக்கீடு) போதும். போதும். அது அவையிலே வேண்டாம். (குறுக்கீடு) நான் சொன்னபிறகு நீங்கள் எழுப்பக்கூடாது. நான் எடுக்கவில்லை என்று சொல்கிறபோது, நீங்கள் எழுப்பக் கூடாது. உட்காருங்கள்.

<u>(ஈ) இலங்கை அகதிகள், அவர்கள் விருப்பத்திற்கு மாறாக வெளியேற்றப்படுவது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நடைபெறும் போராட்டம் குறித்தும், அத்தகைய நடவடிக்கை வன்முறையைத் தூண்டுவதாகவும், இலங்கைப் போராளிகளை ஊக்குவிப்பதாகவும் அமைந்திருப்பது குறித்தும்.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன் அவர்களும் திரு. சி. ஞானசேகரன் அவர்களும் இலங்கைத் தமிழர்களை, அவர்களுடைய விருப்பம் இல்லாமலேயே வெளியேற்றுகிற பிரச்சினை குறித்து வெளியிலே ஒரு போராட்டம் நடப்பது குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை எழுப்ப அனுமதி அளித்திருக்கிறேன். திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே விருப்பம் தெரிவித்து இலங்கை செல்ல விரும்பும் இலங்கை தமிழ் அகதிகளை அனுப்புவதில் கருத்து வேறுபாடு இல்லை. சில முகாம்களில் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக இலங்கைக்கு அனுப்புகிறார்கள் என்கின்ற புகார் வருகிறது. அதை அரசு கவனித்து ஆவனசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இலங்கையில் கலவரமாக உள்ள இந்தச் சூழ்நிலையில் இந்த இலங்கை தமிழ் அகதிகளை இங்கிருந்து அனுப்புவதை விரைவுபடுத்துவதன் மூலம் உலகு எங்கிலும் வாழக்கூடிய இலங்கை தமிழ் அகதிகள், குறிப்பாக ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா போன்ற இடங்களில் பணியாற்றுகின்றவர்கள்கூட அந்த நாடுகளிலேயிருந்து இந்தியாவை உதாரணமாகக் காட்டி திரும்ப அனுப்பப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலையைச் சுட்டிக்காட்டி இலங்கைத் தமிழர்கள் என்று இருக்கின்ற எல்லா இயக்கங்களை அனுப்புவதை, இந்திய அரசு மறுபரிசீலனை செய்து தற்காலிகமாகவாவது நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகையினால் நாம் இந்தப் பிரச்சினையை உலகக் கண்ணோட்டத்தோடு பார்த்து அதனால் ஏற்படும் விளைவுகளையும் சிந்தித்துப் பார்த்து இந்தத் தமிழ் அகதிகளை அனுப்புவதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று இந்த அரசு இந்திய அரசை வற்புறுத்த வேண்டுகிறேன். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் முன்பு பாட்டாளி மக்கள் கட்சி இன்றைய தினம் அமைதியாக ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறது. இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமான மனிதப் பற்று உள்ள பிரச்சினை. இன்றைய தினமணி ஏடுகூட தன்னுடைய தலையங்கத்திலே இந்த அகதிகளை அனுப்புவது பற்றி சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆகவே, நமது அரசு இந்திய அரசிடத்திலே எடுத்துப் பேசி இதை நிறுத்தி வைப்பதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கொடுத்திருப்பது திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் எழுப்பியிருக்கிற அந்தக் கோணத்தில் இல்லாமல், இதன் காரணமாக நடைபெற்ற, அவர் சொன்ன அந்தப் போராட்டம் வன்முறையைத் தூண்டுகிற வகையிலும் இலங்கைத் தீவிரவாதிகளுக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலும் இருக்கிறது, எனவே, அதைத் தடுக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறார் (குறுக்கீடு) இல்லை, நான்தான் சொல்லிவிட்டேனே. உங்கள் கருத்து அது தானே. அது வன்முறையைத் தூண்டுகிற வகையிலே இருக்கிறது. இலங்கைப் போராளிகளுக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே இருக்கிறது என்று படிவத்திலே இருப்பதை அப்படியே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர்.





*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் ஏற்பட்ட கலவரச் சூழ்நிலை காரணமாக அங்கே வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோது பெரும்பாலும் யாழ்ப்பாண பகுதியைச் சேர்ந்த தமிழர்கள் தங்களுடைய உயிரையும், தங்களுடைய உற்றார் உறவினர்களையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது இந்தியாவுக்கு அவர்கள் அகதிகளாக வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த நிலையில் மனிதாபிமானத்தின் அடிப்படையிலே மட்டுமல்லாமல் கலாசாரம் மற்றவற்றின் கீழ் தமிழர்களுக்கும், யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்ற தன்மையின் அடிப்படையிலேயும் அவர்களிடத்திலே இரக்கம் காட்டி, அகதிகளாக வருகின்ற அவர்களை, அடைக்கலம் புகுந்தவர்களை, தஞ்சம் புகுந்தவர்களை ஏற்று அவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற உணர்வில் மத்திய அரசும், மாநில அரசும் முறையாகச் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையிலே அவர்களைக் காப்பாற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு வருகிறது. ஆகவே, அந்த அகதிகளுக்கு ஆகின்ற செலவுகள், மற்றைய பாதுகாப்பினை மத்திய அரசே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு நடத்தி வருகின்ற பாங்கிலே தான் இன்னமும் அவர்களை வைத்துக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் கிட்டத்தட்ட 2 லட்சத்து சில்லரை பேர் அகதிகளாக இங்கே பல்வேறு முகாம்களில் இருக்கிறார்கள். அவர்களைக் கட்டாயப்படுத்தி மீண்டும் இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்ற எண்ணம் மாநில அரசுக்கும் இல்லை, மத்திய அரசுக்கும் இல்லை.

ஆனால் அவர்களில் பலபேர் அங்கே இருக்கிற சூழ்நிலையையொட்டி தாங்கள் தங்கள் தாயகக் குடியிருப்புக்கு செல்ல வேண்டுமென்ற விருப்பத்தினைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஏன் என்றால் இப்போது அவர்கள் இங்கே அகதிகளாகத் தான் இருக்கிறார்கள். இவர்கள் தொடர்ந்து பல ஆண்டுக் காலம் இருந்தாலும் அகதிகளாகவே என்றும் அவர்கள் இருக்க முடியாது. ஏன் என்றால் அவர்கள் அங்கே நிலபுலங்களை விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். பலபேர் வீடுகளை விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். தங்களுடைய கடைகளை எல்லாம் விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். ஒரு சுமூக சூழ்நிலை ஏற்பட்டால் திரும்பிச் சென்று அந்த நிலங்களைக் கையகப்படுத்தவும், அந்தக் கடைகளை மற்றவைகளை எல்லாம் பெற்று தங்களுடைய வாழ்க்கையை நடத்தி, வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளவும் முடியும் என்ற காரணத்தால்தான் சில பல இடங்களில் ஏற்பட்ட சூழ்நிலையையொட்டி திரும்பிப் போக வேண்டுமென்று விருப்பம் தெரிவிக்கின்ற வகையில் யார் யார் போக வேண்டுமென்று விரும்புகின்றார்களோ அவர்களை அங்கே அனுப்பி வைப்பதற்கான எல்லா செலவுகளையும், போக்குவரத்துச் செலவு, கப்பல் செலவு உட்பட எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு, அந்த

வசதியையும் செய்து தந்து, அவர்கள் கைச் செலவுக்கு என்று பணத்தையும் கொடுத்து அனுப்புகின்ற வகையிலே இன்றைக்கு மத்திய அரசு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. அவர்கள் விரும்பாத வகையில், நாங்கள் இன்றைக்கு யாழ்ப்பாணத்துக்கு அந்தப் பகுதிக்கு, எங்கள் ஊருக்கு செல்ல விரும்பவில்லை, இங்கேயே இருக்கிறோம் என்று சொல்கிற யார் ஒருவரையும் கட்டாயப்படுத்துகிற நிலையில் மத்திய அரசும் இல்லை, மாநில அரசும் இல்லை. அப்படி ஏதாவது குறைபாடுகள், சில பல அதிகாரிகளிடத்தில் ஏற்பட்டிருக்கிறது என்கின்ற தகவல் வருமானால் அதற்காக நடவடிக்கையை மத்திய அரசும், மாநில அரசும் எடுக்கும். எல்லோரையும் கட்டாயப்படுத்தி அனுப்ப வேண்டுமென்ற எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை என்பதையும், அதையொட்டி தான் மாநில அரசுக்கும் இருக்கிறது என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, எவ்வளவு காலத்திற்குள் நல்ல சூழ்நிலை ஏற்படுகின்ற ஒரு நிலை வருகிறதோ அதுவரை இந்த அகதிகள் இங்கேயே வைத்துச் காப்பாற்றப்படுவார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவர்கள் அத்தனை பேரும் என்றைக்கேனும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டு இலங்கையில் வாழ்வதற்கு உகந்த நிலைமைகள் ஏற்பட்டு திரும்பிச் செல்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுகிறபோது அவர்களாகவே விரும்பி திரும்பிச் செல்கிற நிலை ஏற்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய விருப்பம் ஆகும். அதைத்தான் இன்றைக்கு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் செய்தி வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சி இந்தக் கருத்துக்களை வலியுறுத்துவதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துவதாகச் சொல்கிறார்கள். ஆர்ப்பாட்டம் என்றால் அதில் வன்முறை இருக்காது என்று கருதுகிறேன். மறியல் என்றால்தான் வன்முறை வரும். ஆகவே, அவர்கள் ஆர்ப்பாட்டம் என்று சொல்லியிருப்பதன் காரணமாக குரல் எழுப்புவார்கள். எழுப்புகிற குரல் வன்முறைக்கு போகாதுஎன்ற நம்பிக்கையில் நாம் இருக்கலாம். அப்படி ஆர்ப்பாட்டங்கள் பல நடக்கின்றன. அதன் காரணமாக விளைவுகள் வேறு விதமாகமுற்றாது என்கிற நம்பிக்கை இருக்கிற காரணத்தால் இதுபற்றி இந்த அவை கவலைப்படவேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் பிரச்சினை. (குறுக்கீடு) என்ன பிரச்சினை? திரு. பீட்டர் அல்போன்ஸ்.



(உ) யாதவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி மறியல் செய்த போது அவர்களில் சிலர் கைது செய்யப்பட்டது குறித்து.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாதவர் மகாஜன. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி என்னுடைய கவனத்திற்கு சில உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய கவனத்திற்கு திரு. சிங்காரம், திரு. ஞானசேகரன், திரு. பாலகிருஷ்ணன், திரு. தெய்வநாயகம், திரு. கண்ணன், திரு. அமர்நாத், திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றிய அறிவிப்பு, நான் அவைக்கு வந்ததற்குப் பிறகு சிலர் கொடுத்தது. அவைக்கு வருவதற்கு முன்பு சிலர் சொன்னார்கள். இது ஒரு சமுதாயத்தினுடைய பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், (குறுக்கீடு) அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள், அதுபற்றி நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அரசு பதில் சொல்கிற வாய்ப்பை உண்டாக்கித்தான் செய்ய முடியும். (குறுக்கீடுகள்) சரி, அமருங்கள். இது பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிற திரு.. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) திரு. சிங்காரம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) தங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். தினசரி பல பிரச்சினைகள் பற்றிப் பல உறுப்பினர்கள் கொடுக்கிறார்கள். திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் விரிவாகப் போகாமல், கோரிக்கையை மட்டும் அரசாங்கத்திற்கு வைத்து, முடிக்கலாம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தமிழகம் முழுவதும் யாதவர் பெருமக்கள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக ஆயிரக் கணக்கானவர்கள் கைதாகி இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை அத்தனையும் நியாயமான கோரிக்கைகள். அவர்கள் 5 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற மிகப் பிற்பட்ட சமுதாயத்தில் தங்களையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பரம்பரையாக ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்த அந்தச் சமுதாயம் இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்களில் தங்களுக்கு முழுப் பங்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப்போல சென்னை நகரம் போன்ற பெரிய நகரங்களில் பால் மாட்டை மட்டும் வைத்துக் கொண்டிருப்பவர்களை அந்த நகரங்களை விட்டே வெளியேற்ற வேண்டும் என்ற சட்டம் அரசிடம் இருக்கிறதோ என்ற கவலையோடு இருக்கிறார்கள். வாழ்க்கைப்பட்ட நல்ல கோரிக்கைகளை அவர்களுடைய கோரிக்கைகாக அவர்க்ள் வலியுறுத்துகிறார்கள். அந்தக் கோரிக்கை

களை ஏற்று, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்கு எல்லாவிதமான உதவி களையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கைதானவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தயவு செய்து அரசு உடனடியாக இதைக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பி னார்கள். தங்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று யாதவர் பெருங்குடி மக்கள் நாடெங்கும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வைக்க வேண்டுமென்று கோரிக்கை எழுப்புவது தவறில்லை. கோஷம் போடுவது கூட தவறில்லை. ஆர்ப்பாட்டம் நடத்துவது கூட தவறில்லை. ஆனால் மறியல் நடத்தி, சட்டத்திற்குப் புறம்பாகச் செல்கின்றபோது, வன்முறைகளில் ஈடுபடுகின்றபொழுது கைது செய்யப் படவேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்து, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறதே தவிர, கோரிக்கை வைப்பதில் தவறில்லை. கோரிக்கையை ஒருவர் வைத்து, ஆர்ப்பாட்டம் நடத்தினால். மறியல் நடத்தினால், உடனே அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட எல்லா வகுப்பினரும் கூட அதே கோரிக்கைகளைத்தான் வைத்திருக்கி றார்கள். கிட்டத்தட்ட எல்லா பிற்படுத்தப் பட்ட வகுப்பினரும் தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மிகவும் பிற் படுத்தப்பட்ட மக்கள் அத்தனை பேரும் ஷெட்யூல்ட் வகுப்பில் தங்களைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பிராமண மகாஜன சங்கத்தினர் தீர்மானம் போட்டிருக்கி றார்கள். செட்டிநாட்டு நகரத்தார் சங்கம் தீர்மானம் போட் டிருக்கிறார்கள். திருநெல்வேலி பிள்ளைமார்கள் எல்லாம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். சைவச் செட்டியார்கள்



எல்லாம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள், தொண்டை மண்டல முதலியார்கள் எல்லாம் தீர்மானம் போட்டிருக்கி றார்கள். தங்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றுதான் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கி றார்கள்.

முற்பகல் 11-00

கோரிக்கை வைப்பதை நான் ஒன்றும் சொல்லவில்லை. கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்ற முடியுமா, அதை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும், எப்போது நிறைவேற்ற முடியும் என்பது தனியாகக் கவனிக்க வேண்டிய ஒன்று. ஆக இப்போது அவர்கள் கோரிக்கை வைத்தார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் கைது செய்யப்படவில்லை. சட்டத்திற்குப் புறம்பாகவும், வேறு பல வகையிலேயும் நடந்ததற்காக அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி அரசு ஆராய்ந்து தக்க முடிவை எடுக்கும். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று குறிப்பிட் டிருக்கிறார்கள். அவர்கள் மீது சாதாரண வழக்குகள் இருந்தால் வழக்கம் போல ஈடுபடுகிற முயற்சியில் ஈடுபட்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் யாதவ சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தமிழகம் முழுவதும் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். மறியலில் ஈடுபட்டார்கள். எனவே கைது செய்யப்பட்டிருப்பதாக அவை முன்னவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் மறியலில் ஈடுபட்டாலும் கூட வன்முறையில் ஈடுபட்டதாகவோ அல்லது சட்டம், ஒழுங்கு கெடுகின்ற வகையில் எந்தவிதமான செயலில் ஈடுபட்டதாகவோ செய்திகள் இல்லை. எனவே அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வதோடு, அவர்களுடைய கோரிக்கைகளை, நியாயமான கோரிக்கைகளைப் பொறுத்த வரையில் பரிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை.

'கரண்ட்' (2—8 மே, 1992) வார இதழ் தலையங்கத்தில் பேரவையையும், உறுப்பினர்களையும் அவமதிக்கிற வகையில் செய்திகள் வெளியிட்டுள்ளது குறித்து.—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயக்குமார் அவர்கள் மே 2 முதல் 8 ஆம் தேதி வரையிலான 'கரண்ட்' வார இதழில் வெளியிடப்பட்டுள்ள தலையங்கம், அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பேரவை உரிமையை மீறியதாக உள்ளன என்றும் இப்பேரவையில் மாண்புமிகு பேரவைத் தலைவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிற கருத்துக்களை விமர்சித்து மிகக் கடுமையான சொற்களால் விமர்சனம் எழுதப்பட்டுள்ளது என்றும், எனவே, இப்பிரச்சினை குறித்து அவையில் எழுப்ப அனுமதி வேண்டுமென்றும் கேட்டு ஓர் அறிவிப்பைக் கொடுத்துள்ளார். அது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கரண்ட்' மே 2—8, 1992 நாளிட்ட வார இதழில் 'DIZZY AS A GOOSE' என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது. அந்தத் தலையங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பற்றியும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பற்றியும், மாண்புமிகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றியும் தரக் குறைவாக எழுதப்பட்டிருப்பது இந்த அவையினுடைய கண்ணியத்தைக் குறைப்பதாகவும், அவையினுடைய உரிமையைப் பாதிக்கும் வகையிலேயும் அமைந்திருப்பதால் நான் இந்த உரிமைப் பிரச்சினையை 'கரண்ட்' வார இதழ் மீதும், அதன் ஆசிரியர் மீதும் கொண்டு வருகிறேன். அதற்கு முன்னதாக அதனுடைய எழுத்துக்கள் காப்பியை அவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிரிலே அமர்ந்திருக்கின்ற தலைவர்களுக்கும் கொடுக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வேலய்யா, அதை வாங்கிக் கொடுங்கள்.



திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'கரண்ட்' வார இதழில் எடிட்டோரியலில் இரண்டாவது பாராவிலே "........the Speaker of the Assembly Sedapatti Muthiah, has the audacity to proclaim inside the House that the Supreme Court's stay on the arrest of former Illustrated Weekly of India correspondents ordered by him just to please the Amma was not binding either on him or the house. The Assembly was so supreme and sovereign inrespect of its decisions, according to him, that no court of law, not even the apex court, could interfere even if its bizarre actions were patently unconstitutional and went against the grain of our domocratic set-up And by ordering the city Commissioner of Police to exeeute the warrant and the Secretary of the Legislative Assembly not to heed the Supreme Court notice, he has done what no one in his position should have—taken the law into his hands. " என்று குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள்.

கான்ஸ்டிடியூஷன் 194 வது பிரிவு சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பற்றி நன்றாகக் கூறுகிறது. அது ஒரு ஸ்பெஷல் புரொவிஷன். சட்டமன்ற உறுப்பினர்களது உரிமையைக் காப்பாற்றுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும். கான்ஸ்டிடியூயன்ட் அசெம்பிளியில் ஆர்ட்டிகிள் 194-ஐப் பற்றி விவாதிக்கின்றபோது டாக்டர் அம்பேத்கர் அவர்கள்; பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றத்தினுடைய உரிமைகள் என்பது 26 டக்கத்திற்கு மேலாக ஒரு நீண்ட லிஸ்ட்டாக அமையும் என்பதால் அதை கான்ஸ்டிடியூஷனில் இணைக்க வேண்டியதில்லை என்றும் அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளை சட்டமன்ற, பாராளுமன்றங்கள் நிர்ணயிக்கலாம் என்றும் கூறி நமது சட்ட மன்றத்திற்கு—ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்-க்குள்ள அனைத்து உரிமைகளும் உண்டு என்று சொல்லியிருக்கிறார். இதைப்பற்றி இங்கிலாந்து கோர்ட் கூட என்ன சொல்கிறது என்றால், as per the Halsbury's Laws of England, Third Edition, volume 28—

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்ப விரிவாக வேண்டாம்; தெரிவித்து இருக்கிறது என்று சொன்னால் போதும்.

[1992 மே 5

திரு. எஸ். ஜெயக்குமார் : "....the control of each House over its own proceedings is absolute and not subject to judicial jurisdiction; and the courts of law will not interefere with the interpretation of a statute by either House so far as the proceedings of the House are concerned. Neither will the courts of law inquire into the reasons for which a persons has been adjudged guilty of contempt and committed by either House, when the order or warrant upon which he has been arrested does not state the causes of his arrest; for in such cases it is presumed that the order or warrant has been duly issued unless the contrary uppears upon the face of it" என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பாராளுமன்ற சட்டமன்றங்களினுடைய இறையாண்மையை இங்கிலாந்து சட்டமன்றத்துறையில் கூட, சுப்ரீம் பவர் சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றிற்கு மட்டும்தான் இருக்கிறது என்பது தெளிவாகிறது. கான்ஸ்டிடியூஷனை எடுத்துக் கொண்டால்கூட நீதித்துறை மீதும், அரசு மீதும், அதிகாரிகள் மீதும் 'ரெஸ்ட்ரிக்ஷன்' இருந்தாலும்கூட, பாராளுமன்ற, சட்டமன்றங்கள் மீது எந்தவிதமான 'ரெஸ்ட்ரிக்ஷனும்' குறிப்பிடப்படவில்லை. இதிலே இருந்தே பாராளுமன்ற, சட்டமன்றங்கள்தான் 'சுப்ரீம்' என்பது புலனாகிறது. ஆனால், இந்த கரன்ட் நாளிதழிலே, தாங்கள் 'சுப்ரீம் கோர்ட் ஆர்டர் இந்த அவையைக் கட்டுப்படுத்தாது' எனக் கூறியதையும், கமிஷனர் ஆப் போலீசை சுப்ரீம் கோர்ட் தடையை எதிர்த்து தாங்கள் எக்சிகியூட் செய்யச் சொன்னதையும் கடுமையாக விமர்சித்து இருப்பது தங்களுடைய அதிகாரத்தையும், இந்த அவையினுடைய இறையாண்மையையும் இழித்துப் பேசியதாக அமைவதால் மேற்படி கரன்ட் வார இதழ் has committed contempt of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெயக்குமார், நான் சொன்னது—சுப்ரீம் கோர்ட் உத்தரவை மீறி கமிஷனர் ஆப் போலீஸ் இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நான் அப்படிச் சொன்னதாகச் சொல்கிறீர்கள். நாம் எடுத்து இருக்கிற நடவடிக்கை—நான் சொன்ன வார்த்தை—'எக்சிகியூட்' பண்ண வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர, அதை 'இக்னோர்' செய்ய வேண்டுமென்று நான் போலீஸ் கமிஷனருக்குச் சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் சொன்னதைப் போல நீங்கள் சொல்கிறீர்கள்.

திரு. எஸ். ஜெயக்குமார் : இல்லை, 'தடை'யாக இருந்தாலும் அது அவையைக் கட்டுப்படுத்தாது என்றுதான் சொன்னேன். நேற்று கூட தாங்கள் கான்ஸ்டிடியூஷனுடைய ஆர்ட்டிகிள் 212-பற்றி தெள்ளத் தெளிவாக எந்த கோர்ட்டும் இந்த அவையினுடைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவோ.......



1992 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, நீங்கள் 'கரண்ட்' வார இதழில் உள்ள பகுதியை மட்டும் சொன்னால் போதும். இவையெல்லாம், உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டால் அங்கே அவர்கள் விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள் 'கரண்ட்' இதழில் வந்து இருக்கக்கூடிய அந்த ஆர்டிகிளைப்பற்றி மட்டும் சொல்லுங்கள். போதும்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிக்கைகளுக்கு இன்று தனியாக எந்தவிதமான சுதந்திரமும் அரசியல் சாசனத்தில் கூறப்படவில்லை. தனி மனிதனுக்கு உள்ள பேச்சு சுதந்திரத்தின் அளவுதான் பத்திரிக்கைச் சுதந்திரமாகும். ஒருவருடைய உரிமை, மற்றவருடைய உரிமையைப் பாதிக்கின்ற விதத்திலே அமையக் கூடாது. பத்திரிக்கை சுதந்திரம் என்ற பெயரிலே தனக்குத் தோன்றியதை எல்லாம் உண்மைக்குப் புறம்பாக இட்டுக்கட்டி திருத்தி வேண்டுமென்றே மக்களைக் குழப்பி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயருக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே இந்தக் கட்டுரை அமைந்து இருக்கின்றது. கான்ஸ்டிடியூஷன் ஆப் இந்தியா—பக்க எண் 96-ல் கூட இதைப் பற்றித் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. "Just as every person possesses the freedom of speech and expression, every person also possesses a right to his reputation which is regarded a property. Hence, nobody can so use his freedom of speech or expression as to injure another's reputation" என்று தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டு இருக்கிறது. அந்தக் கட்டுரையிலே உள்ள பல ஆங்கில வார்த்தைகளுக்கு நாம் 'மீனிங்' எடுத்துக்கொண்டால் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றியும், உங்களைப் பற்றியும் நா கூசுகின்ற அளவிலே இவை யாவும் உண்மைக்குப் புறம்பாகவும் எழுதப்பட்டு, இட்டுக்கட்டியும் எழுதப்பட்டு இருக்கின்றது. இதனைப் படிக்கின்ற எவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றியும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றியும், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றியும் தரக்குறைவாக எண்ணக்கூடும். இது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட செயல் என்பது அக்கட்டுரையில் உள்ள கடைசி பாராவில் அமைந்துள்ள கீழ்க்கண்ட வாசகத்தில் கூட குறிப்பிடப்பட்டு இருக்கிறது. "Ard the blatant abuse by Tamil Nadu's legislators of their power of privilege has to be stopped for they are doing nothing but making a monkey of our constitution" என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. அதிலே, தாங்கள் இந்த மேற்படி கரண்ட் வார இதழ் மீதும், அதன் ஆசிரியர் மீதும் இந்த அவையினை அவமதித்த குற்றத்திற்காக நடவடிக்கை எடுத்து, இந்த அவையினுடைய இறையாண்மையையும், இந்த அனைத்து உறுப்பினர்களுடைய உரிமைகளையும் பாதுகாத்திட வேண்டுமென்று வேண்டி அமைகிறேன்.

[1992 மே 5

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில், திரு. குமரி அனந்தன் அவர்கள், தன்னுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்றுதான் இந்த அவையிலே மிகச் சிறப்பானதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தினுடைய தத்துவமே, என்ன என்று சொன்னால், ஒரு சண்டையைத் தவிர்த்து, நாம் காரியத்தை ஆற்றியிருக்கிறோம். உத்தர பிரதேச சட்டசபையிலே இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றபோது, நீதிபதிகளை எல்லாம் கைது செய்து கொண்டுவா என்று சட்டமன்றமும், சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் கைது செய்து கொண்டு வா என்று நீதிமன்றமும் ஒன்றுக்கொன்று, கடுமையான மோதல் பாதையில் போனது ஒரு பக்கம் சான்றாக இருக்கின்றபோது, இந்த மோதலே தேவையில்லை என்று சொல்லி, மிகப் பக்குவமாக, நிதானமாக ஒரு தீர்மானத்தை நாம் இங்கே நிறைவேற்றியதற்குப் பிறகும், பத்திரிகைகள் இப்படி எழுதிக் கொண்டு இருக்கின்றனவே, அதுவும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, எவ்வளவு தூரத்திற்கு நமக்கு வேதனையைத் தருகிறது என்பதை எல்லாம் எண்ணிப் பார்ப்பதற்காக நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

பத்திரிகைகள்,—நேற்று நமது முன்னவர் அவர்கள் சொன்னதை போல—இங்கே அமர்ந்து இருக்கின்றவர்கள் எல்லாம் எதையாவது எழுதிவிட்டுப் போகவில்லை. இதைத்தான் எழுத வேண்டும் என்று எழுதுகிறார்கள். ஆகவே, இரண்டு வகைகளிலே செய்திகள் போடப்படுகின்றன. சென்சிபிள் ரிப்போர்ட்டிங் எவ்வளவு இருக்கிறது, சென்சேசனல் ரிப்போர்ட்டிங் எவ்வளவு இருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி பார்க்கிறபோது, நம்முடைய அவையை மிகக் கண்ணியமான ஒன்றாக நீங்கள் நடத்திக் கொண்டு போவதற்கு முயல்கிற நேரத்தில், அதற்காக ஒரு தீர்மானத்தைப் போட்டதற்குப் பிறகு இப்படி ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறது.

எழுத்துச் சுதந்திரத்தை நீங்கள் தடுப்பதாக, இதைப் பயன்படுத்திக் கொண்டு, ஒரு தலைவர் நேற்று பேசுகிறார். பார்த்தீர்களா, பார்த்தீர்களா, பத்திரிகை நண்பர்களே, வெய்யிலின்



1992 மே 5] [திரு. குமரி அனந்தன்]

கொடுமையை நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிற காரணத் தாலே, ஒரு காலத்தில் இருந்த அந்த நிழலின் அருமை உங்களுக்குத் தெரிகிறது அல்லவா என்று. எவ்வளவு பெரிய நிழலின் அருமையை அவர்கள் கொடுத்தார்கள் என்பதற்கு, நானும் இங்கே ஏற்கனவே சொன்னதைப் போலவே, சில காலம் இருந்து கொண்டு இருக்கிறேன்.

பத்திரிகை வேன்களை குறுக்கே நிறுத்தி எரித்தார்கள், அவர்களுடைய ஆட்சியிலே. எரித்தது மட்டுமல்ல, பத்திரிகை அலுவலகத்தைத் தாக்கினார்கள். தாக்கியது மட்டுமல்ல, பெரிய, பழைய பத்திரிகை நிறுவனங்களுடைய சார்பாளர்களை எல்லாம் தொலைபேசியிலே கூப்பிட்டு மிரட்டினார்கள். இத்தனையும் நடந்தது. நான், தேனாம்பேட்டையிலே, போலீஸ் நிலையத்திற்கு முன்னாலே, இந்தியன் எக்ஸ்பிரஸ் வேனை நிறுத்தி, அவர்களுடைய பத்திரிகைகளை எல்லாம் கீழே போட்டு எரித்ததைக் கூட பார்த்தேன், என்னுடைய கண்ணால். என்னுடைய அலுவலகத்திற்குப் போகின்றபோது பார்த்தேன். அவர்கள் எல்லாம் இதனைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நான் சொல்கிறேன். பத்திரிகைகள் என்பது மிகப் பெருமை வாய்ந்தது தான். இல்லை என்று சொல்லவில்லை. பிரம்மாவினுடைய தலையெழுத்து எவ்வளவு முக்கியமோ, அதைப்போலவே, பத்திரிகைகளினுடைய எழுத்தும் முக்கியம்தான். அதற்கு ஹெட்லைன்ஸ் என்று தானே பெயர். தலை எழுத்து என்றுதான் பெயராக இருக்கிறது. அதனாலே ஹெட்லைன்ஸ் என்று வருகிற போது, இப்போது இருக்கிற ஹெட்லைன்ஸ், தலை எழுத்தும் இதுதான் போலும்.

நேற்று எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, ஒரு அற்புதமான தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒரு பேனாவை பயன்படுத்துகிறபோது, எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிய வேண்டும். ஒருவன் சொன்னான். 'என்னுடைய பேனா குனிந்து நிமிர்கிற போது, குவலயத்தின் கூனை நிமிர்த்தும்' என்று சொன்னான். அது குனிந்து நிமிர்கிற நேரத்தில் குவளையத்தின் கூன் நிமிர வேண்டும். அந்த அளவிற்கு இருக்கக்கூடிய அந்தப் பேனாவை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்று பார்க்க வேண்டும். இங்கே இத்தனை பத்திரிகையாளர்கள் இருக்கிற போது, பெரும்பான்மையாக பெரிய பத்திரிகையாளர்களுடைய நிருபர்கள் எல்லாம் எழுதாத ஒன்றை 2, 3 பேர்கள் எழுதுகிறார்கள். அப்படி எழுதுகிற காரணத்தாலே, என்ன ஆகிறது? இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு வெளியிலே இருக்கின்றவர்கள், இந்த மாநிலத்தைத் தவிர, வெளி மாநிலத்திலே இருக்கின்றவர்கள், நமது சட்டமன்றத்தைப் பற்றியும், சட்டசபை சபாநாயகரைப் பற்றியும் ஏதேதோ எழுதுகிறார்கள் என்று சொன்னால் நாம் இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டாமா என்பதற்காகத்தான். அவர்கள்

[திரு. குமரி அனந்தன்] [1992 மே 5

நேற்றைக்குச் சொல்கிறபோது சொல்லியிருக்கிறார்கள், நாங்கள் எல்லாம், பத்திரிகையாளர்கள் எல்லாம், எல்லோருமாகச் சேர்ந்து ஒரு நல்ல அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம், அந்த அளவிற்கு நாங்கள் இறங்கி வந்து காரியத்தைச் செய்திருக்கிறோம். அரசோ அல்லது இந்தச் சபாநாயகரோ, அல்லது இந்த சட்டசபையோ எங்களுக்கு அதற்கு குறைந்தபட்ச ஒரு 'ஜெஸ்ட்சரை'-க் காட்டி இருக்க வேண்டாமா என்று அவர்களுடைய மனக்குறையை எழுதுவதைப் போல, இங்கே எழுதியிருக்கிறார்கள். நேற்று அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் எவ்வளவோ சொன்னாலும் கூட, அந்த 3 பேரும் சொல்ல மாட்டேன் என்கிறார்களே என்ற ஆதங்கத்தை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இருந்திருந்தால், நடந்தது எதுவாக இருந்தாலும், நாங்கள் எடுத்த முடிவுதான் என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் இதைக்கூட செய்யாத போது, நாங்கள் என்னதான் செய்வது என்றுதான் அவர்கள் மிகுந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். நான் கேட்டுக் கொள்வது, இவ்வளவு பெரிய பத்திரிகைகள் சொல்கிற நேரத்தில் கூட, நீங்கள் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, இனிமேல் ஆபாசமாக எழுதுவதாக இருந்தாலும் சரி, தாறுமாறாக, மிஸ்-ரிப்போர்ட்டிங்காக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்கிற அளவிற்கு இருக்கிற போது, தொடர்ந்து இந்த கரண்ட் போன்ற பத்திரிகைகள் எல்லாம் எழுதிக் கொண்டிருந்தால், இதற்கு என்னதான் முடிவு என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இப்போது அரசர்கள் என்பது கிடையாது, ஆளுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும்தான் இருக்கிறார்கள். ஒரு காலத்திலே புலவர்கள் இருந்ததைப் போலே பத்திரிகையாளர்கள் இருக்கிறீர்கள். பழைய காலத்து மன்னனுக்கும் புலவருக்கும் இருந்த உறவா இப்போது இருக்கிறது? அந்த உறவை நாம் கொண்டு போக வேண்டாமா? அந்த உறவைக் கொண்டு போவது தானே தமிழ்ப் பண்பு. எனவே நான் இங்கே கேட்டுக் கொள்வது எல்லாம், இங்கே அமர்ந்திருக்கின்ற பெரிய பத்திரிகையாளர்களை நான் கேட்டுக் கொள்வது எல்லாம், இப்படி நமது சட்டமன்றத்தைப் பற்றி, கரெண்ட் எழுதுகின்ற அளவிற்கு சூழல்கள் உருவாகின்றபோது இது இந்தச் சட்டப் பேரவைக்கு மட்டுமே மரியாதைக்குறைவு என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். இந்தச் சட்டப் பேரவையிலே வந்து குறிப்பு எடுக்க வந்திருக்கின்ற உங்களையும் தான் இது பாதிக்கும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15.

எனவே, இங்கே செய்ய வேண்டியது என்னவென்றால், அந்த மூன்று பேரையும் நீங்கள் எப்படி திருத்தப் போகிறீர்கள்? சரி அந்த 3 பேரையுமே திருத்த என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள்?



1992 மே 5] [திரு. குமரி அனந்தன்]

ஆனால் நான் சொல்ல விரும்புவது, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் சொல்லிக் கொள்கிறேன், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சில அரசியல்வாதிகள் உள்ளே வந்து குளிர் காய விரும்புகிறார்கள். அப்படிக் குளிர் காய்வதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. நாம் எழுத்தாளர்களை மதிக்க வேண்டும். அதைப்போல எழுத்தாளர்களும் நம்மை மதிக்க வேண்டுமென்று காட்டுகின்ற வகையிலே அவர்கள்,ஒரு அமைப்பை நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம், இனிமேல் அப்படிப்பட்ட தவறுகள் வராத வண்ணம் நாங்கள் பார்த்துக் கொள்வதற்கு இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம், நீங்களும் ஏதாவது செய்ய வேண்டாமா என்று கேட்கிறார்கள் அல்லவா? அதனாலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்வது என்னவென்றால் அவர்களுடைய விருப்பம் என்ன? அவர்கள் இந்த மூன்று பேருக்கும் என்ன பதில் சொல்கிறார்கள்? நாம் இனிமேல் சுமூகமாக போவதற்கு அவர்கள் என்ன வழி வகைகளை வைத்திருக்கிறார்கள் என்பதையாவது அவர்கள் சொல்லவேண்டும். அது தவிர, இனிமேல் யாராவது எழுதினால் அவர்களே அதற்குப் பொறுப்பெடுத்து, நமக்குக் காரியத்தைச் செய்துத்தர வேண்டும் என்பதற்காக அவர்களைச் சந்தித்துப் பேசுகின்ற நிலையிலே நீங்கள் தயாராக இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் வருகின்ற நேரத்தில் அவர்களே இதற்கு ஒரு முடிவைக் கொண்டு வருகின்ற அளவிற்கு வரவேண்டுமே தவிர, தொடர்ந்து இது நடைபெறக் கூடாது, ஒரு மோதல் நிலை உருவாக வேண்டாம். அதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, பணிவோடு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றித் தங்களுக்கும் தெரிந்திருக்குமென்று கருதுகின்றேன். கடந்த ஞாயிறு அன்று '' சண்டே '' இதழில் எப்படி இன்றைக்கு கரெண்ட் இதழ், போற்றுதற்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பற்றியும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றியும், இழிவாகவும், கண்ணியக் குறைவாகவும் எழுதியிருக்கிறார்களோ, அப்படி '' சண்டே '' என்ற ஒரு பிரபல வார இதழ்கள் '' ஞாயிறு '' எழுதியிருக்கிறது. அதனை தயவுசெய்து தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத் தனியாக அறிவிப்புக் கொடுக்கலாம்.

இப்போது பாயிண்ட் ஆப் ஆர்டர், திரு. திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் உள்ள உறவு, அந்தக் காலத்தில் மன்னர்களுக்கும்

புலவர்களுக்கும் இருந்த உறவு போலவா இருக்கிறது என்று நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்கள் கேட்டார்கள். அந்தக் காலத்தில் மன்னனைப் பார்த்து, மன்னவனும் நீயோ, வள நாடும் உனதோ என்று நேருக்கு நேராகப் பாடிய புலவர்களும் அந்தக் காலத்தில் இருந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கலாம். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புலவர் மன்னனால் வெளியேற்றப்பட்டார் என்பதற்காகத் தான் அந்தப் புலவர் அப்படிப் பாடினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆக கூண்டுக்கும் அதிகமான தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது என்பதுதான் அன்று நடந்தது.

திரு. குமரி அனந்தன் : மற்றவர்கள் அமைத்துக் கொடுக்கின்ற கூண்டிற்குள் மாட்டிக் கொண்டு அதற்குத் தகுந்தவாறு பேசுவது கிடையாது. (குறுக்கீடு) நான் பதில் சொல்லி முடிக்கவில்லை.

இரண்டாவது என்னவென்றால் மன்னர்களைப் பற்றிப் பாடுகின்றபோது, மன்னவன் இறந்த பொழுது அல்லது மன்னனுடைய மார்பிலே ஒன்று பாய்ந்து கீழே விழுந்துவிட்டபொழுது இது மன்னவா உன் மார்பில் பாயவில்லை, என் கையில் பாய்ந்திருக்கிறது, என் நாவில் பாய்ந்திருக்கிறது, ஆகவே, நீ போய் விட்டால் என் நாவே பேசாது என்று சொல்கின்ற அளவிற்கும் புலவர்களும் மன்னனை மதித்தார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அன்றைக்கு நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி சண்டை நடக்கின்ற பொழுது வேட்டி அவிழ்க்கிற மாதிரி மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் பேசியது. **

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நேரடியாக ஒரு உறுப்பினரைப்பற்றி அவதூறாகப் பேசுவதும், உள் நோக்கம் கற்பித்தும் பேசக் கூடாது. அவர் உங்களைப் பற்றிச் சொல்லவில்லை. அப்படியிருக்கிறபோது நீங்கள் குறிப்பிட்டு, இன்னொரு உறுப்பினர் மீது உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது சரியல்ல.

திரு. குமரி அனந்தன் : நான் இங்கே சொல்ல வந்தது எல்லாம், சென்னைப் பத்திரிகையாளர் சங்கம், சென்னை நிருபர்கள் சங்கம், சென்னை பிரஸ் கிளப், தென்னிந்தியப் பத்திரிகையாளர் சங்கம் போன்றவைகள் எல்லாம் ஒரு முடிவு எடுத்திருக்கிறபோது அந்த மூன்று பேருக்குத்தான் நான் சொன்னேனே தவிர, கூண்டுப் பிரச்சினையை எடுத்ததே அவர்தான். நான் என்னைப் பற்றிப் பேசவில்லை. ** நான் சொல்கிறேன். இந்தச் சூழ்நிலையிலே நான் இன்று இருக்கிற தேசியக் கூண்டிலிருந்து எங்கேயும் போகவில்லை. இந்தக் கூண்டுக்குள்தான் நான் எப்போதும் இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) **

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து அதற்கான பதில் சொன்ன பகுதி மட்டும் நீக்கப்படுகிறது. திரு. பட்டாபிராமன் அவர்கள்.

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மின் வாரிய நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடத்த இருக்கிற இந்த நேரத்திலே, இந்த மின் துறையிலேயும் கரண்ட் இருக்கிறது, அதேபோல கரண்ட் பத்திரிகை பற்றியும் இன்றையதினம் பிரச்சினை வந்திருக்கிறது. இந்த கரண்ட் பத்திரிகையைப்பற்றி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் எழுப்பி இருக்கிறார். அதில் உங்களுடைய பகுதி விளக்கத்தை மட்டும் சொன்னால் போதும்.

*திரு. கா.ப. பட்டாபிராமன் : மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினரான ஜெயகுமார் அவர்கள் பேசியதில் ஒரு பிரச்சினையை மட்டும் அந்தப் பேச்சுக்கு நான் இணையாகச்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சேர்த்து அமர இருக்கிறேன். அந்த கரண்ட் பத்திரிகையினுடைய எடிட்டோரியல் என்கிற அந்தப் பகுதியைப் பார்க்கிறபோது— தலையங்கத்தைப் பார்க்கிறபோது— "Dizzy as a Goose" என்ற தலைப்பிலே, அதிலே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற வார்த்தையைப் பார்க்கிறபோது, எவ்வளவு கீழ்த்தரமாக இந்த அவையைப் பேச வேண்டுமோ, இந்த அவையிலே அங்கம் வகிக்கின்றவர்களைப் பற்றிப் பேச வேண்டுமோ அந்த அளவுக்கு எழுதியிருக்கிறார்கள். அந்த வார்த்தையினுடைய மொழி பெயர்ப்பை மட்டும் "megalomaniac" என்கிற வார்த்தையைப்போட்டு-தற்பெருமை,போராடும் குணம் உள்ளவர் என்றும், சித்தப்பிரமை பிடித்தவர் என்றும் அடுத்து வெறி பிடித்தவர் என்றும் வருகிற அர்த்தத்திலே மிகவும் கொச்சையாக அதிலே எழுதியிருக்கிறார்கள். அந்தத் தலையங்கத்திலே இருக்கிற 4 வரிகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அதிலே கடைசியாக கூறப்பட்டிருக்கிற வார்த்தைகள் இவைகள் தான். 'If necessary, Jayalalitha's government must be dismissed and the Assembly, which has reached a nadir in constitutional propriety, should be dissolved. These bandicoots need a dose of their own medicine' என்று எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னால், அரசமைப்புச் சட்டத்திலே எந்தெந்த நிலைகளிலே ஒரு சட்ட மன்றத்தைப் பற்றி பேச வேண்டுமோ கலைக்க வேண்டுமோ அந்த உரிமைகளை இந்தப் பத்திரிகை ஆசிரியர் எழுதியிருக்கிறார். அது மட்டும் அல்ல, இந்த நாட்டு மக்களால் இங்கே அமர வைத்திருக்கிற அந்த உரிமையையும் அந்தப் பத்திரிகை ஆசிரியர் கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமையைப் பார்க்கிறபோது இந்தப் பத்திரிகை மீது கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லுகிற அதே நேரத்தில் இந்தப் பத்திரிகையினுடைய வாடிக்கையே எப்படி இருந்திருக்கிறது என்று சொன்னால், தவறான கருத்துக்களைப் பிரசுரிப்பது, தவறான கருத்துக்களை வெளியிடுவது, உடனே அதற்கு அடுத்த நாளோ அல்லது அடுத்த மாதமோ அல்லது அடுத்த வருடமோ, அதற்கு வருத்தம் தெரிவித்து, நாங்கள் இப்படி தவறாகச் செய்து விட்டோம், எங்களை மன்னித்து விடுங்கள் என்று சொல்வதாகவும் இருக்கிறது. அதேபோல இந்தத் தலையங்கத்தினுடைய பகுதிக்குக் கீழ் பகுதியிலே இருப்பதைப் படிக்கிறபோது 'ரெக்கிரட்ஸ்', 'வருந்துகிறோம்' என்ற தலைப்பில் 'Our former Special Correspondent Soumitra Bose tendered the following unconditional and unqualified apology to Jagmohan, the former Governor of the State of Jammu and Kashmir, on 30.3.1992:

"I hereby tender my unconditional and unqualified apology for having wrongly written in my report, which was published in the weekly issue of May 26 June-1, 1990 of 'Current', to the effect



that you talked to 'Current' at Raj Bhavan in Srinagar and stated inter alia : "Every Muslim in Kashmir is a militant today. All of them are for secession from India. I am scuttling Srinagar Doordarshan's programmes because everyone there is a militant, although, in fact, you had not talked to 'Current' me at Raj Bhavan in Srinagar and you had not uttered, stated the aforesaid words or any other words to that effect." 'எனவே இந்த பத்திரிகை மீது நடவடிக்கை எடுத்து இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களுடைய கண்ணியத்தையும் மாட்சிமையையும் கெடுக்கிற அளவிலே இந்த செய்தி வெளியிடப்பட்டிருக்கிற காரணத்தாலே-மற்றப் பத்திரிகைகளைப் பார்க்கிறபோது இந்தப் பத்திரிகையைக் கையிலே எடுப்பதற்கே கூசுவதாக இருக்கிறது. அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள், என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த அவை எந்த அளவுக்கு இந்தப் பத்திரிகைமீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அத்தனையும் எடுக்க வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

முற்பகல் 11-25

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் கரண்ட் பத்திரிகையினுடைய 2-8 தேதி யிட்டு எழுதிய தலையங்கம் எந்த வகையிலே இந்தப் பேரவையி னுடைய மதிப்புரிமைகளைப் பாழ்படுத்துகின்ற அளவுக்கு மீறிய வகையிலே அமைந்திருக்கிறது என்பதற்கான காரண காரிய விளக் கங்களை அவர்கள் கொண்டு வந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். இது மே 2-ஆம் தேதி முதல் 8-ஆம் தேதி வரையானது. 2.8 அல்ல.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே மாதம் 2-ந் தேதி முதல் 8-ந்தேதி வரையுள்ள ஒரு வார இதழில் வெளியிடப்பட்டுள்ள

கிறது. நாம் பத்திரிகைகளை மதிக்கின்றோம்; பத்திரிகை ஆசிரியர்களை மதிக்கின்றோம்; எழுத்துரிமையை மதிக்கின்றோம்; பத்திரிகைகளுக்கு இருக்கின்ற சுதந்திரத்தை நாம் மதிக்கின்றோம்; இந்தத் தலையங்கத்தை நாம் மதிக்க வேண்டுமா என்பதுதான் நாட்டிலுள்ள நல்லறிஞர்கள் அத்தனை பேரும் சிந்திக்க வேண்டிய ஒன்று. ஆகவே, பத்திரிகைகளுக்கு என்று உரிமைகள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் அந்த உரிமை பொறுப்புணர்ச்சியோடும், கடமையுணர்ச்சியோடும் சேர்ந்துதான் வரவேண்டுமே தவிர, பொறுப்பற்று, கடமையற்று அந்த உரிமையைப் பயன்படுத்துகின்றபோது அது எப்படி சரியாக அமையும் என்பதை இந்தப் பேரவை உணர வேண்டும். அண்ணல் காந்தியடிகள் மிகச் சிறப்பாகச் சொன்னார்கள். 'Freedom without discipline is useless' என்று குறிப்பிட்டார்கள். ஒரு கட்டுப்பாடு இல்லாத ஒரு சுதந்திரம் ஒரு பாழ்பட்ட ஒன்றாகத்தான் கருதப்பட வேண்டுமே தவிர அது ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாக அமையாது என்று எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசினுடைய நடவடிக்கைகள், இந்த அரசினுடைய போக்குகள், எடுக்கின்ற திட்டங்கள் ஆகியவற்றை மறுக்க, எதிர்க்க எவருக்கும் உரிமை உண்டு. இன்னமும் ஒரு படி மேலே போய்ச் சொல்கிறேன். இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்று சொல்வதிலேகூடத் தவறு இல்லை. அது அவர்களுடைய விருப்பம். இந்த ஆட்சியை நீக்க வேண்டும் என்று சொல்வது கூடத் தவறு இல்லை. 'These bandicoots need a dose of their own medicine' இந்த அவையில் இருக்கின்றவர்கள் அத்தனை பேரும் 'bandicoots', என்று சொல்வது எப்படி பத்திரிகையினுடைய சுதந்திரத்தின் பாற்பட்டது என்று எடுத்துக்கொள்ளக்கூடிய ஒன்று. அது மட்டுமல்ல, 'Dizzy as a Goose' என்று ஒரு முதலமைச்சரை எடுத்துச் சொல்கின்ற அளவுக்குத் தலையங்கம் எழுதுவதோ, இது தான் பத்திரிகை சுதந்திரம் என்று எடுத்துச் சொல்வதோ எப்படி இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்குப் பயன்படுவதாக அமையும் என்று தெரியவில்லை. சிலபல சொற்கள் நாடாளுமன்ற நடவடிக்கைக்கு மீறிய வகையில் அமைந்திருக்கின்ற பாங்கினை மாண்புமிகு கொறடா அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். எந்த அளவுக்கு எல்லாம் எழுதியிருக்கிறார்கள் என்று பார்க்கின்றபோது '.. the Speaker of the Assembly, Sedapatti Muthiah, has the audacite to proclaim inside the House that the Supreme Court's stay on the arrest of former Illustrated Weekly of India correspondent ordered by him just to please the Amma was not binding either on him or the House..' என்று மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களை, இந்த அவையிலே அறிவித்த அத்தகைய மதிப்புரிமை பற்றிய அத்தகைய பிரச்சினையில் அடாசிட்டி என்றும் கூறியிருக்கின்றார். '.. The



AIADMK legislators are so sycophantic that when they are asked to bend, they crawl and when they are asked to sing hosannas for their empress, they get her visage tatooed on their body' என்றெல்லாம் இந்தப் பேரவையினுடைய உறுப்பினர்களைப் பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றி இப்படிப்பட்ட சொற்களில் எல்லாம் சொல்லலாம் என்று கருதுவார்களேயானால், எங்கே போய் சுதந்திரமும் மற்றவைகளும் முடியும் என்பதை நாணயமான, நேர்மையான, ஒழுங்கான ஜனநாயகத்தை விரும்புகின்ற பண்போடு கூடிய பெரிய பெரிய பத்திரிகையாளர்கள் எல்லாம் சிந்திக்க வேண்டும் என்பதைத்தான் நான் திரும்பத் திரும்பக் குறிப்பிட விரும்புகிறேன். பத்திரிகைச் சுதந்திரம் வேண்டும் என்பது இப்படி எழுதுவதற்குத் தானா? இவைகள் தான் பத்திரிகையினுடைய சுதந்திரமாக ஆகுமா என்பதை எல்லாம் சிந்திக்க வேண்டும். ஆர்.சி. எஸ். சர்க்கார் அவர்கள் 'The Press and Privillages of Parliament என்ற கட்டுரையில் குறிப்பிடுகின்றபொழுது 'Parliamentary democracy is one of the most sensitive areas in which a journalist has to be very careful' என்று அவர் தெளிவுபட எழுதியிருக்கின்றார். ஆக பாராளுமன்றத்திற்கு என்று இருக்கின்ற தனி மதிப்புரிமைகள் மிகமிக நுணுக்கம் வாய்ந்தவை. அதைப் பற்றி செய்தியாளர்களும் மற்றவர்களும் மிகக் கவலையோடு இருந்து பணியாற்ற வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி, 'A Privilege means a right an advantage, on immunity granted to, or enjoyed by a person or class of persons beyond the common advantage of others' என்று எடுத்துச் சொல்லிவிட்டு அவர் மேலும் சொல்லுகின்றபோது 'Ereskine May விலிருந்து அவர் எடுத்துக் காட்டுகிறார். 'some of the peculiar rights enjoyed by each House collectively as a constituent part of the High Court or Parliament and by Members of each House individually without which they could not discharge their function and which exceed those possessed by other bodies or individuals.... The privilege though part of the law of the land is to a certain extent an exception from the ordinary law.'

முற்பகல் 11–30

சாதாரணமான சட்டங்களை விட இந்த மதிப்புரிமைகள் என்பது ஒரு தனித் தன்மை வாய்ந்தது என்பதை எடுத்துச் சொல்லிவிட்டு அவர் மேலும் சொல்லுகின்றபோது " Our Legislators enjoy certain privileges, that is to say ,'..Certain rights, advantages, immunities which are not enjoyed by others. They have been enshrined in Article 105 in respect of Parliament and in article 94

in respect of State Legislatures" என்று சொல்லிவிட்டு, மேலும் சொல்லியிருக்கிறார். "No such special rights or privileges have been conferred on the Press. பத்திரிகைகளுக்கு உரிமையிருக்கிறது. பிரிவிலேஜ் கிடையாது. ஆனால் இந்த அவைக்கு, பார்லிமெண்டுக்கு பிரிவிலேஜ் உண்டு. ரைட்ஸ்-ஐ விட மேலானது பிரிவிலேஜ். அது பாதிக்கப்படுகின்ற போது நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டத்திற்கு சட்டமுறைகள் எல்லாம், திட்டங்கள் எல்லாம் வகுக்கப்படுகின்றன. அதைத்தான் நேற்றும் நாம் வாதாட வேண்டிய அவசியம் வந்தது. ஆக இப்படிப்பட்ட நிலைமைகள், அடிக்கடி உரிமைப் பிரச்சினை கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றால்; முன்பு இவ்வளவு ஏற்படவில்லை என்றால், முன்பு இருந்த பத்திரிகையாளர்கள் அப்படி இருந்திருக்கிறார்கள் என்று தான் அதற்குப் பொருளே தவிர வேறல்ல. உரிமைப் பிரச்சினையை நாமா கிளப்புகிறோம்; உரிமை மீறல்களை அவர்கள் கிளப்புவதன் காரணமாக நாம் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் வருகிறது. இறந்த காலங்களில் அதிகமான அளவுக்கு உரிமைப் பிரச்சினைகள் வரவில்லை என்றால், உரிமையை மீறுகின்ற அளவுக்கு பத்திரிகைகள் அவ்வளவாக ஈடுபடவில்லை என்று தான் அதற்குப்பொருள்; கண்ணியமாக நடந்து கொண்டார்கள் என்று அதற்குப் பொருள்; பொறுப்புணர்ந்து எழுதினார்கள் என்று பொருள். ஆக இப்போது அடிக்கடி உரிமைப்பிரச்சினை மீறலைப் பற்றி எழுப்ப வேண்டியிருக்கிறது என்று சொன்னால் அப்படி மீறுகின்ற தன்மைக்குப் பத்திரிகைகள் பல முன் வந்திருக்கின்றன என்பதை இது காட்டுகிறதே தவிர வேறு எதுவும் இல்லை. நாளடைவிலே அது வந்து விட்டது என்று நாம் மட்டும் சொல்லவில்லை, நேற்றே நான் சுட்டிக்காட்டினேன், மீண்டும் நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்.

பத்திரிகையாளர்களிலே மிகப் புகழ்ப்பெற்றவர், மிகப் பெருமைப்பெற்ற பத்திரிகையாளர் என்ற பாராட்டைப் பெற்றவர், சிறந்தவர் என்று போற்றப்பட்டவர் திரு. எம். சலபதி ராவ் அவர்கள். அவர்கள் குறிப்பிட்டதை நேற்றும் நான் சுட்டிக்காட்டினேன். அவர்கள் தெளிவுபட எடுத்துச் சுட்டிக்காட்டுகின்ற போது கூட "The Press has two main aspects, as a part of what is known as the information Industry and as a factor in the formulation of opinion. In both respects it has to act with responsibility to be effective and reliable."
என்று சொல்லிவிட்டு, இப்போது எப்படிப் போய் கொண்டிருக்கிறது என்பதை திரு. சலபதி ராவே குறிப்பிடுகிறார்; "There is a tendency in some section of the Press to reverse Mr. Scott's view, by saying "Comments are sacred" என்று சொல்லிவிட்டு, கட்டுரையில் சொல்லுகின்றபோது



Growing evil is the way facts and comments are inexplicably mixed in almost every column of the newspaper", உண்மைகளையும், விமர்சனத்தையும் விடுவிக்க முடியாத வகையில் குழப்பி வெளியிடுவது என்ற தீய பழக்கம் பெரும்பாலான செய்தித் தாள்களில், பத்திரிகைகளில் வளர்ந்து கொண்டு வருகின்றன என்று அவரே சொல்லுகின்றபோது எந்த அளவுக்கு ஆளாகி இருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது இது உள்ளபடியே உரிமைக்குழுவிற்கு விடப்பட்டு உள்ளபடியே விசாரிக்க வேண்டிய ஒன்று. அதன் மூலமாக இப்படிப் பட்ட மன்றங்களின் பெயரையும், உரிமையையும், மற்றவற்றையும் காப்பற்ற முடியும் என்பதை வலியுறுத்தி நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்".

என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறியதற்கு இணங்க இந்த 2 அடிக் குறளிலே 7 சீர்களிலே கூட 5 இடங்களிலே 'சொல்லை' வைத்து அதை எப்படிப் பயனுடையதாக இருக்க வேண்டுமென்று சொல்லி, மிகத் தெளிவுபட எடுத்துக்கூறிஇருக்கிறார்கள். ஆகவே, பத்திரிகையாளர்களைப் பொறுத்தோ பத்திரிகைகளின் உரிமையைப் பொறுத்தோ பிரச்சினை அல்ல இப்படிப்பட்ட தலையங்கங்கள், இப்படிப்பட்ட சொற்களைக் கொண்டு எழுதுவது நியாயமா என்பதை இந்த மன்ற உறுப்பினர்களும் உணர்ந்து உரிமைக் குழுவுக்கு அனுப்பி, இந்த மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, சிறந்த, நாணயமான, நேர்மையான பத்திரிகையாளர்களும் உணரவேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி, நாணயமான, நேர்மையான, அறிவுபடைத்த பொதுமக்களும் சிந்திக்கவேண்டும் என்பதை எடுத்துச்சொல்லி, இதை உரிமைக் குழுவுக்கு விடலாம் என்பதை சிபாரிசு செய்கிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே திரு. ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்த கருத்துக்களிலிருந்தும், மாண்புமிகு பேரவை முன்னவர், திரு. பட்டாபிராமன் மற்றும் திரு. குமரி அனந்தன் ஆகியோர் தெரிவித்து இருக்கிற கருத்துக்களிலிருந்தும் பார்க்கிறபோதே இந்தத் தலையங்கத்திலே இருக்கக்கூடிய விஷயமும் அதிலே வந்திருக்கிற வார்த்தைகளும் இந்தப பேரவையின் உறுப்பினர்களையும், இந்தப் பேரவையினையும் மிகத் தரந்தாழ்ந்து விமர்சித்த தன்மை மிகத் தெளிவாகத் தெரிகிறது. சிலர்கூட, ரொம்ப மகிழ்ச்சி அடையலாம். முதலமைச்சரைப் பார்த்து, 'Dizzy and Goose' என்று ஒருவர் எழுதி விட்டார் என்று மகிழ்ச்சி அடையலாம். பேரவைத் தலைவரை

Candacity யோடு இருக்கிறார் என்று ஒருவர் எழுதிவிட்டார் என்று மகிழ்ச்சி அடையலாம். ஆனால் அப்படி மகிழ்ச்சி அடைகிறவர்கள் இன்னொன்றையும் இந்தத் தலையங்கம் எழுதியவா குறிப்பிட்டு இருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்களையெல்லாம் இப்படி விமர்சித்தவர்கள் இந்தப் பேரவை உறுப்பினர்களையெல்லாம் 'Bandicoots' என்று சொன்னவர்கள். (குறுக்கீடு) அவையெல்லாம் இங்கே மொழிபெயர்த்துக் கூறுவதற்கே உரிய வார்த்தைகள் அல்ல. பல வார்த்தைகள். ஆகவேதான் அவர் மொழிபெயர்த்துச் சொல்ல ஆரம்பித்தவர் அப்படியே நிறுத்தி விட்டார். இப்படியெல்லாம் விமர்சிக்கிறவர் முதலமைச்சரைக் குறிப்பிட்டுவிட்டுச் சொல்லுகிறார்; "equality corybantic mentor, the late M. G. Ramachandran corybantic என்பதற்குரிய அர்த்தம் என்னவென்று கேட்டால், முரட்டுத்தனமான கொடியவர், மறைந்த, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முரட்டுத்தனமான கொடியவரா? அவருக்குப் பெயரே பொன்மனச் செம்மல், அவருடைய உள்ளத்தைப்போல இளகிய உள்ளம் வேறொரு உள்ளம் இருக்க முடியாது. நேருக்கு நேராக ஒருவனைப் பார்த்துத் திட்டிவிட்டு அவன் கீழே போனவுடன், அழைத்து ஒரு 100 ரூபாய் கட்டைக் கொடுத்து, இனிமேல் வருத்தப்படாதே என்று அனுப்புகிற உள்ளம். அந்த 100 ரூபாய் கட்டைக் கொடுத்துவிட்டு அனுப்பினாரே என்றுதான் நாங்களெல்லாம் வருத்தப்பட்டுக்கொண்டு இருப்போம். அவர் சொல்லுவார். நான் முதலிலே திட்டினதற்கு வருத்தப்பட்டு இருப்பானோ என்று மூன்று நாட்கள் பார்கிறவர்களிடத்திலேயெல்லாம் சொல்லி வருந்திக் கொண்டு இருப்பார். நான் அவனைத் திட்டியதற்காக வருத்தப்பட்டு இருப்பானோ என்று பல தடவை பலரிடத்திலே அவர் கேட்டுக்கொண்டு இருப்பார். அந்த அளவிற்கு இளகிய உள்ளம் மிக்க அந்தத் தலைவரை மறைந்த தலைவர்களைப் பற்றி விமர்சிக்கக் கூடாது; அது நாகரிகம் அல்ல என்கிற பண்பாட்டையும் மீறி, ". . . . equally corybantic mentor the late M.G.R." இந்த ஆசிரியர்தான் எழுதி இருக்கிறார் என்பதையும் நீங்கள் இணைத்துப் பார்த்தால் அந்த ஆசிரியர்தான் முதலமைச்சரை இப்படி எழுதி இருக்கிறார்; பேரவைத் தலைவரைப்பற்றி எழுதி இருக்கிறார். இந்த உறுப்பினர்களைப் பற்றி எழுதி இருக்கிறார். குறிப்பாக அனைத்திந்திய அண்ணா தி.மு.க. உறுப்பினர்களைப் பற்றியும் எழுதியிருக்கிறார் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். பத்திரிகை சுதந்திரத்தை, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கிறீர்களே என்று நேற்று குரல் எழுப்பிய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், இதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மறைந்த ஒரு தலைவரை, ஒரு மாசற்ற தலைவரை, "corybantic mentor . . ." என்று எழுதலாம் என்கிற அளவுக்கும் நீங்கள் அவர்களுக்கு ஊக்கமும் உரிமையும் கொடுக்க இருக்கிறீர்களா என்பதையும்



உங்களுடைய மேலான சிந்தனைக்கே விட்டுவிட்டு, இதை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே, அவை உரிமை மீறிய செயல்கள் இதில் அடங்கியுள்ளன என்பது தெளிவாகிற காரணத்தால், பேரவை விதி 226-இன்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இப்பிரச்சினையை ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, உரிமைக் குழுவிற்கு நேரடியாக அனுப்பி வைக்கின்றேன்.

திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். வெளியிலே இருக்கின்ற பத்திரிகைகள் சட்டமன்றத்தை விமாசிக்கின்றபோது நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கை என்பதை நான் ஏற்றுக் கொள்கின் றேன். நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் சட்டமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள்..

முற்பகல் 11.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். காலையில் கொடுத்தது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) உறுப்பினர்கள் மீது ஒரு பிரச்சினை என்கிறபொழுது நான் அந்த சம்பந்தப்பட்ட உறுப்பினரை நேரடியாக அழைக்கிறேன். (குறுக்கீடு) இல்லை; அழைத்துக் கேட்கிறேன். (குறுக்கீடு) இல்லை. அதை ஒரு மரபு வழியாக வைத் திருக்கிறோம். (குறுக்கீடு) கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை. அதை ஒரு மரபாக வைத்திருக்கிறோம். உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரே இங்கே ஒரு உறுப்பினா மீது கொடுத்தார். அதுபற்றி என்னுடைய முடிவை எடுப்பதற்கு ஒரு மாதம் எடுத்துக் கொண்டேன். அந்த உறுப்பினரை ஒவ்வொரு முறையும் அழைத்து அழைத்துப் பேசி, உங்களுடைய கருத்து என்ன; எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்து என்ன என்று கேட்டு, அதற்குப் பிறகுதான் நான் முடிவு எடுத்தேன். ஆகவே, நீங்கள் அவசரப்பட வேண்டாம். காலையிலே கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

## 4. அறிவிப்பு.

### இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு

(அறிமுகம் செய்தல்.)

### இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை தமிழ்நாட்டு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 6. மின் வாரிய நிதிநிலை அறிக்கை, 1992–93 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1991–92 மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1991-92 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை இம்மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன் மொழிகின்றேன்.

நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்கள் வசதிக்காக நூல் வடிவமாக மன்றத்திலே வைத்திருக்கின்றேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை (a) சபைக் குறிப்பில் ஏற்றிட அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

வாரியத்தின் செயல் முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், மின்சார வாரியமும் கருத்திற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மின்சார வாரியத்தின் பணியினை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களது கருத்தினைக் கூறிடுமாறு இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையைத் தெரிவிக்கிறேன் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு விவாதத்தில் பங்கு பெறுகிற உறுப்பினர்கள் பேசக் கேட்டுக் கொள்கிறேன். திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

(a) 143 முதல் 154 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

சம்சாரம் இல்லாமல் கூட வாழ்ந்து விடலாம். ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்ற நிலைமை இன்று வளர்ந்து வருகின்ற நாடுகளிலே கூட உருவாகி வருகின்றது. ஆகவே, இந்தப் பிரச்சினை முக்கியமான பிரச்சினையாக இருந்தாலும் கூட, அவசரம் அவசரமாக, அவசரக் கோலத்தோடு அள்ளித் தெளித்த நிலை போல இன்றைய தினத்திலே அவசரம் அவசரமாக இந்த நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது தேவைதானா, அவசரமாக இந்த விவாதம் தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதன் காரணமாகத்தான், இந்தப் பிரச்சினை முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மின்சாரத் துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவினை அமைத்து, இந்தப் பிரச்சினை சம்பந்தமாக அந்தக் கமிட்டியிலே விவாதிப்பதற்காக ஒரு பவர் கமிட்டி ஒன்றைப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய காலத்திலே அமைக்கப்பட்டது.

முற்பகல் 11-45

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது கைவிடப்பட்டிருக்கிறது. மீண்டும், இந்த அரசு அந்த பவர் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற 10 மாதத்திற்குள், தமிழகத்தினுடைய மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி, 20 நாட்கள் கையிருப்போடு இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள். அதே போன்று, இந்த ஆண்டு மின்சார வெட்டே வராது என்பதையும், இந்த அவையிலே மின்சாரத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக, தமிழக மக்கள் சார்பாக இந்த அரசிற்கு நான் எனது பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், தூத்துக்குடியினுடைய அனல் மின் நிலையத்தின் இரண்டு யூனிட்டுகளைத் துவக்கி வைக்கிற நேரத்திலே, மின்சாரத் துறையிலே பணியாற்றுகிற சுமார் 2,500 தொழிலாளர்களுக்கு 75 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்ததை, மின்சார வாரியத்திலே பணியாற்றுகிற தொழிலாளர்கள் சார்பாக, இந்த அரசிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற 10 மாதத்திற்குள், தமிழகத்தினுடைய மின்சார வாரியத்திலே, மின்சார வாரியத்தின் தலைவர் பதவியில் 4 முறை மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.



இதன் காரணமாக, அதிகாரிகள் மத்தியிலே மெத்தனப் போக்கும், நிர்வாகம் சீர்கெடக் கூடிய ஒரு நிலைமையும் உருவாகும் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். அதே போன்று, மின்சார வாரியத்திலே ''மெம்பர் ஆப் பவர் ஜெனரேஷன்'' அவர்களைப் பொறுத்தமட்டிலே, தானாக முன் வந்து, ''வாலண்டரி ரிடையர்மென்ட்'' கேட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். மின்சாரத் துறையிலே, அவரைப் பொறுத்தமட்டிலே

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின்மீது கொடுக்கப்பட்டிருக்கிற விவாதத்திலே பேசுகிற போது நிர்வாகத்திலே இருக்கிற சிக்கல்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு அரசினுடைய நிர்வாகத்திலே—1948 ஆம் ஆண்டு மத்திய சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, மின்சார வாரியம், 1957-லிருந்து தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. அன்றைக்கு இருந்த நிலைமை வேறு; இன்றைக்கு இருக்கிற நிலைமை வேறு. காங்கிரஸ் கட்சி ஆளுகிற நேரத்திலே, மின்சார வாரியம் எப்படி இருந்தது என்பதற்குச் சான்றுகள் எல்லாம் இருக்கின்றன. அதற்குப் பின்னாலே நம்முடைய— பல்வேறு ஆட்சி மாற்றங்கள் வந்ததற்குப் பின்னாலே—நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே எப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? எப்படி, மின்சார வாரியம் இன்று மக்களோடு தொடர்பு கொண்டதாய் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் நன்றாக அறிவார்கள். ஆகவே, சில கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டால் தான், நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டால்தான், அதிகார மாற்றங்களைச் செய்தால் தான், இன்றைக்கு மக்களோடு ஒன்றிப் போகிற வாரியமாக, இந்த மின்சார வாரியத்தை மாற்ற முடியும் என்ற காரணத்திற்காக பல்வேறு நிர்வாக நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதே தவிர, வேறு யாரையும் பழி வாங்குகின்ற நோக்கம் அல்ல. ஒரு அதிகாரியை நியமிக்கிற நேரத்திலே, அந்த அதிகாரி செயல்படவில்லை என்று சொன்னால், அந்த அதிகாரி மாற்றப்படுகிறார். என்று சொன்னால், முக்கியமான காரண காரியங்களை, இந்த நிர்வாகத்திலே இருக்கிற, பொறுப்பிலே இருக்கிற அமைச்சரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உணர்ந்து இருக்கிறார்கள் என்கிற காரணத்திற்காகத்தான், அந்த அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறாரே ஒழிய, யாரையும் பழி வாங்குகின்ற நடவடிக்கை

[மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்] [1992 மே 5

அல்ல; ஆகவே, செயல்படாத அதிகாரியை வைத்துக் கொண்டு, இந்த அரசையோ, இந்த நிர்வாகத்தையோ நடத்த வேண்டு மென்று நினைக்கிற அரசு இது அல்ல என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கு நன்றி. செயல்படாத அதிகாரிகளை மாற்றுவதிலே எங்களுக்கு எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று, தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே, தமிழ கத்திலே இருக்கிற கிராமங்கள் முழுமைக்கும் மின்சாரம் வழங்கப் பட்டு விட்டதாக நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். உண்மை யிலேயே பெருமை. இன்றைய தினத்திலே, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, 25 ஆயிரம் ரூபாய் யார் கட்டினாலும், உடனடியாக எந்தவித முன்னுரிமையும் இல்லாமல், அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்; நாங்கள் வரவேற்கிறோம். அதே போன்று, இந்த ஆண்டு, 40 ஆயிரம் விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப் படும் என்பதையும் நாங்கள் வரவேற்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பின்பு தான் ஒவ்வொரு கிராமத்திலேயும் இன்றைய தினத்திலே கூடுதலாக தெரு விளக்குகள் போடப்பட்டு வருகின்றன என்பதையும் வரவேற்கிறோம். ஆனால் இப்படிப் பாராட்டுகின்ற நேரத்திலே, டிரான்ஸ்பார்மர் களுடைய கெபாசிட்டிக்குத் தகுந்தவாறு மின்இணைப்புக் கொடுக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். ஏனென் றால், கிராமப்புறங்களிலே இப்போது 'வோல்டேஜ் டிராப்' அதிகமாக இருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக் கின்ற நேரத்திலே, அந்தப் பகுதியிலே வோல்டேஜ் டிராப் இருந்தால் அதை இம்ஃப்ரூவ் செய்வதற்காக நாம் சப்-ஸ்டேஷன் களை அமைத்துக் கொள்வதற்கு எல்லாவித நடவடிக்கைகளை யும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் கிராமப்புறங்களிலே இருக்கின்ற மின்சார மோட்டார்களையும், தெரு விளக்குகளையும், வீடுகளிலே விளக்குகள் முறையாக எரி வதற்கும் மின் இணைப்பு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு இணையாக டிரான்ஸ்பார்மர்களுடைய கெபாசிட்டியை உயர்த்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1992 மே 5] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

முற்பகல் 11–50

கிராமப்புறங்களிலே இன்றைய தினத்திலே பராமரிப்பு
வேலைகளைச் செய்வதற்காக மின்சார வாரியத்திலே ஏழு
டிரான்ஸ்பார்மர்களுக்கு ஒரு வயர்மேன், ஒரு ஹெல்ப்பர்
என்ற முறை கையாளப்பட்டு வருகின்றது. ஒரு டிரான்ஸ்பார்மரி
லிருந்து மின் இணைப்புகள் கிட்டத்தட்ட இரண்டு கிலோ
மீட்டருக்கு அதிகமாகக் கூடக் கொடுத்திருப்பதை நாம் அனை
வரும் நன்கு அறிவோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிராமப்
புறங்களிலே இருக்கின்ற தெரு விளக்குகள், விவசாய மோட்டார்
களுக்கு அவர்கள் முறையாகப் பராமரிப்பு வேலை செய்ய
முடியுமா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே
தான் இந்த அரசைப் பொறுத்தமட்டிலே 3 டிரான்ஸ்பார்மர்
களுக்கு ஒரு வயர்மேன், ஒரு ஹெல்ப்பர் என்ற முறையை நீங்கள்
அமலாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தினுடைய மின்சார வாரியத்
திலே பணியாற்றுகின்ற 'கான்ட்ராக்ட் லேபர்கள்' அவர்களைப்
பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்பதற்காக உச்ச நீதிமன்றத்
திற்குச் சென்று, உச்சநீதிமன்றமும், காலித் என்ற நீதிபதியின்
தலைமையிலே ஒரு கமிஷனை அமைத்தார்கள். ஆனால், உச்ச
நீதிமன்றத்திற்குச் சென்றவர்கள் சேலம் மாவட்டத்தினுடைய
ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும்,
சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி. போன்ற சங்கங்களைச் சேர்ந்தவர்
களுமே தவிர, மற்ற மாவட்டங்களிலே இருக்கின்ற காங்கிரஸ்
கட்சியைச் சார்ந்த சங்கங்களோ அல்லது அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சங்கங்களோ உச்சநீதி
மன்றத்திற்குச் செல்லவில்லை : ஆகவே, இந்த 'காலித் கமிஷ
னிலே' இவர்கள் கொடுத்த அந்தப் பட்டியலிலே கிட்டத்
தட்ட 18,000 பேர்களை மட்டும் அவர்கள் சேர்த்துக் கொண்டு,
காங்கிரஸ் சங்கங்களைச் சார்ந்தவர்களையும், அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக சங்கங்களைச் சார்ந்தவர்களையும்
அந்தப் பட்டியலிலே இணைக்காமல், எந்தச் சங்கங்களையும்
சார்ந்திடாதவர்களையும் அந்தப் பட்டியலிலே சேர்க்காமல்
இருந்த காரணத்தால் இன்றைய தினத்திலே 'காலித் கமிஷன்'
பட்டியலிலே சேர்க்கப்பட்டவர்களுக்கு மட்டும்தான் முன்
னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடந்த 10 ஆண்டுக்
காலமாக மின்சார வாரியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிற
'கான்ட்ராக்ட் தொழிலாளர்கள்' அத்தனை பேரையும் அந்தப்
பட்டியலிலே சேர்த்து, சீனியாரிட்டி அடிப்படையிலே நீங்கள்
பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே
கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, தூத்துக்குடி, எண்ணூர், மேட்டூர் போன்ற
மின்சார வாரியங்களிலே 'கோ-ஆப்பரேடிவ் சொஸைட்டி
தொழிலாளர்கள்' பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்

கள் கடந்த 5, 6 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 5 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றுகின்ற தொழிலாளர்களை சீனியாரிட்டி அடிப்படையிலே பணி நிரந்தரம் செய்வதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே கல்வித் தகுதி அடிப்படையிலே பணி நியமனம் செய்யப்பட்டது. சீனியாரிட்டி அடிப்படையிலே பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. ப்ரையாரிட்டி அடிப்படையிலே டிரான்ஸ்பர் பாலிஸி நடைமுறைப்படுத்தப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இவையெல்லாம் கைவிடப்பட்டது. ஆகவே, மறுபடியும் இந்த அரசு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே என்ன முறை கையாளப்பட்டதோ அந்த முறையைக் கையாள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசினுடைய மற்ற இலாக்காக்களிலே கணவன் மனைவி ஒரே இடத்தில் பணியாற்றுவதற்கு வழிவகை செய்து கொடுக்கிறார்கள். அதேபோல மின்சார வாரியத்திலே பணியாற்றுகின்ற கணவனும், மனைவியும் ஒரே இடத்தில் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு வாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு தற்போது 1992 ஜனவரி 1 முதல் 11 சதவிகித அகவிலைப்படி உயர்வைக் கொடுத்து இன்றையதினம் அரசு ஊழியர்களுக்கு வழங்கியிருக்கிறது. அந்த அகவிலைப்படியை மின்சார வாரியத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1988 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தினுடைய நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, மின்சார வாரியத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு 50 யூனிட் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்ற ஒரு ஒப்பந்தம் உருவாகி இருக்கிறது. அந்த ஒப்பந்தம் இதுவரையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அரசு மீண்டும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதே போன்று பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பம் செய்யப்படுகின்ற நேரத்தில், உதாரணமாக கூடிய விரைவிலே 'ஆரோமேட்டிக்' தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகின்ற நேரத்திலே அந்த தொழிற்சாலையைச் சேர்ந்தவர்களே அந்த தொழிற்சாலைகளுக்கு தேவையான மின்சார உற்பத்தியைச் செய்துகொள்ள வேண்டும் என்று அரசு ஒரு அறிவுரை வழங்குவதற்கு முன்வருமானால், மின்சார வாரியத்தின் மூலமாக உற்பத்தி செய்கின்ற மின்சாரம் விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :
திரு. எம். ஜி. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கண்மணித் தலைவர், பொன்மணிச்
செல்வன் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். என்னும் மாமனிதருக்குப்
பின்னால் இருள் சூழ்ந்த தமிழர்கள் வாழ்வில் வெளிச்சத்தை
பாய்ச்சி தமிழர் நெஞ்சமெல்லாம் ஒளி விளக்காக வாழ்ந்து
கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியினுடைய
1992-93 ஆம் ஆண்டிற்கான மின்சார வாரிய நிதிநிலை
அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை தந்தமைக்காக
நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக மின்வாரிய வரலாற்றிலேயே மாண்புமிகு புரட்சித்
தலைவி ஆட்சியில்தான் பல சாதனைகளை புரிந்து இந்திய
துணைக் கண்டத்திலேயே உள்ள பல்வேறுபட்ட மின்சார
வாரியங்களிலேயே தமிழ்நாடு மின்சார வாரியம் தான் சிறந்த
தாக விளங்கிக் கொண்டு இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, கிராமங்களுக்கு மின்விளக்கு வழங்
கும் திட்டத்தில் தமிழகத்தில் உள்ள 15,831 கிராமங்
களில் இதுவரை 15,722 கிராமங்கள் புரட்சித் தலைவி
ஆட்சியில் விரைவுப்படுத்தப்பட்டு மின்மயமாக்கப்பட்டுள்
ளன. தமிழகத்தில் இன்னும் 9 கிராமங்களுக்கு தான் மின்
சாரம் வழங்கப்படவேண்டும். அதுவும் துரிதமாக நடந்து
இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகம்
மட்டும்தான் முதன்மை வகிக்கின்றது. கிராமங்களுக்கு மின்
சாரம் வழங்குகிற சூழ்நிலை உருவாக்கியிருக்கின்றது என்ற
பாராட்டினை இன்றைக்கு புரட்சித் தலைவி ஆட்சியானது
பெற்றுக் கொண்டிருக்கிறது.

இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த
குடிசைகளுக்கு மின் ஒளி வழங்குகின்ற அருமையான திட்டம்.
இதுவரை, 9 லட்சத்து 72 ஆயிரத்து 293 குடிசைகளுக்கு
மின்னொளி புரட்சித் தலைவர் ஆட்சியில் வழங்கப்பட்டிருக்கிறது.
அதே போன்று மலைவாழ் மக்களுக்கு 47,845 குடியிருப்பு
களில் 47,760 குடியிருப்புகளுக்கு இதுவரை மின் ஒளி வழங்
கப்பட்டு இருப்பது மிக மிக பாராட்டப்படக்கூடிய ஒன்
றாகும்.

அதேபோல, விவசாயிகளுக்கு மின் இணைப்பை வழங்கு
வதில் 13,58,789 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
இது தவிர ஆண்டுதோறும் 40 ஆயிரம் விவசாயிகளுக்கு மின்
இணைப்பு வழங்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித்
தலைவி ஆணை பிறப்பித்துள்ளது மிகமிகப் பாராட்டப்படக்
கூடிய ஒன்றாகும்.

[திரு எம். ஜி. சேகர்] [1992 மே 5

மாண்புமிகு தங்கத் தலைவி புரட்சித் தலைவி ஆட்சித் தொடங்கப்பட்ட உடனேயே அறிவித்த அறிவிப்பின்படி விவசாய மின் இணைப்புக்கு ஆகும் செலவோ அல்லது ரூ. 25 ஆயிரம் பணம் கட்டுகின்றவர்களுக்கு உடனே மின் இணைப்பு வழங்கப்படுகின்ற திட்டமானது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். காரணம் பணம் உள்ள வசதி படைத்தவர்கள் பணம் கட்டி மின் இணைப்புப் பெற்று விடுவதால், ஏழை விவசாயிகளுக்கு வரிசை அடிப்படையில் அல்லது முன்னுரிமை அடிப்படையில் உடன் மின் இணைப்பு விரைவாக கிடைக்க நல்ல வாய்ப்பு இன்றைக்கு உருவாகி யுள்ளது.

அதேபோல நிலக்கரி பற்றாக்குறை, போதுமான மழை யின்மை போன்றவைகள் இருந்தாலும் கூட, இன்றைக்கு கோடைக் காலத்திலே மின் வெட்டுகள் ஏற்படாமல். எந்த ஆட்சியிலும் இந்த மாதிரி இருந்தது இல்லை என்று சொல்லத் தக்க அளவுக்கு புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் இன்றைக்கு மிக மிக அற்புதமான ஒரு நிர்வாகத்தை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

அதேபோன்று மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் நான்காவது ஐந்தாவது கட்ட மின் உற்பத்தி திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். அதேபோல வடசென்னை அனல் மின்நிலைய வேலைகள் துரிதமாக்கப் பட்டு வருகின்றன. கடலூர், ஜெயங்கொண்டான் ஆகிய திட் டங்களுக்காகவும் நிதியாண்டு ரூ. 4 ஆயிரம் கோடிக்கு மேல் ஆகின்றதால் தமிழக நிதி நிலைமையைக் கருதி தமிழகத்தில் இனி மின் வெட்டே வரக்கூடாது என்பதற்காக இன்றைக்கு அந்த ஒரு நல்ல திட்டத்தை தனியாரால் செயல்படுத்தி தமிழக மக்களுக்கு மின்சாரம் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று அவர்களுக்கு ஒப்படைத்திருப்பதானது அது வும் ஒரு பாராட்டப்படக் வேண்டிய நல்ல திட்டமாகும்.

நண்பகல் 12-00

குறிப்பாக, தூத்துக்குடி அனல் மின் நிலைய திட்டம் சிறப்பாக செயல்படுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் தமிழக அர சானது இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து பரிசினை பெற்று வருகிறது.

அதுபோல இன்னொன்று. காற்றாடியின்மூலம் மின் உற் பத்தி செய்வதில் இந்தியாவிலேயே தமிழகம் சிறந்து விளங்கு வதற்கான பரிசினை தற்போதைய மின்துறை அமைச்சர் அவர்கள் பெற்றிருப்பதானது நம்முடைய அரசுக்குக் கிடைத் திருக்கிற மிகப் பெரிய சிறப்பாகும்.



1992 மே 5] [எம். ஜி, சேகர்]

தொழிற்சாலைகளுக்கும், வீடுகளுக்கும் ஏற்படும் குறைந்த மின் அழுத்தக் குறைவை நீக்கும்பொருட்டு, புரட்சித் தலைவி யின் ஆட்சியில் 40-க்கும் மேற்பட்ட துணை மின் நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளது வரலாற்று சிறப்புமிக்க ஒரு நல்ல திட்டமாகும்.

வாரியத்திலிருந்து மின் இணைப்பு வழங்குவதில் உள்ள சில சட்டத் திட்டங்களை சிறிது தளர்த்த வேண்டும். குறிப்பாக, தமிழகத்தை இந்திய துணை கண்டத்திலேயே தொழில் துறையில் முதன்மை இடத்திற்கு கொண்டுவர தொழில் துறையில் பல திட்டங்களை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களின் எண்ணம் நிறைவேற, பெரிய தொழிற்சாலைகள், நடுத்தர தொழிற்சாலைகள், புதிதாக வீடு கட்டுபவர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் மின் இணைப்பு வழங்க, அதற் கான பத்திரம், தொழிற்சாலையின் கட்டிட வரைபட ஒப்பு தல் போன்றவைகள், அதுபோல, எம்.எம்.டி.ஏ. அப்ரூவல் போன்றவர்களும், பல்வேறுதேவையற்ற அனுமதிகளை எல்லாம் வாங்க வேண்டுமென்ற சூழ்நிலையும், அதற்கு பிறகு மின் இணைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்ற முறையும் இன்றைக்கு வீணாக கால விரயத்தை ஏற்படுத்து கிறது. புதிய தொழில் தொடங்க தமிழகம் வருபவர்கள் இதில் ஏற்படும் கால அவகாசத்தை கருதி வேறு மாநிலங் களுக்கு இன்றைக்கு போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த குறையை நீக்க வேண்டும்.

அடுத்து நடுத்தர தொழிற்சாலை, பெரிய தொழிற் சாலை தொடங்குபவர்கள் தமது தொழிற்சாலைக்கு எவ் வளவு முதலீடு செய்கிறார்களோ அதில் 50 சதவிகிதத்துக்கு மேல் மின் இணைப்பு பெறுவதற்கு மின் அழுத்தக் குறைவு ஏற்படாமல் இருக்க கெப்பாசிடர் பொருத்த செலவு செய்ய வேண்டி யிருக்கிறது. அதிலும் பழைய முறையை கொண்டு வந்தால் அவர்களுக்கு துணை புரிவதாக இருக்கும்.

அடுத்து, மின் வாரியத் தலைவராக ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரி நியமிக்கப்படுகிறார். அவருக்குப் பதிலாக ஒரு பொறியாளரை நியமித்தால் அது இந்த அமைப்பினை சீர் படுத்த, விரைவுபடுத்த துணை புரிவதாக இருக்கும். காரணம் ஆந்திரா, கர்நாடகா, குஜராத் போன்ற மின் வாரி யங்களில் ஒரு பொறியாளரையே அங்குள்ள நிர்வாகங்களில் தலைவராக நியமித்திருப்பதைப் பார்க்கும்போது இங்கே யும் அந்த இடத்திலே ஒரு பொறியாளரைத் தலைவராக நிய மித்தால் இந்த வாரியம் சிறப்பாக செயல்பட வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல, இந்தியாவிலேயே சிறந்த மின்வாரியமாக செயல்பட்டு வரும் நமது தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு தருவதில் தேக்க நிலை உள்ளது. தமிழ்நாடு போக்குவரத்துத் துறையில் உள்ளது போல கால வரம்புக்கு உட்பட்ட பதவி உயர்வு, டைம் பவுண்ட் புரமோசன் அளித்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, போக்குவரத்து பணியாளர்களின் பிள்ளை கள் படிப்பதற்கு ஒரு பொறியியல் கல்லூரி இருக்கிறது. அதுபோல உள்ளாட்சித் துறை பணியாளர்களுக்கென்று ஒரு பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட உள்ளது. எனவே, முழுவதும் பொறியாளர்களையே நம்பியிருக்கும் மின் வாரி யப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கென்று ஒரு பொறியியல் கல்லூரியை ஆரம்பித்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு அருமையான திட்டத்தை கொண்டு வந்தார்கள். அதாவது 5 நாள் வாரத்தில் பணி யாற்றி 2 நாள் விடுமுறை வழங்குகின்ற திட்டம். அதை மின்வாரியப் பணியாளர்களுக்கும் நடைமுறைப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய அனல் மின் திட்டமான வடசென்னை மின் திட்டத்திற்கு இருண்டு கிடந்த தமிழகத்தை ஒளிமயமாக்கிய புரட்சித் தலைவியின் பெயரால் 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அனல் மின் நிலையம்' என்று பெயர் சூட்டினால் அது இன்றைக்கு இருண்டு கிடந்த இல்லங்களில் எல்லாம் ஒளி விளக்காக விளங்கிக் கொண்டிருக் கிற அவர்களுடைய பெயரை வைப்பதானது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதால் அந்தப் பெயரை சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தர்மபுரி மாவட்டத்தில் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 250 கோடி ரூபாய் மதிப் புள்ள ஒகேனக்கல் குடிநீர்த் திட்டமானது இன்றைக்கு கிடப்பில் இருக்கிறது. இத்திட்டம் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களும் புரட்சித் தலைவர் அவர்களும் இணைந்து கொண்டு வந்த திட்ட மாகும். மீண்டும் இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்வதுடன், மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப் படியை மின்வாரிய ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று தெரிவித்து வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியை தெரி வித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. தம்பு சாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இன்றைய தினம் மின் வாரிய அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிற புதிய மின் உற்பத்தித் திட்டத்தை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இந்தத் திட்டங்கள் எதிர்காலத்தில் செயல்படுகிற போது இந்தத் திட்டங்கள் தனியார் கைக்கு மாறுவதைத் தவிர்த்து அரசே நேரடியாக நிறைவேற்றுவதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி திட்டங்களை நிறைவேற்று கின்றபோது ஒரு பொருளாதார நெருக்கடியின் விளைவாகவே தனியாரிடம் விடப்படுகின்ற ஒரு அபாய சூழ்நிலை இருக் கிறது.

அந்தப் பொருளாதார நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக, மற்ற துறைகளுக்குக் கடன் வழங்கக்கூடிய வங்கிகள் இருப்பது போல, பணத்தை சேமித்துக் கொடுக்கும் வங்கிகள் இருப்பது போல, மின்சாரத் துறைக்கும் ஒரு வங்கியை ஏற்படுத்தி, அதன்மூலம் தொழிலதிபர்கள், வசதி படைத்தவர்கள் அந்த வங்கியில் பணம் போடும் சூழ்நிலையை ஏற்படுத்தி, அந்தப் பணத்தை பயன்படுத்தி எதிர்காலத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

பிற்பகல் 12–05

புதிய திட்டங்கள் என்று சொல்கிறபோது, கிழக்குத் தஞ்சை மாவட்டத்திலே பிள்ளைபெருமாள்நல்லூரிலே ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு அந்தத் திட்டத்தை செயல்படுத்த இருப்ப தாக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் போல நாகை வட்டத்தில் காமேஸ்வரத்தில் ஒரு அனல் மின் திட்டத்தை உருவாக்குவதற்கு நிலங்கள் எல்லால் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அந்தத் திட்டம் இப்போது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அது எதிர் காலத்தில் நிறைவேற்றப்படுமா? அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் அந்தப் பகுதியிலே நில வாயு அதிகமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலவாயு முழுமையையும் ஒழுங்குபடுத்த முடியாமல் ஆங்காங்கே எரித்துக் கொண்டிருக்

கிறார்கள். அந்த நில வாயுவைப் பயன்படுத்தி வெங்கிடக்
காலில் 5 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய
வாய்ப்பு உள்ளது. அப்படிப்பட்ட வாய்ப்புகளை ஏற்படுத்தி
அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடு
களை அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து மின்சாரம் வழங்குவதை ஒழுங்குபடுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறுவிதமான பகுதிகளில்
முறையாக மின்சாரம் சென்றடைவதில் சிக்கல் இருக்கிறது.
உதாரணத்திற்குச் சொன்னால், ஒரு கிராமத்திற்கு மின்சாரம்
நேரடியாகச் செல்வதை விட்டு, பல கிராமங்கலைச் சுற்றி.
போவதால் அதிகமான மின்சாரம் விரயமாகிறது. அதுமட்டு
மல்ல, அந்த மின்சாரத்திற்குப் பயன்படுத்தக்கூடிய சாதனங்கள்
மிகவும் பழமையான சாதனங்களாக இருக்கின்றன. அப்படி
பழமையான சாதனங்களாக இருக்கிற காரணத்தால்
கிராமப்புறங்களில் பல்வேறுவிதமான ஆபத்துக்கள் ஏற்படு
கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்
சென்ற ஆண்டு மோகனூரில் மின்சாரக் கம்பி அறுந்து, 4 பேர்கள்
இறந்தார்கள். அதேபோன்று திருவாரூருக்கு—அருகிலுள்ள
வேலங்குடியில் ஏறத்தாழ 10, 12 வீடுகள் மின்சாரக் கம்பி
அறுந்து விழுந்ததால் எரிந்தன. அதைப்போல திருவாரூர்
தொகுதியில் புதுப்பத்தூரில் மின்சாரக் கம்பி அறுந்து விழுந்து
ஏறத்தாழ 10, 12 வீடுகள் பட்டப் பகலில் எரிந்து, சேத
மாகியது. அதைப்போல பழைய மின்சார சாதனங்களாக
இருக்கிற காரணத்தால் அவை அறுந்து விழுந்து அவ்வப்போது
உயிர்ச்சேதத்தையும், உடைமைச் சேதத்தையும் ஏற்படுத்தி
வருகிறது. அப்படிப்பட்ட பழமையான சாதனங்களை மாற்று
வதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில்
கிராமங்களிலே குறைந்த மின் அழுத்தம் இருக்கிறது. உதா
ரணத்திற்குச் சொன்னால் கீவளூர் ஒன்றியம் முழுவதும் குறைந்த
மின் அழுத்தம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அதிகாரிகளோடு
தொடர்பு கொண்டு, இப்படி மின் அழுத்தம் ஏற்படுவதற்குக்
காரணம் என்ன என்று கேட்டால், போதுமான அளவுக்கு
மின் மாற்றிகள் இல்லை. போதிய அளவுக்கு மின் மாற்றிகள்
இருந்தால் இந்த நிலைமையை மாற்ற முடியும் என்று கூறு
கிறார்கள். எனவே இதுபோன்ற பகுதிகளில் விரைவாக
மின் மாற்றிகளை மாற்றி, குறைந்த அழுத்த மின்
சாரம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதே நேரத்தில் மின் மாற்றி சாதனங்களைப் பழுது
பார்ப்பது இன்றையதினம் தனியாரிடத்தில் ஒப்படைக்கப்படு
கிறது. ஆதலால் காலதாமதம் ஏற்படுகிறது. மறுபுறத்தில்
அது எந்த அளவுக்கு உறுதியாகச் செயல்படுகிறது என்பது



பிரச்சினையாக இருக்கிறது. அதுமாதிரி மின் மாற்றிகளைத்
தனியாரிடம் பழுது பார்க்க ஒப்படைப்பதைவிட மின்சாரத்
துறையிலே திறமை வாய்ந்த பொறியாளர்களைக்
கொண்டு அதை நல்ல முறையிலே பழுது பார்த்து, பயன்படுத்த
வேண்டும். தனியாரிடம் ஒப்படைப்பதை அரசு பரிசீலித்து,
கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கிராமங்களில் உள்ள மின்சாரக் கம்பங்கள்
முழுவதும் சாய்ந்த நிலையில் இருக்கின்றன. அந்தப் பகுதி
மழை, வெள்ளம், புயல் பகுதியாக இருக்கிற காரணத்தால்
அவை முழுவதும் எதிர்காலத்தில் ஆபத்தை விளைவிக்கும்
சூழ்நிலை இருக்கிறது. அதில் விரைவான நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

அது போன்று அந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய ஒப்
பந்தத் தொழிலாளர்கள்—ஏறத்தாழ தமிழகம் முழுவதும்
28,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.
அந்த 28,000 ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய நீண்ட நாள்
பிரச்சினைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அரசு
காலித் தலைமையில் ஒரு கமிட்டியை நிறுவியது. அந்தக
கமிட்டி பரிசீலித்து அந்தக் கமிட்டியினுடைய தீர்ப்பாக 18,000
ஒப்பந்தத் தொழிலாளர்களை அரசு நிரந்தரத் தொழிலாளர்
களாக மாற்ற வேண்டும் என்று தீர்ப்பளித்தது. அந்த தீர்ப்பை
உச்ச நீதிமன்றமும் அளித்திருக்கிறது. ஆனால் அரசைப்
பொறுத்தவரையில் 4,107ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம்
ஆக்குவோம் என்று வாரியம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால்
இன்று வரையிலும் 1,799 ஊழியர்கள்தான் நிரந்தரமாக்கப்
பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை என்பது நீண்டுக்
கொண்டிருக்கிறது. ஆகவே அரசு விரைவாக அந்தத் தீர்ப்பை
அமல்படுத்தி அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கு குறைந்த
பட்ச உத்திரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால்
28,000 தொழிலாளர்கள் இருந்தாலும் அவர்கள் பத்து ரூபாய்,
20 ரூபாய் என்றுதான் சம்பளம் பெற்று அவர்களுடைய
வாழ்க்கை மிகவும் மோசமான நிலையில் இருப்பதை மாற்ற
அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அந்த நேரத்தில் இந்த ஒப்பந்த தொழிலாளர்களைப்
பொறுத்த வரையில் ஒரு தனி நபர் மூலம் சிலர் அமர்த்தப்படு
கிறார்கள். அப்படி அமர்த்தப்பட்டு அந்த ஒப்பந்தத் தொழி
லாளர்கள் மின் வாரியத்திலே பணியாற்றுகிறார்கள். பாது
காவலர்களாக, பல்வேறு ஊழியர்களாக மின் வாரியத்தில்
பணியாற்றுகிறார்கள். அப்படி பணிபுரிகிற மின் வாரிய ஊழியர்
களுக்கு அந்த வாரியமே சம்பளம் கொடுப்பதை

தவிர்த்து இன்னுமொரு தனி நபர் மூலமாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்தச் சம்பளத்திலே அவர்கள் கொஞ்சம் பிடித்துக் கொண்டு அந்த தொழிலாளிக்கு கொடுக்கிறார்கள். உதாரணத்திற்கு திருவாரூரில் உள்ள அந்த யூனிட்டில் வேலை பார்க்கக் கூடிய ஏறத்தாழ முப்பது, நாற்பது தொழிலாளர்கள் கும்பகோணத்தில் இருக்கிற ஒரு தனியார் மூலம் அமர்த்தப்பட்டு நான்கைந்து ஆண்டுக் காலமாக பணி புரிந்து கொண்டிருந்தார்கள். தனியார் மூலம் குறைந்த சம்பளம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டாலும்கூட எதிர்காலத்திலே எப்படியாவது தங்களுக்கு அரசின் மூலம் வேலை வாய்ப்பு உருவாகும் என்ற முறையிலே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். மின்சாரத்திலே திருட்டு போய்விட்டது. ஆனால் அந்தத் திருட்டை அந்த தொழிலாளர்களே கண்டு பிடித்து மின் வாரியத்திற்கு ஒப்படைத்தார்கள். ஆனால் அத்தகைய திருட்டு சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு, ஒப்பந்தப்படி முழு பொறுப்பு ஏற்க வேண்டியவர் அந்த தனி நபர்தான். ஒப்பந்தப்படி அந்தத் திருட்டுக்கு அவர் பொறுப்பு ஏற்பதற்குப் பதிலாக அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கக் கூடிய சம்பளம் ஏறத்தாழ நான்கைந்து மாத காலமாக வழங்கப்படாமல் உள்ளது. இதனால் அவர்களுடைய குடும்பம் பட்டினி கிடக்கும் சூழ்நிலை இருக்கிறது. அத்தகைய திருட்டுக்கு தனியார்தான் பொருப்பு என்று ஒப்பந்தம் இருந்தும்கூட அந்த ஒப்பந்தத்தை அமல்படுத்தாததால் அவர் மீது வாரியம் நடவடிக்கை எடுக்காததால் அந்தத் தொழிலாளிகளுக்கு சம்பளம் பட்டுவாடா செய்யாமல் ஐந்து மாத காலமாக அவர்கள் பட்டினியில் இருக்கிறார்கள். தங்களுக்குச் சம்பளம் வேண்டும் என்பதற்காக கடந்த இரண்டு மூன்று நாட்களில் திருவாரூர் மின் வாரியத்தின் மூலம் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆகவே இந்த விஷயத்தை உடனடியாக அரசு பரிசீலித்து அவர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைய தினம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அறிக்கையிலே சொல்லியிருப்பதைப் போல 5 இலட்சம் பேர்கள் இன்றைய தினம் மின் இணைப்புக்கு மனு போட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்து அவர்களுக்கு மனு போட்ட அடிப்படையிலே முன்னுரிமையைக் கொடுத்து சீனியாரிட்டிபடி அவர்களுக்கு மின் சாரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மாறாக 25 ஆயிரம் ரூபாய் கட்டினால்தான் மின்சாரம் வழங்க அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும், 25 ஆயிரம் ரூபாய் கொடுத்து மேலும் அதை பார்வையிடுவதற்காக 500 ரூபாய் கட்ட வேண்டும் என்றும் இருக்கிறது. அதனால் வசதி படைத்தவர்கள் அப்படி பணம் கட்டி மின்சாரத்தைப் பெற்றுவிட முடியும். ஆனால் சாதாரண விவசாயிகள் அப்படி



பணம் கட்டி மின்சாரம் பெற முடியாது. எனவே அரசு பரிசீலித்து அந்த 25 ஆயிரம் ரூபாய் கட்டினால்தான் முன்னுரிமை வழங்கப் படும் என்பதை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அதே நேரத்தில் ஒரே சமச்சீராக ஒரு யூனிட்டுக்கு 50 காசுகள் மின்சாரத்திற்கு வசூலிக்கப்படுகிறது. விவசாய உற்பத்திக்கு மிகப் பெரிய அளவிற்கு நாட்டிலே நெருக்கடி இருக்கிறது என்பதை நாம் அறிவோம். நாட்டிலே உற்பத்தி போதாததால் மற்ற மாநிலங்களிலிருந்து நாம் இறக்குமதி செய்கிறோம். அப்படிப்பட்ட நெருக்கடியில் உள்ள விவசாயத் தொழிலுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அதற்கு வசூலிக்கக்கூடிய 50 காசுகள் என்பதை அரசு பரிசீலித்து கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யூனிட்டுக்கு 50 காசு வசூலிக்கப்படுவதாகச் சொல்கிறார். விவசாயத்திற்கு எங்கே யூனிட்டுக்கு 50 காசு வசூலிக்கப்படுகிறது என்பதைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: இந்த அறிக்கையில் நிரந்தரமாக யூனிட்டுக்கு 50 காசு வசூலிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்து, இலவச மின்சாரம் என்பதற்கு மாறாக, குதிரைச் சக்திக்கு ரூ. 150 கட்ட வேண்டுமென்று இருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்து கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் திரும்பத் திரும்ப கேட்டுக் கொள்வதெல்லாம், விவசாயிகள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாட்டில் உள்ள அனைத்து விவசாயப் பிரிவினருக்கும் சீராக ஒரே கட்டண விகிதமாக யூனிட்டுக்கு 50 காசு வசூலிக்கப்பட வேண்டுமென்று மைய அரசு வற்புறுத்தி வருகிறது. இதுகுறித்து ஒரு முடிவு காண, விவாதம் தேவை என்றுதான் இதிலே கூறப்பட்டு இருக்கிறதே தவிர, வேறல்ல.

திரு. வே. தம்புசாமி: மைய அரசு வற்புறுத்தியிருப்பதை தமிழக அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு ஏற்கெனவே கடுமை

யான பிரச்சினை இருக்கிறது. விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் பசி, பட்டினி போன்ற சூழ்நிலை ஏற்படும் அபாயம் இருப்பதால் அதிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால், விவசாயத்துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். விவசாயத்துறை முன்னேற்றப்பட வேண்டும்.

இன்னும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக விவசாய உற்பத்தி செய்ய வேண்டிய ஒரு கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். எனவே, இந்த நிலைமையில், மத்திய அரசு 50 காசு ஒரு யூனிட்டுக்கு சராசரியாக வசூலிக்கவேண்டுமென்று கூறியிருப்பதை தமிழக அரசு ஏற்கக்கூடாது என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதுபோன்று ஒரு குதிரைச் சக்திக்கு 150 ரூபாய் கட்ட வேண்டுமென்று இருப்பதை அரசு பரிசீலித்து, விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற வகையில் உற்பத்திப் பெருக்கத்திற்கேற்ற வகையில், அதையும் கைவிடவேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பஞ்சாயத்துக்கள், 4, 5 ஆண்டுகள் பணம் கட்டியும், அங்கெல்லாம் மின்சாரம் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. அப்படி, பணம் கட்டி இருக்கிற பஞ்சாயந்துக்களுக்கு முன்னுரிமை கொடுத்து அங்கேயுள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருவாரூர் தொகுதியில் ஏறத்தாழ 10-12 பஞ்சாயத்துக்கள் அப்படி பணம் கட்டி, இன்னமும் அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வரவில்லை. அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு வேகமாக அதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு விளக்குத் திட்டத்தை விரைவாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கீவளூர் பகுதியில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக அரசு அலுவலகங்கள், குறிப்பாக, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கூட கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, குறைந்த மின் அழுத்தம் உள்ள நிலைமைகளையெல்லாம் மாற்றி, மின்சாரம் சீராக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களை கூற அனுமதி தந்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ. து வரதராஜன்.

*திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு மின்சார வெட்டு இருந்தது என்ற வகையில் விவசாயமும்,



தொழிற்சாலைகளும், இல்லங்களும், வியாபாரிகளும் பாதிக்கப்பட்டு, விலைவாசி உயர்வு ஏற்பட்டிருந்தது. ஆனால் தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் மின்வெட்டு அடியோடு இல்லை என்ற நற்செய்தியை அறிந்து தமிழக மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்த்தி, தங்கத் தலைவியைப் போற்றுகிறார்கள். இப்போது சம்மர் அதாவது கோடை கால சீசனாக இருந்தாலும் கூட, வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் ஒரு வாரத்திலேயே மின் இணைப்பு கொடுக்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கிறபோது, தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் மின் இணைப்பு வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்த்து மக்கள் போற்றுகிறார்கள். எதிர்காலத்தில் மின்சாரப் பற்றாக்குறையை எதிர்பார்த்து, ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரி எடுப்பதன் மூலம் மின்சார உற்பத்தி செய்து, எங்களுடைய தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் ஆவன செய்திருப்பதை மக்கள் சிறப்பாகப் போற்றுகிறார்கள். தமிழகத்திலே டிப்ளமா மற்றும் பி.ஈ. படித்துவிட்டு மின்சார வாரியத்தின் லைசன்ஸ் பெற்று அரசாங்கத்திலும், தொழிற்சாலைகளிலும் வேலை இடைக்காமல் சொந்தத்தில் குறைந்த மூதலீடுசெய்து வீடுகளுக்கும், பம்ப் செட்டுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் மின்சார வயரிங் செய்து மின் இணைப்புப் பெற்றுத் தருகிற பொறுப்பில் உள்ள இவர்கள் எச்.டி. லைன் மற்றும் எல்.டி. லைன்களில் வேலை செய்கிறார்கள்.

பிற்பகல் 12-20

இவர்கள் தற்காலிக விளக்குகளை அமைப்பதும், அலங்கார விளக்குகளை அமைப்பதும், ஒலிபெருக்கி அமைப்பதும் போன்ற வேலைகளைச் செய்கின்றனர். இதனால், இவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. இவர்களுக்கு அரசு எந்த குடும்ப நல நிதி உதவியையும் வழங்கவில்லை. கட்டிட வேலையிலே இருக்கின்ற கொத்தனார்களும், நெசவாளர்களும், மரம் ஏறுபவர்களும், மீனவர்களும், சலவைத் தொழில் செய்கின்றவர்களும், சலூன்களை வைத்து நடத்துகின்றவர்களும், அரசு ஊழியர்களும், தொழிற்சாலைகளிலே இருக்கின்ற ஊழியர்களும்— ஏன் வழக்கறிஞர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் குடும்பநல நிதிச் சலுகை வழங்குகின்ற அரசு, இவர்களுக்கு ஏன் சலுகை தரவில்லை என்பது தெரியவில்லை. ஆனால், இந்த ஆபத்தான மின்சார வேலை செய்கின்ற மின்சார ஒப்பந்தக்காரர்களுக்கு எந்தச் சலுகையும் வழங்குவது கிடையாது. இவர்கள் மின்சார கருவிகளான மெகர், ஆம்பியர் மீட்டர், வோல்ஃட் மீட்டர், லைன் டெஸ்டர் போன்ற கருவிகளை ஆயிரக் கணக்கில் செலவு செய்து வாங்கி, அரசுக்குப் பணம் கட்டி, டெஸ்ட் செய்து, சான்றிதழ் பெற்று,—சான்றிதழ் பெறவேண்டுமென்று ஆணை

பிறப்பித்து,—அதனால் அந்தத் தொழிலாளர்கள் மூலம் மின்சார
வாரியத்திற்கு இலட்சக் கணக்கான ரூபாய் வருவாய் வருகின்றது.
அதுமட்டுமல்லாமல், மின்சார வாரியத்திற்கு டெபாசிட்டாக,
லைசன்ஸ் பெறுவதற்கு டெபாசிட்டாக, ஈ.பி. லைசென்ஸ், ''சி''
லைசன்ஸ் பெறுகின்றவர்கள் ஆயிரம், இரண்டாயிரம் என்ற
அளவிலே பிக்சட் டெபாசிட் செய்ய வேண்டுமென்று கட்டளை
பிறப்பித்து இருக்கிறார்கள். நெசவாளர்கள், தொத்தனார்கள்,
மீனவர்கள் போன்றவர்களுக்கு அவர்கள் உறுப்பினர் ஆவதற்கு
10 ரூபாய், 20 ரூபாய் கட்டினால் கூட அவர்களுக்கு அரசு
வழங்கும் சலுகையான குடும்ப நல நிதி போன்றவை வழங்கி
அரசு ஆவன செய்து வருகின்றது. ஆனால், அங்கீகாரம் பெற்று
அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்து கட்டணம் கட்டி ஒப்பந்தக்
காரர்களாக இருக்கின்ற ஊழியர்களுக்கு எந்தச் சலுகையும்
இல்லை. அவர்கள் வேலை செய்யும் போது அந்த ஏழை மின்
சார ஊழியர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது. ஆனால்,
அவர்களுக்கு எந்தவிதமான மானியமும் வழங்கப்படுவதில்லை.
மற்ற தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போல, இந்த மின்
சார ஊழியர்களுக்கு அந்த ஆயுதங்களை வைத்து வேலை
செய்வதற்கு அரசின் சலுகையாக வழங்குவது கிடையாது. அவர்கள்
அலங்கார விளக்குகளை செய்கின்ற போதும், மின்சார ஒலி
பெருக்கி அமைக்கின்றபோதும், சில கட்டடங்களிலே மேலே,
இதுபோன்ற பெரிய பெரிய மாட மாளிகைகளிலே மின்சார
ஒயரிங் வேலை செய்கிறபோதும் அவர்கள் அங்கிருந்து மின்சாரத்
தினால் பாதிக்கப்பட்டு, ஏணியிலே இருந்து தவறி கீழே விழுந்து
விட்டால் கூட, அந்த ஏழை குடும்பத்தைச் சேர்ந்த மின்சார
ஒப்பந்தக்கார ஊழியர்களுக்கு எந்தவொருவிதமான சலுகைகளும்
வழங்கப்படுவதில்லை. இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்
களுக்கும், அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் எல்லோருக்கும்
பயன்படக்கூடியவர்கள் இந்த ஈ.பி. மின்சார ஒப்பந்தக்
காரர்கள். ஆனால், அந்த மின்சார ஒப்பந்தக்கார வர்க்கம்
என்று ஒன்று இருப்பதாக எதுவுமே அரசினுடைய கவனத்துக்கு
வராத காரணத்தினால், தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்
களுடைய ஆட்சிக் காலத்தில் அவர்கள் நீண்டக் காலமாக
மாநாடுகளும் சங்கங்களும் கூட்டி கேட்டு எந்தப் பலனும் இல்லாத
காரணத்தினால், இந்த தங்கத் தலைவி ஆட்சியில் மின்
ஒப்பந்தக்கார ஊழியர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில்
அவர்களுடைய இழப்பிற்கு,—சில ஊழியர்கள் இறந்துவிட்டால்
அவர்களின் ஈமச் சடங்கிற்குக் கூட பொது மக்களிடம்
வசூல் செய்து ஈமச் சடங்கு செய்கின்ற ஒரு அவல நிலை
இருக்கின்றது. அதைப்போன்ற ஊழியர்கள் இலட்சக்கணக்கில்
டிப்ளமா படித்துவிட்டு வேலை கிடைக்காமல் நீண்டகாலமாக
அவஸ்தை படுகின்றனர். திறமையாகப் பணியாற்றும் அந்த
ஊழியர்கள் அன்றாடம் வருகின்ற வருவாயை வைத்துக்கொண்டு
குடும்பத்தை நடத்துகின்ற அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்
டால், அந்தக் குடும்பம் நடுத் தெருவிலே நிற்கிறது. எனவே,



அந்தக் குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கின்ற சலுகை ஏதேனும் ஒன்றை இந்த தங்கத் தலைவியின் ஆட்சியில் அளித்தால் அந்த மக்களுக்கு நன்கு பயன்படும் என்பதனை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, மின்சாரமோ, சம்சாரமோ என்று கேட்டால், மின்சாரம் தான் வேண்டுமென்ற வகையில் அத்தியாவசியமான தேவையாக அது பொதுமக்களுக்கு தேவைப்படுகிறது. ஆனால், மின்சார வாரிய அதிகாரிகளோ தங்களை சிற்றரசர்களாக நினைத்து பொது மக்களும், வி.ஐ.பி.களும் அங்கே ஆபீசுக்கு சென்றால் அவர்களை மதிப்பது கிடையாது; அவர்கள் முரசொலி பத்திரிக்கையை படித்துக்கொண்டு, சீட்டிலே அமர்ந்து சிகரெட்டைப் பிடித்துக்கொண்டு, வருகின்றவர்களுக்கு பொறுப்பற்ற முறையிலே பதில் சொல்லிக்கொண்டு மிகவும் கடுமையாக நடந்து கொள்கிறார்கள்.

பிற்பகல் 12-25

நாங்கள் ஏதேனும் அவர்களை எதிர்த்துக் கேட்டால், உரிமையைக் கேட்டால், மின் இணைப்பை பத் தர தாமதம் செய்கிறார்கள். சாமான்கள் இல்லை என்கிறார்கள். டிரான்ஸ்பார்மர்கள் இல்லை, லோட் இல்லை என்று சொல்லி, இணைப்பை பத் தர மறுக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நான் சட்டமன்ற உறுப்பினராக ஆகி ஒரே ஒரு காரியம்தான் நடைபெற்றிருக்கிறது. பல மனுக்கள் கொடுத்தும் ஒரே ஒரு காரியம் தான் என்னுடைய தொகுதியிலே நடைபெற்றிருக்கிறது. நெரும்பூர் கூட்டு ரோடு இருக்கிறது. அங்கே இறங்கி, பட்ரகழனி என்கிற கிராமத்திற்கு, 3 கிலோ மீட்டருக்கு அங்கே சுற்றுப்புறத்திலே இருக்கிற கிராம மக்கள் சைக்கிளிலே அந்த எம்.இ.எஸ். ஆபீசுக்குச் செல்ல வேண்டும். வேறு பஸ் வசதியோ வேறு எதுவுமோ கிடையாது. ஆனால் இதைப்பற்றி எடுத்துச் சொல்கின்றபோது, அங்கேயிருக்கின்ற அதிகாரிகள், நியாயந்தான் என்று சொன்னார்களே தவிர, வேறு எதையும் செய்யவில்லை. பட்ரகழனி கிராமத்திலே இருக்கிற அந்த ஆபீசை நெரும்பூருக்கு மாற்றுவதற்கு மிகவும் சிரமப்பட்டோம். ஏ.இ.யைக் கேட்டால், ஏ. டி.யைக் கேளுங்கள் என்பார். டி.இ யைக் கேளுங்கள் என்பார். டி.இ.யைக் கேட்டதற்குப் பிறகு, சி.இ.யைக் கேளுங்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு எல்லோரும், இது நியாயந்தான் என்று சொன்ன பிறகும், இடம் இல்லை என்று சொன்னார்கள். இடம் வாங்கிக் கொடுத்ததற்குப் பிறகும் கூட அதை மாற்றுவதற்கு சிரமமாக இருந்தது. பொது மக்களுடைய கஷ்டங்கள் என்ன என்பதை உணர்ந்து செயல்படுவது கிடையாது. வி.ஐ.பி.யாக இருக்கிற என்னைப் போன்றவர்கள் இந்த மின்சார வாரியத்திற்குச் சென்று ஏதேனும் கேட்டால், அதற்குத் தகுந்த பதில்

சொல்வது கிடையாது. என்னிடத்திலே சொல்கிறார்கள், உங்களுடைய அமைச்சரைப் போய்க் கேளுங்கள், உங்களுடைய முதலமைச்சரைப் போய்க் கேளுங்கள், இந்தப் பொருள் இல்லை அந்தப் பொருள் இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். (மணி யடிக்கப்பட்டது). எனவே, மின்சார வாரியத்திலே பணியாற்று கிற அதிகாரிகள், எங்களைப் போன்றவர்கள் கொடுக்கின்ற கடிதத்திற்காகவாவது பதில் கொடுத்து, இந்த இந்தக் காரணங் களுக்காக இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது, இந்த இந்தக் காரணங்களுக்காக, இந்தந்தப் பணிகள் செய்யப்படு கின்றன என்பதையாவது எடுத்துச் சொல்வார்களானால் அது மிகச் சிறப்பாக இருக்கும்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்பாக்கத்திலே அனல் மின் நிலையம் இருக்கிறது. அந்த அனல் மின் நிலையம் இருக்கிற பகுதிகளிலே, மின்சார விளக்குகள் மிகப் பிரகாசமாக, மிகவும் வெளிச்சமாக எரிகின்றன. ஆனால், அதையொட்டி இருக்கிற புதுப்பட்டினம், சட்ரஸ் போன்ற பகுதிகளில், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த அந்த பகுதிகளில் உள்ள விளக்குகள் எல்லாம் கிருஷ்ணாயில் விளக்கைவிட மிகவும் கம்மியாக எரி கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கல்பாக் கம் பகுதியிலே இருக்கிற அந்த மின்சாரத்தை, டவுன்சிப்பை ஒட்டியிருக்கிற அந்தப் பகுதிக்காவது கொடுத்தால் நலமாக இருக்கும். (மணி அடிக்கப்பட்டது). கேள்வி நேரத்திலே கூட மாண்புமிகு அமைச்சரிடத்திலே ஒரு கேள்வியைக் கேட்கலாம் என்று இருந்தேன். ஊராட்சி மன்றங்களிலே மீட்டர் பொருத் தப்பட்டு, அந்த மீட்டரிலே இருக்கிறபடி என்ன கன்சம்ஷன் ஆகிறதோ, அதற்குத் தகுந்தபடி வசூல் செய்ய வேண்டும் என்று விதிமுறை இருந்தது. ஆனால் இப்போது கிராமங்களிலே மீட் டரே கிடையாது. அங்கே 100 லைட்டுகள் இருக்கிறது என் றால், அந்த 100 லைட்டுக்கும் ஆவரேஜ் போட்டு வசூல் செய் கிறார்கள். எனவே, இந்த 100 லைட்டுக்கும் ஆவரேஜ் போடு வதைவிட, எத்தனை லைட்டுகள் எரிகின்றனவோ, அத்தனை லைட்டுக்கு மட்டும் கட்டணத்தை வசூல் செய்தால், ஊராட்சி மன்றத்தினுடைய நிதிநிலைமையும் நன்றாக இருக்கும். அல்லது தகுந்த மீட்டர்களைப் பொருத்தினால் நன்றாக இருக் கும். அங்கே வோல்டேஜ் கம்மியாக இருக்கிற காரணத்தாலே டியூப் லைட்டுகள் எரியமாட்டேன் என்கிறது. இந்த 40 வாட்ஸ் டியூப் லைட்டுக்கு பதிலாக 60, வாட்ஸ் குண்டு பல்புகளைப் போடுவதற்காவது நீங்கள் அனுமதி கொடுப்பீர்கள் என்று சொன்னால், கிராமங்களிலே கொஞ்சம் வெளிச்சமாவது இருக் கும். (மணி அடிக்கப்பட்டது). அதற்கு ஆவன செய்ய வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவிற்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. கூறி முடித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு சட்டப்பேரவையினு டைய துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக் கான மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய விளக்குகள் எல்லாம், ஊராட்சி மன்றங்களாலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப் போது, அந்தந்த ஊராட்சி மன்றங்களிலே இருந்து தெரு விளக்குகள் போடக்கூடிய நிலைமை இருக்கின்றது. இதனால் பல் வேறு பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, மீண்டும் மின்சார வாரியமே, அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டால்தான் நன்றாக இருக்கும். ஊராட்சி மன்றங்களில் நிதிநிலைமை பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தால், தெருவிளக்கு போட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, மீண்டும் மின்சார வாரியமே, தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைத்து ஊராட்சி மன்றங்களில் உள்ள பராமரிப்பை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மின்சார வாரியத்தின் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், விவசாயிகளுக்கு பயன்படக்கூடிய டிரான்ஸ் பார்மர்கள் அங்கங்கே இருக்கின்றன. இதில் ஒரு டிரான்ஸ் பார்மர் கெப்பாசிட்டி 100 வாட்ஸ் அல்லது 200 வாட்ஸ் என்று இருந்தால் அந்த 200 வாட்சுக்கும் உட்பட்ட விவசாயி களுடைய விண்ணப்பங்களுக்கு அந்த மின் இணைப்பு கொடுக் கின்றபோது அதற்கு ஏற்றவாறு கொடுக்கவேண்டும். 200 வாட்ஸ் மின்சாரம் ஒரு டிரான்ஸ்பார்மரில் இருக்கும்பொழுது அதிலே 250 வாட்ஸ் கொடுக்கின்றபோது அது சரியாக இயங்க முடியவில்லை. பாதிப்பு ஏற்படுகின்றது. அப்படி பாதிப்பு ஏற் படும்பொழுது வேறு ஒரு டிரான்ஸ்பார்மரைக் கொண்டு வரு வதற்கு அந்தந்த மாவட்டத்தினுடைய தலைமை தலைநகரங் களிலே போய்தான் எடுத்து வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதில் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படி காலதாமதம் ஏற்படும் பொழுது அந்த விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு விவசாயத்திற்கான தண்ணீர் பயன்படுத்த முடியவில்லை. ஒருவாரம், இரண்டு வாரம் கூட ஆகின்றது. அந்த நிலைமையை மாற்று வதற்கு டிரான்ஸ்பார்மர் எப்போதுமே ஸ்டாக்கில் இருக்க வேண்டும். தலைமையிடத்தில் ஒரு ஸ்டாக் இருந்தால்தான் குறிப்பிட்ட நேரங்களில், 1, 2 நாட்களுக்கு உட்பட்டு, அந்த விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கமுடியும். மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆங்காங்கே இருக்கக்கூடிய தலைமையிடங் களில் அந்த டிரான்ஸ்பார்மர்களை இருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-30

அடுத்து ஒரு டிரான்ஸ்பார்மர் பழுதடையும்பொழுது அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளிடம் போய், அங்கேயிருக்கக் கூடிய லைன்மேன், ஃபோர்மேன் இவர்கள் எல்லாம் போய் வாடகை வேண்டுமென்று வசூல் செய்கிறார்கள். அரசு அதற்கு வேண்டிய நிதிகளைக் கொடுத்தாலும்கூட இப்பேற்பட்ட நிலைமைகள், கிராமங்களில் இருக்கின்றன. அதை உடனடியாக மாற்றவேண்டும். அதே நேரத்தில் பகலில் இரண்டு பிரிவுகளாகவும், இரவில் 8 மணி நேரத்திற்கும் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதாக உங்களுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. நீங்கள் முழுமையாகப் பகலில் விவசாயிகளுக்கு 12 மணி நேரமும் மின்சாரம் வழங்கவேண்டும். அதே மாதிரி விவசாயிகளிடமிருந்து தற்போது 5 இலட்சம் விண்ணப்பங்கள் வந்ததாக உங்களுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஆண்டு ஒன்றுக்கு நீங்கள் 40,000 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி கணக்கு பார்க்கும்பொழுது சுமார் 12 வருடங்களுக்கு மேலாகும் இப்போது இருக்கக் கூடிய 5 லட்சம் மனுக்களுக்கும், ஒரு ஆண்டிற்கு 40,000 மின் இணைப்பு கொடுக்கின்றபோது. இதை விரைவுபடுத்தி, ஒரு ஆண்டிற்கு ஒரு லட்சத்திற்குமேல் மின் இணைப்பு கொடுத்தால்தான் ஐந்து ஆண்டுகளிலாவது இதைப் பூர்த்தி செய்யமுடியும். ஏனென்றால், விவசாயிகள் தான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு. ஆகவே, மின் இணைப்பை நீங்கள் துரிதமாக்கி, அதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து, இந்த விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கினால், விவசாய உற்பத்தியைக் கூட்டமுடியும். விவசாயிகளுடைய கஷ்டங்களும் தீரமுடியும். ஆகவே, இதைத் துரிதமாக ஒரு ஆண்டிற்கு ஒரு லட்சத்திற்கு மேல் மின் இணைப்பு கொடுத்தால், இந்த விவசாயிகளுடைய குறைகளை நிவர்த்தி செய்யமுடியும். அதே நேரத்தில் எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் கூடங்குளம் மின் இணைப்பு அணுமின் நிலையம் இருந்தது. அதற்கு ரூ. 5,000 கோடிக்கு மேல் நாம் மதிப்பீடு எல்லாம் தயார் செய்து ஆரம்ப வேலைகள்கூட ஓரளவிற்கு ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆனால், ரஷியாவினுடைய ஒப்பந்தத்தின் பேரில் ஏற்பட்ட வேலைகள் இடைவெளியில் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இந்தத் திட்டம் நிறைவேறினால், அது 2,500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி பண்ணக் கூடிய ஒரு பெரிய திட்டமாக அமைய இருந்தது. இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் நிறைவேறினால், இந்த மின்சார பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகின்ற அளவிற்கு, தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய அனைத்து விவசாயிகளுக்கும், இங்கே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த வகையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றி கொடுக்குமாறு நான் மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதே நேரத்தில் உங்கள் ஆண்டு அறிக்கையில் 90–91-ல் சுமார் ரூ. 1,447.86 கோடி வரவும், செலவு ரூ. 1,808.41 கோடியும் செலவாகியிருக்கின்றன. அதே நேரத்தில் 90–91-ல் வரவு ரூ. 1,723.86 கோடியும், செலவு ரூ. 2,062.89 கோடியாக இருக்கின்றன. அதே மாதிரி 92–93-ல் வரவு ரூ. 1,948.78 கோடியாகவும், செலவு ரூ. 2,407.14 கோடியாகவும் இருக்கின்றன. ஆனால், அதே நேரத்தில் பற்றாக்குறை ஆண்டு ஒன்றுக்கு 1989–90-ல் நஷ்டம் ரூ. 480.42 கோடியாகவும், 90–91-ல் ரூ. 360.55 கோடியாகவும் 91–92-ல் ரூ. 339.03 கோடியாகவும், 92–93-ல் ரூ. 458.36 கோடியாகவும், நஷ்டம் ஆண்டு ஒன்றுக்கு கூடிக் கொண்டே வருகின்றது. ஆனால், இந்த நஷ்டத்தை எல்லாம் பார்க்கிற போது, நீங்கள் ஒரு மாற்று நிலைமையை உருவாக்க வேண்டும். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சி பொறுப்பிலே இருக்கும்போது கூட தமிழ் நாட்டிலே கள்ளுக்கடைகளை, சாராயக்கடைகளையெல்லாம் ஏலம் விட்டார்கள். அதே மாதிரி புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலே கூட கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளையெல்லாம் ஏலம் விட்டார்கள். இப்போது கள்ளுக்கடைகளை, சாராயக் கடைகளை ஏலம் விடாததால், அவைகள் தனிப் பட்ட நபர்களிடமும், சமூக விரோதிகளிடமும் சிக்கி, சுமார் 500 கோடி ரூபாய்க்கு மேலே ஆண்டு ஒன்றுக்கு தட்டிச் செல்லுகிறார்கள். ஆகவே நீங்கள், இந்த தமிழ்நாடு அரசு, தைரியமாக இந்த கள்ளுக்கடைகளை, சாராயக் கடைகளை ஏலம் விட்டால், சுமார் ஆண்டு ஒன்றுக்கு 700 கோடி ரூபாய் வரைக்கும் வருவாய் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த நஷ்டத்தையும் ஈடு செய்யவும் முடியும். அதேநேரத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து அணைத்திட்டங்களையும் கட்டுவதற்கு வழி ஏற்படும். மின்சாரத் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை என்று முக்கியமான திட்டங்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இருக்கின்றன. ஆகவே, விரைவாக இந்தத்திட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் தமிழகத்திலே கள்ளுக்கடைகளை, சாராயக் கடைகளை திறக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களே, அது தமிழக காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா அல்லது அவருடைய கொள்கையா என்பதை தயவுசெய்து விளக்க வேண்டும்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய சொந்த கருத்து. ஆனால், இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களில்,

காங்கிரஸ் பேரியக்கம் ஆட்சி செய்கிற மாநிலங்களில் கள்ளுக் கடைகள், சாராயக்கடைகள் ஏலம் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கு நிதிநிலைமை பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தாலே, நீங்கள் நிச்சயமாக ஏலம் விடலாம். எங்கள் மவட்டத்திலே கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் தாராளமாக இயங்கிக்கொண் டிருக்கின்றன. காவல் துறையால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் சும்மா, அசெம்பிளியிலே பெயருக்காக வேண்டு மானால் மதுவிலக்கு அமலாகிக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாமே தவிர, வேறல்ல. தற்போது விஸ்கி, பிராந்தி, பீர் போன்றவை எல்லாம் ஏலம் விடப்பட்டு, சாதாரண மக்கள் கூட, கள்ளு, சாராயம் குடிக்கக் கூடிய மக்கள் கூட, இப்போது விஸ்கி, பிராந்தி, குடிக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதனால், அவர்களுடைய பணம் பூராவும் பிராந்தி கடைக்கும், விஸ்கி கடைக்கும்தான் செல்லுகிறது. அந்த நிலைமையை மாற்று வதற்கு, நீங்கள் தாராளமாகக் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் தைரியமாக ஏலம் விட வேண்டும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> திரு. டி. வேலையா

<u>திரு. டி. வேலையா:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது, நெல்லை மாவட்டத்தில் தாராளமாக கள், சாராயக் கடைகள் இருக்கின்றன என்று மாவட்டத்தினுடைய பிரதிநிதி போல் பேசுகிறார்கள். ஆனால், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நாங்களும் இங்கே இருக்கிறோம். ஆகவே, அந்த மாவட்டத்தினுடைய கருத்தாக, அதிகாரப் பூர்வமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்பதை, தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்;</u> திரு. நா. சா. பழனிசாமி. (குறுக்கீடு). நீங்கள் உங்கள் கருத்தைச் சொன்னீர்கள். அவர், அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார். இரண்டும் இருக்கிறது. பிரச்சினை முடிந்து விட்டது.

<u>திரு. நா. சா. பழனிசாமி:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே சில கருத்துக் களை முன் வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். தசை இல்லாமல் கூட மனிதன் வாழலாம், ஆனால், இன்று மின் விசை இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்கிற நிலைமை இருக்கிறது. கண்ணொளி இல்லாமல் கூட மனிதன் வாழலாம், ஆனால் மின் ஒளி இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்ற நிலைமைக்கு ஏற்ப இன்று, இந்த நவீன உலகத்திலே



அது, மின்சாரம் இருக்கிறது. உயிராக, வாழ்க்கையின் உயிரோட்ட மாக மாறி இருக்கிறது. இந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலே, இந்த மின்சாரத்தை வினியோகிப்பதிலே, இந்த அரசு காட்டி வருகிற முனைப்பையும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக் கிறேன். தொழில் துறைக்கு மின் வெட்டை நீக்கி, சாதனை புரிந்து இருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு விவசாயிகளுக்கு முழு நேரமும் பகலிலே மின்சாரத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரிதான மின் சக்தியை ஆடம்பர விளக்குகளுக்கு எந்நேரமும் கொடுக்கும் அரசு, அத்தியாவசிய தொழிலான விவசாயத்திற்கு பகல் முழுவதும் கொடுத்தால் உற்பத்தி பெருகும், மின்சாரம் விரயம் ஆவது தவிர்க்கப்படும். நீர் பாசனம் நன்றாக நடைபெறு இப்போது நீர் தட்டுப்பாடு இருக்கிற நிலையில் இரவில் பாய்ச்சு கிறபோது ஏற்படுகிற நீர் சேதாரம் குறையும்.

பிற்பகல் 12-40

ஆனால் இரவிலே தண்ணீர் பாய்ச்சுதற்கு வயல்களிலே பாம்பு போன்ற விஷப் பூச்சிகள் இருக்கின்ற காரணத்தினால் விவசாயிகள் செல்ல மறுக்கின்ற நிலை இருக்கிறது. எனவே, பகலிலே விவ சாயிகளுக்கு முழு நேரம் மின்சாரம் வழங்க இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். 1951-லே சுமார் 14,000 பம்ப் செட் டுகள் இருந்தன. 1992-ல் 14,00,000 ஆக உயர்ந்துள்ளது. இந்த 14 இலட்சம் பம்ப் செட்டுகளை நிறுவுவதற்கும், அதற்கு வேண்டிய ஆழ்குழாய் கிணறுகளை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகள் தோராயமாக 7,500 கோடி ரூபாயை முதலீடு செய்திருக்கிறார்கள். இவர்கள் சராசரியாக 8 ஆண்டு களுக்குப் பிறகுதான் மின் இணைப்பை பெற முடிந்திருக்கிறது. ஆக, இந்த இடைப்பட்ட காலத்திலே அவர்கள் டீசல் என்ஜினை யும், ஏற்றங்கள் போன்றவற்றையும் பயன்படுத்தி, விவசாயம் செய்கின்றபோது, பல இழப்புகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்த இழப்புகளை எல்லாம் அவர்கள் இந்த இலவச மின் சாரத்தின் மூலமாகத்தான் ஈடு செய்ய முடிந்திருக்கிறது. எனவே, இந்த இலவச மின்சாரத்தை நிரந்தரமாகக் கொடுக் கின்ற ஒரு உத்திரவாதத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இந்த மன்றத் திலே வைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது மத்திய அரசாங்கம் ஒரு யூனிட்டுக்கு 5 பைசாவை எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக விவசாயத்திற்கு விதிக்க வேண்டுமென்று ஒரு தாக்கீது வந்ததாக இந்தக் குறிப்பிலே இருக் கிறது. எல்லா இடத்திற்கும் ஒரு யூனிட்டுக்கு 50 பைசா என்பது இந்திய நாட்டிலே பொருத்தமுடையதாக இருக்காது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில்தான் ஆழ்குழாய் கிணறு களும், ஆழமான கிணறுகளும் இருக்கின்றன. வட மாநிலங் களிலே அவர்களுக்கு அதிக மழை பெய்கிறது. நேரடி

நீர்ப்பாசனம் கிடைக்கிறது. அவர்கள் மின்சாரத்தைப் பயன் படுத்துவது குறைவாக இருக்கிறது. எனவே தென் மாநிலங் களைப் பொறுத்தவரையில் இலவச மின்சாரம் கொடுப்பது தான் சரியான முறையாக இருக்கும்.

காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிகின்ற கர்நாடக மாநிலத்திலே கூட இந்த ஆண்டு அதனுடைய பட்ஜெட்டிலே 10 எச். பி. வரைக்கான மின்சார மோட்டார்களுக்கு இலவசமாக மின் சாரத்தை வழங்கி இருக்கிறார்கள். இந்த 7,500 கோடி ரூபாயை ஒரு தொழில் துறையிலே முதலீடு செய்தால் 15 சத விகிதம் மானியத்தை அவர்களுக்கு அரசு வழங்குகிறது. 1,165 கோடி அவர்களுக்கு மானியமாக கிடைக்கிறது. அந்த 7,500 கோடியில் 4-ல் ஒரு பங்கு 1,875 கோடி முதலீடு போட்டால் வங்கிகளில் கடனாக 5,625 கோடி கடனாகக் கிடைக்கிறது. ஆக சொந்த முதலீட்டிலிருந்து மானியத்தைக் கழித்துப் பார்த்தால் 740 கோடி முதலீடு செய்தால் 7,500 கோடி ரூபாய்த் தொழிலை அவர்கள் செய்யமுடிகிறது. அவர்களுக்கு 3 மாதத்திலே மின்இணைப்பு கிடைக்கிறது. ஆனால் இந்த முதலீட்டை சில 100 பேர்கள்தான் செய்கிறார்கள். ஆனால் இந்த 7,500 கோடியை முதலீடு செய்திருக்கின்ற விவசாயிகள் 14 இலட்சம் பம்ப்செட் விவசாயிகள். இவர்கள் 84 இலட்சம் மானாவாரி நிலத்தை தோராயமாக இருபோக சாகுபடிக்கு கொண்டு வந்திருக் கிறார்கள். இவர்களுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதில் 610.89 கோடி தருவதாகச் சொல்கிறார்கள். சென்ற ஆண்டிலே இந்த இலவச மின்சார பிரச்சினை வந்தபோது இலவசமாக விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலும், இலவசமாக விளக்கு களுக்கு மின்சாரம் வழங்குவதிலும் சேர்த்துதான் 540 கோடி என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு அது எப்படி விவசாயத்திற்கு மட்டும் 610.89 கோடியாக உயர்ந்தது என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடிய வில்லை. இப்படி ஆண்டுக்கு ஆண்டு அரசாங்கம் விவசாயி களுக்கு கொடுப்பதை அதிகரித்துக்கொண்டிருப்பது எந்த வகையில் என்று தெரியவில்லை. இப்படி பார்த்தால் கூட, விவசாயத் தொழிலுக்கு போட்டிருக்கின்ற முதலீட்டிற்கு 7 சதவிகிதம் மானியம்தான் கிடைக்கிறது. இந்த விவசாயிகள் வங்கியிலே கடன் பெறவில்லை. இந்த விவசாயத் தொழில் ஒரு முன்னுரிமை தொழில். ஒரு பம்ப் செட்டுக்கு 5 பேர் என்று வைத்துக் கொண்டாலும் கூட 60 இலட்சம் பேருக்கு சேர்ந்து, தான் இந்த 610.89 கோடி சலுகை என்பது. இதிலே புனல் மின்சாரம். இந்த புனல் மின்சாரத்திற்கு பயன்படுத்துகின்ற தண்ணீரை இந்த விவசாயிகளுக்கே விநியோகித்து அதிலே தண்ணீர் வரியாக அரசாங்கம் வசூலித்துக் கொள்கிறது. எனவே மொத்தமாக மின்சார உற்பத்திக்கு 1 யூனிட்டுக்கு 1.80 பைசா என்று வைத்துக் கொள்ளாமல் விவசாயத்தை பொறுத்தவரையில் அந்த புனல் மின்சாரத்திற்கு முழு உரிமை பெற்றவர்கள் அந்தத் தண்ணீர் வரியை அவர்கள்



செலுத்துகிறார்கள். மின்சார உற்பத்திச் செலவை அவர்கள் ஈடு கட்டுகிறார்கள் என்ற முறையிலே அந்த வகையிலே பார்ப்போமானால் நிச்சயமாக இலவச மின்சாரம் கொடுப் பதிலே விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், அந்த இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஏர் கம்ப்ரசர் முறையிலே இப்போது பாசனம் செய் கின்றபோது மின்சாரம் கிட்டத்தட்ட 16 மணி நேரம் கொடுக் கின்ற மின்சாரத்தை 12 மணி நேரம் ஏர் கம்ப்ரசருக்காகவும், 12 மணி நேரம் ஏர் கம்ப்ரசர் மூலமாக இறைக்கின்ற தண்ணீரை கிணற்றுக்குள் விட்டு 4 மணி நேரம் மோட்டார் மூலம் பாய்ச்சு கின்றபோது மின்சாரம் அதிகமாக செலவாகிறது. அந்த மின் சாரத்தை மிச்சப்படுத்துவதற்காக அரசாங்கம், அந்த கிணற் றுக்குள் விடுவதற்குப் பதிலாக டாங்குகளைக் கட்டி அதன் மூல மாக விட்டு நீர்ப் பாசனம் செய்தால் அந்தச் செலவு குறையும். அதற்கு 15 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் விவசாயிகள் முதலீடு போட வேண்டிய காரணத்தால் விவசாயிகளால் அந்த நீர்த் தேக்கத் தொட்டிகளைக் கட்ட முடியவில்லை. அதற்கு அரசு ஏதாவது வங்கிகளில் கடன் உதவி செய்தால் ஒரு மாதத் திற்கு 6 கோடி ரூபாய் அளவுக்கான மின்சார இழப்பை ஈடு செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

அதோடு இன்று புதிதாக மின் இணைப்பைப் பெறுவதற்கு 2 முறையை அரசு கொண்டு வந்திருக்கிறது. 25 ஆயிரம் ரூபாயோ, அல்லது அதற்கு அந்த மின்சாரம் நிறுவுவதற்கு தேவைப்படும் அதிகபட்ச செலவோ கொடுத்தால் அவர்களுக்கு முன்னுரிமை என்பதிலே 40 ஆயிரம் என்று இருக்கின்ற அந்த ஒரு ஆண்டுக்கான குறியீட்டிலே இருந்து தான் இந்த 20 ஆயி ரத்தை எடுத்து விடுவதாக கொள்கைக் குறிப்புச் சொல்கிறது. எனவே, இதிலே இந்த 25 ஆயிரத்தைக் கொடுக்கின்ற தகுதிப் பெற்ற விவசாயிகள் தனிப்பட்ட விவசாயத்தைச் செய்பவர்களாக இருக்க முடியாது. நிச்சயமாக அவர்கள் மற்றத் தொழிலைச் செய்து கொண்டு விவசாயத்தை ஒரு துணைத் தொழிலாக செய் கின்றவர்களாகத்தான் இருக்க முடியும். அவர்கள் தான் இந்த சலுகையைப் பெறுகிறார்கள். அதனால் 20 ஆயிரம் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அந்த 40 ஆயிரம் என்பதை, அந்த முன்னுரிமையைக் குறைக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் நீங்கள் இப்போது அறிவித்தும் கூட 2 ஆயிரம் பேர் தான் மின் இணைப்பைப் பெற முன் வந்திருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக விவசாயிகள் மத்தியில் அதற்கு நல்ல வரவேற்பு இல்லை. விவசாயத்தை

மட்டும் தனியாக செய்பவர்களால் அந்தப் பணத்தைக் கட்ட இயலவில்லை என்ற நிலையைத்தான் இன்று அது காட்டுகிறது. எனவே, அந்த 25 ஆயிரம் ரூபாய் என்பதற்குப் பதிலாக ஒரு கம்பத்தை நடுவதற்கு செலவு எவ்வளவோ அல்லது 2 கம்பங்கள் நடுவதற்கு செலவு எவ்வளவோ அதை மட்டும் பெற்றுக் கொண்டு, இப்போது குறைந்த பட்சம் 25 ஆயிரம் ரூபாய் என்பது 2 போஸ்டு போடுவதற்கு கூட 25 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதை மாற்றி அது எவ்வளவு செலவு ஆகிறதோ அதற்கு தகுந்தபடி செய்தால் சில நடுத்தர விவசாயிகள் கூட பலன் அடைய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஒரே நிமிடம்.

இப்போது எங்கள் பகுதியில், கோவை மாவட்டம் போன்ற பகுதிகளில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு தண்ணீரே இல்லாதப் பகுதிகளில் விவசாயிகள் விசைத் தறி தொழிலைச் செய்து வருகிறார்கள். அந்த விசைத்தறி தொழிலைச் செய் கின்ற விவசாயிகள் கிணற்றிலே இலவசமாக மின்சாரத்தை இவர்கள் பயன்படுத்துகின்ற வாய்ப்பு இல்லை. அந்த வகையில் இருப்பவர்களுக்கு அந்த விசைத் தறித் தொழிலை குடிசைத் தொழிலாகக் கருதி அதைத் தொழில் துறையோடு இப்போது இணைத்து இருக்கின்ற காரணத்தால் ஒரு யூனிட்டுக்கு 2 ரூபாய் வரை அவர்கள் கட்ட வேண்டியிருக்கிறது. அதனால் விசைத் தறித் தொழிலில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு போராட்டம் கூட நடந்தது. எனவே, அந்த விசைத் தறிக்கு ஒரு யூனிட்டுக்கு ஒரு ரூபாய் என்ற அடிப்படையிலே கொடுக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

வீடுகளுக்குக் கட்டுவதிலே கூட இவ்வளவு யூனிட்டுக்கு இவ்வளவு தொகை என்று வைத்து இருக்கிறார்கள். ஆனால், வீடுகளுக்கு மாதத்திற்கு ஒரு முறை வசூல் செய்யாமல் .2 மாதத் திற்கு ஒரு முறை வசூல் செய்கிறபோது அந்த 2 மாத உப யோகத்தைக் கணக்குப் பார்த்தால் அவர்கள் அதிக யூனிட்டுகள் உபயோகப்படுத்துகிறார்கள் என்றால் அந்த அதிகப்படியான யூனிட்டுக்கு அதிகப்படியான கட்டணத்தை கட்ட வேண்டி யிருக்கிறது. எனவே, மாதா மாதம் அவர்கள் வீடுகளுக்கான கணக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது). இப்படி இந்த கோரிக்கையில் பேசு வதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

<u>திரு. காஞ்சி பன்னீர் செல்வம் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தினுடைய மானியக்கோரிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த,



என்னை ஆளாக்கிய தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ள மத்திய அரசு மின் திட் டங்களில் உற்பத்தியாகும் மின்சாரம் நமது மாநிலத்தின் தேவை யைப் பூர்த்தி செய்த பிறகு தான் மற்றவர்களுக்கு வழங்கவேண்டு மென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டங்கள் தோறும் மின்சாரத் தேவையைக் கணக்கிட்டு ஆங்காங்கு இருக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி முடிந்தவரை அந்தந்த மாவட்ட எல்லைக்குள் புதிய மின் உற்பத்தி நிலையங் களை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

தனியார் மின் உற்பத்தியை ஊக்கப்படுத்துவது நல்லது. மக்களுக்கும் ஒழுங்காக தேவையான அளவுக்கு மின்சாரம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்திய ரயில்வே துறை நட்டம் அடைகிறது என்று சொன்னபோது ஒருபெரும் தொழிலதிபர் சொன்னார், தண்டவாளங்களின் ஓரத்தில் சிதறிக் கிடக்கின்ற இரும்புத் துண்டுகளை ஒன்றாகச் சேர்த்தாலே, ரெயில்வே துறையின் நட்டத்தைச் சரி செய்து விடலாம் என்று சொன்னார்கள். மின்சாரத்தை, பல இடங் களிலே, இன்றைய தினத்திலே பயன்படுத்துகின்ற விதத்திலே பயன்படுத்தினால் நமக்கு சேமிப்பு அதிகமாகக் கிடைக்கும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், கிராமங்களிலே எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது நகரங்களிலே எடுத்துக் கொண்டலும் சரி அல்லது வீடுகளிலே எடுத்துக்கொண்டாலும் சரி, ஒரு குறிப்பிட்ட நிலையிலே அல்லது குறிப்பிட்ட மின்சா ரத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்களா என்று சொன்னால், இல்லை. எனவே, மின்சாரத்தை அவர்கள் குறைந்த அளவிலே பயன்படுத்துகின்ற அளவிலே, மின்சார வாரியம் அதற்கு ஒரு விளம்பரத்தை எழுதி பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது போல, மின்சார வாரியத்தில் உள்ள தொழி லாளர்கள், ஊழியர்கள், தங்கள் பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றினாலே நட்டம் சரியாகி இலாபத்தை ஈட்டத் தொடங்கிவிடலாம். மற்றத் தொழில்களில் உற்பத்தியாகும் பொருட்களை ஓரிடத்தில் போட்டுவிட்டு பல நாட்கள் கழித்து கூட எடுத்துக் கொள்ளலாம். [illegible] மின்சாரமும், தண்ணீ ரும் அப்படி அல்ல. [illegible] சிமிட்டும் நேரத்தில் கடந்து செல்லும் [illegible] இல்லாமல் கடமை



164945

யுணர்வோடு செயல்பட்டால்தான் உற்பத்தியான மின்சாரம் உபயோகமாகி மற்ற பொருட்களைத் தயாரிக்க முடியும். அந்த மின்சாரம் பணமாகும். வாரியத்தை நட்டம் அடையாமல் காப்பாற்ற முடியும். மற்ற துறைகளைப் போல, இலாக்காக்களைப் போல மின் வாரிய ஊழியர்கள் செயல்பட முடியாது. இன்றைக்கு வெளி மாநிலங்களிலேயிருந்து நிலக்கரியைச் கொண்டு வருவதால் நமக்கு மின் உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது. மாநிலங்களில் மின் உற்பத்தி அதிகமாகி தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகினால்தான் மத்திய அரசுக்கு வரிகளாக வந்து சேர முடியும். அந்த அடிப்படையில் பார்த்தால், மின்சாரம் மக்களுக்கு மலிவாகத் தரப்பட வேண்டும். மின்சாரம் மலிவு விலையில் தரப்பட வேண்டுமானால் மூலப் பொருளான நிலக்கரி மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டும். ஆகவே, மத்திய அரசு, மாநிலங்களிலுள்ள அனல் மின் நிலையங்களுக்கு மானிய விலையில் நிலக்கரியை ஏற்றிச் செல்லவும், செலவுத் தொகையில் 25 சதவீதத்தை ஏற்றுக் கொள்ளவும் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, கடந்த காலத்தில் கிராமங்களில் எரிந்துகொண்டிருந்த மின் விளக்குகள் ஒரு காலக் கட்டத்திலே மின்சார வாரியத்தின் மூலமாக, அந்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்தது. ஆனால், இன்றைக்கு அதை மாற்றி, உள்ளாட்சித் துறையின் மூலமாக கிராமங்களிலே இன்றைக்கு பஞ்சாயத்து அஸிஸ்டன்டுகள் அந்த மின் விளக்குகளைப் போட்டார்கள். ஆனால், அவர்கள் சரியாக அதைப் போடுகிறார்களா என்று சொன்னால், இல்லவே இல்லை. காரணம், முந்தைய அரசுக்குச் சொந்தக்காரர்களாக, முந்தைய அரசுக்குத் தேவைப்பட்டவர்களாக இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு அரசாங்கம் முழுமையாக அந்த மின் விளக்குகளைக் கொடுத்துக் கூட அவர்கள் அந்த விளக்குகளை அங்கே சரியாக எரிவதற்கு வழிவகை செய்வதில்லை. எனவே, மாண்புமிகு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு இன்றைக்கு, அந்த பழைய முறையிலேயே, மின்சாரத் துறையிலேயே அந்த மின் விளக்குகள் எரிவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நூற்றுக்கு நூறு எல்லா கிராமங்களிலும் மின் விளக்குகள் எரிய வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களின் அரசு முன்வந்து சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர் அவர்கள் எல்லா அதிகாரிகளையும் கூப்பிட்டு, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயும் எல்லா அதிகாரிகளையும் அழைத்துச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு அதைச் செயல்படுத்தகிறார்களா என்று சொன்னால், அந்த கிராமப்புறங்களிலே இருக்கின்ற கிராம பஞ்சாயத்தினுடைய அசிஸ்டண்ட் என்று சொல்லப்படுகின்றவர்கள் செய்வதில்லை. 55 விழுக்காடுகூட இன்றைக்கு எரிகின்ற நிலையிலே விளக்குகள் இல்லை. காரணம் அவர்கள் சரியாகச் செயல்படவில்லை. எனவேதான், பழைய முறையிலேயே கிராமங்களிலே உள்ள விளக்குகளை மின்சாரத் துறை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, இன்றைய தினத்திலே ஈ.ஓ. (ஏ.டி.) தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக உள்ள 'தாட்கோ'' மூலமாக மற்றவர்களுக்கு பயன்கிடைப்பதற்காக இருக்கிறார்கள். அதேபோல ஈ.ஓ. (நூன்மீல்) பி.ஏ., சத்துணவுக் கூடங்களைப் பராமரிக்க இருக்கிறார்கள். அதேபோல, நெடுஞ்சாலைத் துறையிலே உதவிப் பொறியாளர் இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே ஈ.ஓ. (சி) இருக்கிறார்கள். கால்நடை பராமரிப்புத் துறையிலே ஈ.ஓ. (ஏ.எச்.) இருக்கிறார்கள். இதுபோன்ற நிலையிலே கிராமங்களிலே உள்ள மின் விளக்குகள் எரிவதற்கு உதவிப் பொறியாளரோ, ஹெல்ப்பரோ மின்சாரத் துறையிலேயிருந்து ஊராட்சி ஒன்றியங்களில் போட்டால் தற்போதுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கு நலமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



பிற்பகல் 12–55

அதைப்போல இன்றைக்கு கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டம் ரஷ்யாவின் அரசியல் மாற்றம் காரணமாக தற்போது தடைப்பட்டுள்ளது. எனவே, மாநில அரசும் மத்திய அரசும் வேறு ஏதாவது ஒரு நாட்டினுடைய உதவியுடன் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்த வரையில், மதுரை, கோவை, கரூர், பொள்ளாச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இரட்டிப்பாக உள்ளது. காரணம் நகராட்சி, மாநகராட்சி ஆகியவை கட்டணத்தை வசூல் செய்கின்றன. இந்த அவையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்தில் எல்லோருக்கும் ஒரே சீராக மின்சாரக் கட்டணம் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்போல அவருடைய அரசியல் வாரிசான புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எல்லோருக்கும் ஒரே சீராக மின்சாரக் கட்டணம் இருக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை விவசாயிகளுக்கு அவர்கள் வாங்கிய கடனை மட்டும் கட்டினால் போதும், வட்டியைக்கட்டத் தேவையில்லை என்ற உணர்வோடு தள்ளுபடி செய்திருக்கிறார்கள். நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்திலே விவசாயிகளுக்கு அடுத்த இடத்திலே நெசவாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, நெசவாளர் பெருமக்களுக்கு தாய்

உள்ளம் கொண்ட நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இன்றைக்கு 5 தறிகள் வைத்துக் கொண்டிருக்கிற நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் இல்லை என்றாலும் பாதிக் கட்டணத்தை வசூல் செய்கின்ற வகையில் திட்டத்தை வகுக்க வேண்டும். அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தற்போது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மின்சாரக் கட்டணத்தை தனி அட்டையில் பதிவு செய்து, அந்தக் கட்டணத்தை மின்வாரிய அலுவலகத்திற்குச் சென்று பொது மக்கள் கட்டி வருகிறார்கள். இது மிகவும் சிரமமாக இருக்கிறது. கணக்கு எடுப்பவர் குறிப்பிட்ட தேதியில் வருகிறார். அந்தத் தேதியில் வீட்டு உரிமையாளர் இல்லாவிட்டால் மின் கணக்கு எடுப்பவர் கணக்கு எடுக்காமலேயே போய் விடுகிறார். எனவே மீண்டும் பழைய முறையில் ஒவ்வொரு மாதமும் ''பில் சிஸ்ட''த்தைக் கொண்டுவர இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலும், மின்சாரம் உபயோகிப்பவர் ஒவ்வொருவரும் ஒரு மாதத்திற்கு ஆகின்ற மின்சாரத்தைக் கட்டணச் செலவைக் கணக்கிட்டு, ஓராண்டுக்கு மொத்தமாக இவ்வளவு ரூபாய் என்று வசூல் செய்து, அதை ''பிக்செட் டிபாசிட்''டில் போட்டால் மின்சார வாரியத்திற்கு அதிக இலாபம் வரும். மின்சார வாரியத்தின் செலவினத்திற்குப் பயன்படுத்தவும் வசதியாக இருக்கும். வீட்டின் சொந்தக்காரரும் ஒவ்வொரு மாதமும் மின் வாரியத்திற்குச் சென்று கட்டணத்தைச் செலுத்தச் சிரமப்படுவதைத் தவிர்க்க ஏதுவாகும்.

என்னுடைய உத்திரமேரூர் தொகுதியில் வாலாஜாபாத் நகரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசை மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது வீடுகளுக்கு புதிதாக மின்சார இணைப்பு கொடுக்கும்போது ஸ்டோரில் மெட்டீரியல்ஸ் இல்லை, எனவே வீட்டின் சொந்தக்காரர் தான் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. ஆனால் மின் இணைப்புக் கோரி அளிக்கும் விண்ணப்பத்துடன் வீட்டின் சொந்தக்காரரிடமிருந்து மெட்டீரியல்ஸ் சார்ஜ் என்ற முறையில் பணம் வசூல் செய்யப்படுகிறது. இந்தக் குறையைப் போக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால் முதலிலே மின் இணைப்பு கேட்கின்ற நேரத்தில் வசூல் செய்யப்படுகின்ற தொகை ஒரு புறம் இருக்க, மின் இணைப்பு கொடுக்கிற போது எங்களிடம் மெட்டீரியல்ஸ் இல்லை, நீங்கள் தான் வாங்கிக் கொடுக்க வேண்டு



மென்று கேட்கிறார்கள். இந்தத் தவறு எந்த முறையில் எங்கே நடைபெறுகிறது என்பதை நம்முடைய அரசு ஆராய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சென்னையில் பல இடங்களில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுகிறது. ''பிரேக் டவுன்'' அலுவலகத்தில் சென்று கேட்டால் நாங்கள் என்ன செய்வது. ஃப்யூஸ் போடும் ஒயர் சக்தி வாய்ந்ததாக இருந்தால் இப்படி மின்சாரத் தடை ஏற்படாது; நல்ல ஒயர் போட வேண்டுமென்றால் ஸ்டோரில் ஸ்டாக் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே நமது அரசு இது குறித்து ஆராய வேண்டும். அதிகாரிகளிடத்தில் தவறு இருக்கிறதா அல்லது உண்மை நிலை என்ன என்பதை அரசு ஆராய்ந்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : எப்போதுமே ஓர் அமைச்சருடைய துறையின்மீது விவாதம் நடந்து கொண்டு இருக்கும்போது அந்த அமைச்சரை யாரும் தொல்லைப் படுத்தக் கூடாது.

<u>திரு. காஞ்சி பன்னீர்செல்வம்</u> : இன்றைய தினம் ஜெயங்கொண்டத்தில் இருக்கிற பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்த கூட்டு முயற்சியில் ஏற்படுத்தியிருக்கும் திட்டத்தை எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அதை நிறைவேற்றி, நம்முடைய மாநிலம் மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறுகின்ற வகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கோடைக் காலத்தில், இதற்கு முன்னாலே எத்தனையோ அரசுகள் இந்தத் தமிழ்நாட்டில் இருந்த நேரத்தில், இந்தக் காலத்திலே மின்சாரம் இல்லை. இந்தக் கால கட்டத்திலே மின்சாரம் இல்லை; இத்தனை மணி நேரம் தான் மின்சாரம் கொடுக்கப்படும்; இந்த அளவிற்குத் தான் மின்சாரம் கொடுக்க முடியும், ஆலை அதிபர்களுக்குக் கொடுக்க முடியும்; இங்கே நம்முடைய வீட்டிலே இருப்பவர்களுக்கு அதுதான் கொடுக்க முடியும் என்ற நிலை இருந்த நிலையை இன்றைக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப் பேற்றதற்குப் பின்னாலே, இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆட்சியிலே தான் இந்தக் கால கட்டத்திலே எல்லோருக்கும் மின் தட்டுப்பாடு இல்லை; மின் துண்டிப்பு இல்லை என்ற உணர்விலே இன்றைக்கு இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே நம்முடைய அரசை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை மனதார நாட்டு மக்களும் இன்றைக்கு ஆலை அதிபர்களும் அதே நேரத்திலே கீழ் நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களும் இந்த

கால கட்டத்திலே மின் தடை இல்லை என்ற காரணத்தாலே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்து, இந்த நல்ல மானியத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவையினுடைய தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் மின் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, எங்களுடைய பெரியார் மாவட்டத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, அமைச்சரையே காணோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கிறார். உங்களுக்காக மூத்த அமைச்சர்களே உட்கார்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் அதற்காக ரொம்பக் கவலைப்பட வேண்டாம்.

திரு. வி. கே. சின்னசாமி : கீழ் பவானி அணையில் ஒரு வார காலத்திற்கு உடனடியாகத் தண்ணீர் திறந்து விடப்பட வேண்டுமென்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள், நான் கடந்த முறை ஒரு துணைக் கேள்வி கேட்ட நேரத்தில் 30 ஆம் தேதி வரை, 30—4—1992 வரை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதல் பெற்று விவசாயிகளுக்குத் திறந்து விடப்படும் என்று சொல்லியிருந்தார்கள். ஆக ஒரு வாரத்திற்கு முன்பே நிறுத்திய காரணத்தினால் முற்றியிருக்கின்ற, முழுவதுமாக இருக்கின்ற கடலைக் காய்களை விவசாயிகள் பறித்தெடுக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. கடந்த வாரம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வருகின்ற நேரத்தில் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களிடத்திலே எடுத்து வைத்திருக்கிறோம். ஆக அவரும் அதை செய்வதாக அந்த விவசாயிகளிடத்திலே உறுதியளித்து வந்திருக்கிறார்கள். ஆகவே, பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், கீழ்பவானி ஆயக்கட்டு விவசாயிகள் சார்பாகவும் கீழ் பவானி



அணையை ,கடலைக் காய் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்குத்
தண்ணீர் திறக்கப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே
வலியுறுத்தி அதற்குத் தேவையான தண்ணீர் அணையில்
இல்லை என்றாலும், குந்தா, பைக்காராவிடத்திலேயிருந்
தாவது திறந்து விட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே
தெரிவித்துக் கொண்டு, குறிப்பாக இங்கே அருமை மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் மின் வாரியத்திலே பேசும்
பொழுது கள்ளச்சாராயத்தைப் பற்றிப் பேசினார்கள்.
எங்களுடைய பெரியார் மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு சதவீதம்
கள்ளச்சாராயம் ஒழிக்கப்பட்டுள்ளது புரட்சித் தலைவி
னுடைய ஆட்சியிலே என்பதை நான் இங்கே உறுதியாகக் கூறிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சார வாரியத்திற்கு வாருங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : அது மட்டுமல்ல. நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது, இரண்டாண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எந்தக் கிராமத்திலேயும் எங்கேயும் ஒரு வீதி விளக்குகள்கூட எரிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், எங்களுடைய பகுதியில் அன்றைக்குக் கல்வி அமைச்சராக இருந்த அன்பழகன் அவர்கள் இந்திரா நகர் என்ற அரிசனக் குடியிருப்பைத் திறந்தார்கள். திறக்கின்ற நேரத்தில் அங்கே வீதி விளக்கை அமைத்தார்கள். இரண்டே இரண்டு கம்பங்களை நட்டு, வீதி விளக்குகள் அமைப்பதாகச் சொல்லி, கடந்த இரண்டாண்டுக் காலமாக அங்கே கம்பங்கள் தான் நடப்பட்டிருந்தன; ஆனால் வீதி விளக்குகள் அமைக் கப்படவில்லை. இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சி ஏற்பட்ட பின்புதான் இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இந்த இடங்களுக்குகெல்லாம் வீதி விளக்குகள் அமைக்கப்பட்டு, எல்லாக் கிராமங்களிலும், அனைத்துக் கிராமங்களிலுமே எரியாமல் இருந்த குழல் விளக்குகளும், அனைத்து வீதி விளக்குகளும்எரிக்கப்பட்டு,இன்றைக்கு இருட்டிலே மூழ்கியிருந்த தமிழகம் ஒளி விளக்கு ஏற்றப்பட்டு இருக்கின்றது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் என்பதை நான் இங்கே ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்வாரிய அதிகாரிகள் நல்லமுறையிலே எங்களுடைய பகுதியிலே செயல்படுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். கடந்த வாரம் போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் எங்களுடைய பகுதியில் அன்றைய கவுண்டன் பாளையம் என்ற பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு அரிசனக் குடியிருப்பை 21 வீடுகளைத் திறந்தார்கள். இதற்கு ஒரு 4 நாட்களுக்கு முன்புதான் மின் வாரிய அதிகாரிகளிடத்திலே சொன்னோம். அந்தப் புதிய குடியிருப்பு திறக்கப்படும் பொழுது அங்கே வீதி விளக்குகள் அமைத்துத் தரப்பட வேண்டும்; அவர்களுக்கு ஒரு விளக்குத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று எடுத்துக் கூறிய நேரத்தில் 4 நாட்களில், மூன்றே நாட்களில் இரவு பகலாக வேலை செய்து அங்கே வீதி விளக்குகள், ஒரு விளக்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, நல்லமுறையிலே மின் வாரிய அதிகாரிகள் பெரியார் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் இங்கே ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05

அதற்கு அடுத்தபடியாக, ரூபாய் 25 ஆயிரம் அல்லது சர்வீஸக்கு ஆகிற முழு செலவைக் கட்டினால், மின் இணைப்புப் பெறுவதற்கு இங்கே 2,059 பேர் முன் வந்திருக்கிறார்கள். கடந்த சட்டமன்றத்திலே கூட நான் இதை வலியுறுத்திப் பேசி இருக்கிறேன். யார் இதைக் கட்டுவதற்கு முன் வருகிறார்களோ, அவர்களுக்கு மின் இணைப்புத் தர வேண்டும் என்பதை சீனியாரிடி இல்லாமல் — வலியுறுத்தியிருக்கிறோம். இதிலே என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால் 40 ஆயிரம் பம்பு செட்டிலே பிரித்து இவர்களுக்கு இங்கே தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது,இந்த 40 ஆயிரம் என்பது, அவர்களுக்கு சீனியாரிடியிலே தருவதைக் குறைக்காமல், யார் 25 ஆயிரம் அல்லது அதற்கு ஆகிற செலவைக் கட்டுவதற்கு முன் வருகிறார்களோ, அவர்களுக்குத் தனியாக ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு டி.ஈ. அல்லது எஸ்.ஈ. லெவலிலே தனியாக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், இதைப் பராமரிப்பதற்கு மட்டும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபோன்ற முடிவு எடுக்கப்பட்டதற்குப் பின்னாலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவுக்கிணங்க அன்றைக்குகூட அவர்கள் சட்டமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள்; 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கிற நேரத்திலே, முன்னுரிமை கொடுத்து, சிறப்பு நிகழ்வுகளின் அடிப்படையிலே 25 ஆயிரம் முன்பணம் கட்டி, கொடுக்கிற அந்த மின் இணைப்புகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டிருக்கிறது. எனவே, எதிர்காலத்திலேயே இந்தப் பிரச்சினை எழ வாய்ப்பிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம்புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியை அவர்களுடைய பாதத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், நாங்களும் ஒரு விவசாயி என்ற அடிப்படையிலே,

ஆகவே, இந்தக் குறுகிய காலத்திலே, ஒரு மாதத்திற்குள்ளாக, 2,059 பேர் முன்வந்திருக்கிறார்கள் இவர்கள் அனைவருமே உண்மையான விவசாயம் செய்கிறவர்கள் தான் இதிலே யாரும் விவசாயிகள் அல்ல என்பது சரியல்ல. இங்கே ஒருநண்பர் பேசினார்,விவசாயி இல்லை என்று. உண்மையிலேயே விவசாயிகள்தான் முன்வந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு, இன்றைய நிலக்கரியைப் பொறுத்தமட்டில், முன்பெல்லாம் சட்டமன்றத்திலே நாங்கள் பேசியிருக்கிறோம் இரண்டு நாள், 3 நாளைக்கு தேவையான நிலக்கரியைத்தான் மின்சார வாரியம் பெற்றிருக்கிறது என்கிற அறிவிப்பு வரும், ஆனால், இன்றைக்கு மாதக் கணக்கிலே தேவையான நிலக்கரியை, குறிப்பாக கிட்டத்தட்ட சுமார் 5½ லட்சம் டன் அளவிலே, நம் கையிருப்பிலே இருப்பதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள் இதற்கு நான் முதலிலே நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கீழ்பவானி அணையிலே புனல்மின் திட்டம் ஒன்று உருவாக்குவதற்கு — சுமார் 8 மெகாவாட் என்று கருதுகிறேன்; காங்கேயத்திற்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வருகை தருகிற நேரத்திலே, அதற்கு அடிக்கல் நாட்டவிருக்கிறார்கள்.

அந்தப் பணி மிக விரைவாகத் தொடர்ந்து நிறைவேற்றப் படுமேயானால், அந்தப்பகுதியிலே மின்இணைப்புப்பெறுவதற்கு கொஞ்சம் உறுதுணையாக இருக்கும். அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து, அந்த இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டுமே, நீண்ட தொலைநோக்குத் திட்டமாக கி. பி. இரண்டாயிரம் வருகிற போது, நமக்கு எத்தனை லட்சம் யூனிட்டுகள் தேவைப்படுகிறதோ அதை மனதிலே வைத்து மிகப் பெரிய ஒரு திட்டத்தை, வருகிற எதிர்காலத்திலே குறிப்பாக, தமிழகம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே மின்சாரத்திலே தன்னிறைவு பெறுகிற ஒரு மாநிலமாக உருவாகிற மிகப் பெரிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். அதற்கு நான் இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு கோபிசெட்டிப் பாளையம் பகுதியிலே, தனியாக ஒரு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் திறக்க வேண்டுமென்று கோப்புகள் அரசிற்கு வந்திருப்பதாக அறிகிறோம். ஆகவே, கோபிசெட்டிப் பாளையத்திலே,—தமிழகத்திலே இருக்கிற மாவட்டங்களிலேயே அதிகமாகக் கண்காணிக்கிற, ஒரு பெரிய மேற்பார்வையாக இருப்பது ஈரோடு தான். ஆகவே, தனியாக கோபிசெட்டிப்பாளையம் பகுதிக்கு—கோபிசெட்டிப் பாளையம், சத்தியமங்கலம் போன்ற பகுதிகளை வைத்து—தனியாக ஒரு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் திறக்க வேண்டும். அதுமட்டுமல்ல; என்னுடைய தொகுதியிலே நம்பியூர் அல்லது புளியம்பட்டியிலே ஒரு கோட்ட அலுவலகம் திறப்பதற்கு கோப்புகள் வந்திருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, நிலக்கரியை வெளி நாட்டிலே அல்லது வெளி மாநிலங்களிலேயிருந்து எடுத்து வருவதற்கு தனியாக கப்பல்களை மின் வாரியமே பெற வேண்டும். மின் வாரியமே அதற்குத் தனியாக கப்பல்களைப் பெற்று அவற்றை அது தானாகவே இயக்குகிற ஒரு நிலைமையை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்து கொண்டு முடிவு எடுக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, என்னுடைய மாவட்டத்தில் ஷெண்பகப்புதூர், புஞ்சை புளியம்பட்டி, கொத்தமங்கலம் போன்ற பகுதிகளில் எல்லாம் 11 கே.வி. மின் அழுத்தம் வரவேண்டியிருந்தாலும் அந்தப் பகுதிகளிலே, இரண்டு மாத காலமாக, 8-50 மின் அழுத்தம் தான் வருவதாகச் சொல்கிற



காரணத்தினால், அந்தப் பகுதிகளிலே இருக்கிற விவசாயப் பம்பு செட்டுகள் முழுமையாக இயங்குவதிலே கொஞ்சம் கோளாறு ஏற்படுகிறது.

பிற்பகல் 1-10

வீதி விளக்குகள், குழல் விளக்குகள் கூட மின் மோட்டார்கள்
ஓடும்போது எரிய முடியாத ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.
ஆகவே, உடனடியாக இதை மாற்றியமைப்பதற்கு—ஈரோடு
பகுதியிலேயிருந்து முன்பெல்லாம் இணைப்புத் தந்து கொண்டு
இருந்தார்கள் என்று சொல்லி இருக்கின்றார்கள். இப்போது
அது நிறுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.
அதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதை இந்த
நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொண்டு, இந்த மின் இணைப்பு வீடுகளுக்குத் தருவதில் கிராமப்
பகுதியிலே ஊராட்சி ஒன்றியத்தினுடைய அங்கீகாரம் பெற்றுத்
தான் தரவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், நிறைய பேர்கள்
வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அங்கீகாரம் பெறாம
லேயே, கிராமப்புறத்திலே தெரியாத காரணத்தினால் கட்டி
இருக்கிறார்கள். அதனால் அவர்கள் மின் இணைப்புப் பெறு
வதற்கு மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே,
இனிமேல் கட்டுகின்ற வீடுகளுக்கு மட்டும் அவர்கள் அந்தச்
சட்டத்தை வைத்துக் கொண்டு, இப்போது கட்டியிருக்கின்ற
வீடுகளுக்கு அதைத் தளர்த்தி மின் இணைப்பு கொடுப்பத கு
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டுமென்பதை
இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்து, ஊராட்சி மன்றங்
களில், பேரூராட்சிகளில் இருக்கின்ற வீதி விளக்குகள் எரிவதில்
பகலிலே கூட பாதி விளக்குகள் இன்றைக்கும் எரிந்து கொண்டு
இருக்கின்றன. நான் கூட போகும் வழியிலே சத்தம் போட்டுக்
கொண்டு போவேன். ஆகவே, இதை எப்படியாவது கட்டுப்
படுத்த வேண்டும். ஊராட்சிப் பகுதிகளுக்கு ஒரு அதிகாரியைக்
குறைந்த அளவு சம்பளத்திலேயாவது ஒரு 200 ரூபாய், 300
ரூபாய் நியமனத்தில், அது போன்று ஏதாவது ஒரு ஊராட்சி
மன்றப் பகுதியில் ஒருவரை நியமித்து 5 மணிக்குக் காலையில்
கிளம்பி எல்லா விளக்குகளையும் அணைக்கின்ற நிலைமையை
உருவாக்க வேண்டும். அதே போல, மாலை 5 மணிக்கே
விளக்குகளைப் போட்டு விடுகிறார்கள். இருட்டு வந்த பின்பு
தான் வீதி விளக்குகளைப் போட வேண்டும். சீக்கிரமே
போட்டு விடுவதால் மின்சாரமும் செலவாகிறது. குழல் விளக்கு
கள் எரிகின்ற காலமும் அதிகமாகின்றது. அதனால் விளக்குகள்
பழுதடைந்து போய் இரண்டு செலவு ஆகி விடுகிறது. இது
தவிர்க்கப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே
மாண்புமிகு அமைச்சரிடத்திலே தெரிவித்துக் கொண்டு

(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, இந்த நல்லதொரு நிகழ்ச்சியிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிகழ்ச்சியில் பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. மின்வாரியத்திற்கான நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்குத் தான் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு அனுமதி தந்திருக்கிற உங்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, மின் துறை தமிழகத்திலே மக்களுடைய அத்தியாவசியமான தேவையில் ஒன்றாக இருக்கிறது. அதே போன்று மின்சாரத் துறையில் இன்றைக்கு அநேகமாக மக்களுடைய தேவைகளைக் கருதி மிகப்பெரிய நட்டத்திலே இந்த மின்துறை நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் இன்றைக்கு விவசாயிகளுக்கு வழங்கக் கூடிய மின்சாரத்தை மூன்று வகையாகப் பிரித்துக் கூறலாம். ஒன்று இலவசமாகவும், இன்னொன்று சலுகை அடிப்படையிலேயும், இன்னொன்று ரூ. 25,000 கட்டினால் மின்சாரம் வழங்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. நான் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 5 இலட்சம் பேர்கள் பம்பு செட்டுகளுக்கு மனுக்கள் அளித்து மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அரசு வருடத்திற்கு 40 ஆயிரம் பேர்களுக்கு மட்டும் தான் மின்சாரம் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறது தன்னுடைய நிதிநிலை அறிக்கைக் குறிப்பிலே. குறிப்பாக இதனுடைய கணக்கைப் பார்த்தால் கொடுத்திருக்கிற மனுவின்மீது பரிசீலனை பண்ணி மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று சொன்னால் சுமார் 12 வருட காலமாவது ஆகும். இந்த 12 வருட காலத்திலே இன்னொரு 5 இலட்சம் பேர்கள் மனுக் கொடுப்பார்கள். ஆக, ஒரு 25 ஆண்டுகள் ஆகிவிடும். நாம் எதிர்பார்த்தபடி மின்சாரத் திட்டம் விவசாயிகளுக்குப் போய்ச் சேராது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் ,வருடத்திற்கு ஒரு இலட்சம் பேர்களுக்காவது விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால்



இன்றைக்கு 40 ஆயிரம் பேர்களுக்கு மட்டும் தான் கொடுக்கப் படுகிறது. இதிலேயும் கூட ஏழையெளிய விவசாயிகள் கிணறு களை வெட்டி விவசாயம் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. நீங்கள் பல்வேறு விவசாயிகளுக்கு ரூ. 25,000 கட்டினால் மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று சொன்னால், 5 ஆண்டு, 6 ஆண்டு, 3 ஆண்டு காலத்திற்குள் மின்சாரம் வேண்டும் என்று எதிர்பார்ப் பவர்கள் எதையாவது உடைமைகளை விற்று இப்படியாவது ரூ. 25,000-த்தைக் கட்டி மின் இணைப்புப் பெற்று விடலாமா என்கிற ஒரு சூழ்நிலைதான் ஏற்படுமே தவிர, நிச்சயமாக ஏழை யெளிய விவசாயிகளுக்கு இந்த திட்டம் முழுமையாகப் போய்ச் சேராது. ஆகவே வசதி படைத்தவர்களுக்கு வாய்ப்பு உண்டு பண்ணுகின்ற திட்டம்தான் இந்த ரூ. 25 ஆயிரம் திட்டம் என்பதைத் தவிர, ஏழை விவசாயிகளை இதன் மூலமாக பாது காத்திட முடியாது. அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும்.

பிற்பகல் 1–15

அதேபோன்று மின்சாரத் திருட்டுக்களை நாம் கட்டுப் படுத்த வேண்டும். தமிழகத்திலே இருக்கிற மிகப் பெரிய ஆலைகளில் அநேகமாக பெரும்பகுதி இடங்களில் பெரிய ஆலை களில் நடைபெறக்கூடிய மின் திருட்டுக்களை இங்கே கட்டுப் படுத்துவதற்கு ஒரு குழு ஒரு ஆய்வினை செய்ய வேண்டும். பல இடங்களிலே நடைபெறுகின்ற அந்தத் திருட்டுகள் காரண மாக மின் வாரியத்திற்கு மிகப் பெரிய நஷ்டம் ஏற்படுகின்றது. அப்படி வாரியம் ஆளாகக் கூடிய ஒரு நிலைமை தமிழகத்திலே இருக்கிறது. எப்படியெல்லாம் அவர்கள் மின் விநியோகத்தி லிருந்து ஆலைகளிலே எடுக்கிறார்கள் என்பதனை அரசாங் கத்திலே கண்டறிய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதை நாம் பார்க்க முடிகிறது. இன்னும் ஏழையெளிய மக்களுக்கு, கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்கு மின் திட்டம் வழங்கு கின்ற அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டும் கூட பல்வேறு கிராமங் களுக்கு மின்சாரத் திட்டங்களே போய்க் கிட்டவில்லை.

நாம் நகரத்திலே பார்த்தோம் என்று சொன்னால், மரங் களிலேயும் செடிகளிலேயும் மின் விளக்குகள் போடப்பட்டிருக் கின்றன. ஆனால் கிராமங்களிலே உழைக்கின்ற விவசாயிகள், கிராமப் புறத்து மக்கள் பாம்புகளும், பூச்சிகளும், விஷ ஜந்துக் களும் இருக்கக் கூடிய இடத்தில் நடந்து போகக் கூடிய பாதை களுக்கு மின்சார விளக்குகள் இல்லை. அங்கு எரிகின்ற விளக் காவது எப்படி வெளிச்சம் தருகிறது என்று சொன்னால், அதாவது ஒரு மெழுகுவர்த்தி வெளிச்சம் மாதிரி இருக்கிறது. மின் விளக்கு கள் அது போன்று இருக்கிறது. ஆனால் அந்த மின் அழுத்தங் களைக் கொண்டு இருக்கின்ற ஜெனரேட்டர்களும், மோட்டார் களும் புதிதாகப் பொறுத்த வேண்டும். பழுது பார்க்க வேண்டும்.

நான் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பொறுப்பேற்று இருக்கின்ற காரணத்தால் மட்டும் இன்று இதை சொல்லவில்லை. தொடர்ந்து அது மின்துறையிலே இருக்கக்கூடிய மிகப்பெரிய கோளாறு ஆகும். அதேபோன்று மின்சாரத் திட்டங்களை இன்றைக்கு தனியார் துறைக்கு விட்டு, காற்று அழுத்தத்தின் மூலமாக மின்சாரம் தயாரிக்கப்படும் என்றும், மின்சார தயாரிப்பை அவர்களுக்கு விடுவது என்றும் சொல்லி இருக்கிறார்கள். அதே போன்று அவர்களுக்கு உக்குவிக்கின்ற அதே நேரத்தில் நம்முடைய மின் துறையில் இருக்கக்கூடிய அந்த நிர்வாகச் சீர்கேடுகளை ஒழுங்குப் படுத்த வேண்டும் என்று சொன்னால், நம்முடைய வாரியத்தினை ஒரு 5 பிரிவாகப் பிரிக்க வேண்டும். தமிழ்நாட்டில். இல்லையென்றால், இந்த மின்சார வாரியத்தில் வரக்கூடிய தவறுகளை நீங்கள் கண்டறிய முடியாது. இன்றைக்கு முழுமையாக எந்த ஒரு அதிகாரியும், சேர்மேனும் பொறுப்பேற்று நடத்த முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஒரு 5 பிரிவாகப் பிரியுங்கள். 5 இடங்களிலே டிவிஷன்களாக வைத்து, 5 அதிகாரிகளைப் போட்டு கண்காணியுங்கள். அதிலே நடக்கிற தவறுகளை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும். அதற்கான முயற்சிகளிலே நீங்கள் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்றுதான் இந்த குடிசைகளுக்கு வழங்கக்கூடிய மின்சாரங்கள். இந்த வாரியம் குடிசைகளுக்கு வழங்கக்கூடிய அந்த மின் திட்டங்களை ஆண்டுதோறும் சொல்லிக் கொண்டே வருகிறோம். ஆனால் முழுமையாக இன்னும் தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களுக்கு, கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்கு நாம் கொண்டு போய் சேர்க்க முடியவில்லை. நான் குறிப்பாக இங்கே வந்திருக்கின்ற அதிகாரிகளுக்கு கவனத்திற்கு கொண்டு வருகிறேன். பல ஆண்டுக் காலமாக 1972 லே அடித்த புயல் வெள்ளத்தால் சாய்ந்திருக்கின்ற மரங்களை தஞ்சை மாவட்டத்திலே இழுத்துக் கூட நட முடியாத ஒரு நிலை இருக்கிறது.

நான் நாகை—காயிதே மில்லத் மாவட்டம், அது போன்று முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆலங்காடு பஞ்சாயத்து கோசிக்கரை என்ற தெரு இவைகளை அதிகாரிகள் கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும். பல மாடுகள் இந்தக் கம்பிகளிலே அடிபட்டு இறந்து போய் இருக்கின்றன. ஒரு குழந்தை இறந்து போய் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் மனுக் கொடுத்து, மனுக் கொடுத்து பார்த்து இன்னும் அந்த மரங்களை தூக்கி நிமிர்த்த முடியாது, நட முடியாத நிலை இருக்கின்றது.

அதுபோன்று இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. இதையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று அனேகமாக



நம்முடைய டெபாசிட் தொகை. அது பாருங்கள். அது கணக்கில்லாமல் ஒவ்வொரு தடவையும் ஒரு பில் வந்து கொண்டே இருக்கிறது. அதற்கு முன்னாலே கரண்ட் போய் தொட்டால் தான் ஷாக் அடிக்கும். இப்போது அந்த பில்லைத் தொட்டாலே ஷாக் அடிக்கிறது. கரண்ட் தொட்டால் ஷாக் அடிக்கிற நேரத்திலே மின்சார வாரியத்திலே இருந்து வரும் பில்லைத் தொட்டால் ஷாக் அடிக்கிறது. ஒவ்வொரு நேரத்தில் ஒரு உத்தரவு வருகிறது. ரூ. 500 கட்ட வேண்டும். ரூபாய ஆயிரம்கட்டத் வேண்டும் என்று வருகிறது. சாதாரணமாக கடை வைத்திருக்கக் கூடிய ஏழையெளியவர்கள் கூட இந்த நிலைமையைச் சமாளிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

அதே போன்று ஆண்டு ஆண்டுக்காலமாக குடியிருக்கக்கூடியவர்கள், புறம்போக்கிலே குடியிருக்கக் கூடியவர்கள், அவர்களுக்கு பல்வேறு இடங்களில், அந்த நிலங்களிலே குடியிருப்பவர்கள் அவர்களுக்குக் கூட சப்ளை மனு செய்தும் வழங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் அவர்கள் கடைகள் வைத்திருக்கின்றார்கள். செலுத்த வேண்டிய வரியெல்லாம் வைத்திருக்கிறார்கள். பட்டா இருந்தால் தான் அவர்களுக்கு மின் சப்ளை கொடுக்க முடியும் என்கின்ற கட்டிலிருந்து அவர்கள் தளர்த்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் அவர்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் கேட்டுக் கொண்டு, அமர்கிறேன்.

பிற்பகல் 1-20

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. எச். எம். ராஜு.

*<u>திரு. எச். எம். ராஜு</u> : மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி என்னுடைய ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மின்சாரம் அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானதுடன் தொழில் துறை, விவசாயத் துறை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான ஒரு இடுபொருளாக திகழ்கிறது. கடந்த காலம் போல அல்லாமல் தற்போது மின்சார வெட்டு இல்லையென்று கூறும்போது மகிழ்ச்சியடைகிறோம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இத்துறையின் அதிகாரிகளுக்கும் என்பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல் மின் நிலையம் 5ஆவது முறையாக மத்திய அரசின் சிறப்பு விருதை பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்நியச் செலவாணியை அதிக அளவில் பெறும் வகையில் என்.ஆர்.ஐ. வெளிநாட்டில் இருக்கும் இந்தியர்கள் நம் நாட்டில் தொழில் நிறுவனம் அமைக்க முன்வரும்போது அவர்களுக்கு மிகவும் சுலபமான முறையில் மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

மின்சாரம் திருட்டுப் போவதைப் பொறுத்தவரையில் திருடு வதைத் தொழிலாக அதை சில சமூக விரோதிகள் கையாண்டு வருகிறார்கள். இந்தத் திருட்டைத் தவிர்க்க சிறந்த திட்டம் உருவாக்கப்பட வேண்டும். நீதிமன்றங்களில் மின்சார திருட்டிற்கு கடுமையான தண்டனை விதிக்க வழிவகை செய்ய வேண்டும். மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் வகையில் விளம்பரம் செய்யப்பட வேண்டும். உதாரணமாக வானொலிமூலமாகவும், டி.வி. மூலமாகவும் இவைகளை மக்களுக்குப் புரிய வைக்கலாம். கிராமங்களில் குழுக்களை அமைத்து அதன் மூலமாகவும் திருட்டுக்களைத் தவிர்க்கலாம்.

குடிதண்ணீப் பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுத்து எங் கெங்கு குடிதண்ணீருக்கு மின் இணைப்பு வேண்டுமோ அங்கெல் லாம் உடனடியாக மின் இணைப்பு கொடுக்க வேண்டுகிறேன்.

மின்சாரத்தை கண்டிப்பாக வீணாக்காமல் சேமிப்புக்கு வழி வகைகளை, ஒரு சில உதாரணங்களைக் கூற விரும்புகிறேன். 1990–91இல் காற்றின் மூலம் மின் உற்பத்தி செய்வதில் தமிழ் நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு சக்தி வளர்ச்சி நிறுவனம் இரண்டும் இணைந்து முதல் இடத்தைப் பெற்று இரண் டாவது முறையும் மத்திய அரசின் பரிசை பெற்றிருப்பது மகிழ்ச் சிக்குரியது.

இரண்டுக்கும் மேற்பட்ட மெகாவாட் திறன் கொண்ட புதிய காற்றுப் பண்ணைகளை ஒவ்வொரு மாவட்டங்களிலும் நிறுவிட வேண்டுகிறேன்.

மாநிலத்திலுள்ள எல்லா குடிசைகளுக்கும், முக்கியமாக ஆதி திராவிடர் பழங்குடியினர் குடிசைகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுகிறேன்.

மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் பொதுவாகத் தெரு விளக்குகள் சிறப்பான முறையில் இயங்கவில்லை. தெரு விளக்குகளை எல்லா கிராமங்களுக்கும், முக்கியமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் வசிக்கிற எல்லா குடியிருப்பு



களுக்கும் மிகவும் முக்கியமான ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத் தின் கீழாவது இவைகளை எடுத்து செய்து அம்மக்கள் வளர்ச்சி யடைய வேண்டுமென்ற முறையில் செய்து கொடுக்க வேண்டு கிறேன். சிறப்புத் திட்டத்தின் கீழ் 14 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டதில் இன்னும் சுமார் 3 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதை உடனடியாக நிறைவேற்ற வழிவகை செய்திட வேண்டுகிறேன்.

வருடம் 40 ஆயிரம் வேளாண்மை பம்ப் செட்டுகளுக்கு புது மின் இணைப்பு வழங்குவதை உயர்த்தி சுமார் 60 ஆயிரம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

சோலார் எனர்ஜியைப் பற்றி தமிழ்நாடு மின்சார வாரியத் தின் 1992–93 நிதி நிலை அறிக்கையில் ஒன்றும் குறிப்பிட வில்லை. சோலார் எனர்ஜிக்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுத்து மின் உற்பத்தியை பெருக்குவதன் மூலம் தமிழ்நாடு மின்வாரியம் 1992–93ஆம் ஆண்டு துண்டுவிழும் ரூ. 458.30 கோடியை சிறப்பான முறையில் குறைக்க உதவும் என்ற கருத் தைக் கூற விரும்புகிறேன். மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங் களிலும் இந்த சிறப்பான திட்டத்தை மிகவும் தீவிரமாக தமிழ் நாடு மின்சார வாரியமும், தமிழ்நாடு சக்தி வளர்ச்சி நிறுவனமும் சேர்ந்து செயல்படுத்த வேண்டுகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் மின்சாரம் ஓரளவு உற்பத்தி செய் தாலும் கூட மக்களுக்கு இன்னும் மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது. பல பகுதிகளில் லோ வோல்டேஜ் காரணமாகக் குறைந்த மின் அழுத்தம் காரணமாக நல்ல முறையில் விளக்குகள் எரிவதில்லை. டியூப் லைட்கள் இரவு 10 மணிக்கு மேல் தான் எரிகின்றன. மாணவர்கள் தேர்வுக்கு படிக்கின்ற இந்த நேரத்தில் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, உடனடி யாக புதிய சில டிரான்ஸ்பார்மர்களை, அதிக அளவுக்கு நெருக் கமாக அமைத்து மக்களுக்கு உதவ வேண்டுகிறேன். தெரு விளக்குகள் சரிவர நமது நீலகிரி மாவட்டத்தில் எரிவதில்லை. மலைப் பிரதேசமாக இருக்கும் காரணத்தால் நமது நீலகிரி மாவட்டத்திற்கு விசேஷ சலுகையாக அதிக அளவில் தெரு விளக்குகள் கொடுத்து உதவுமாறு மாண்புமிகு அமைச்சரவர் களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 1-25

மின்சார உற்பத்தி செய்த பிறகு வீணாகச் செல்லும் தண் ணீரை வைத்து குறைந்த அளவில் சில மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். ஏற்கெனவே நீங்கள் அதைச் செய்து தந்திருக்கிறீர்கள். ஆகவே, இந்தத் திட்டத்தையும்—அதாவது

வீணாகும் அந்தத் தண்ணீர் மூலமாக மேலும் சில மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தையும் அரசு கவனத்தில் கொண்டு, எங்கெங்கு இந்த மாதிரித் திட்டங்களைச் செயற்படுத்த முடியுமோ அந்த இடங்களில் மேலும் சில மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்து மக்களுக்கு உதவலாம் என்ற கருத்தைச் கூற விரும்புகிறேன்.

மேலும், நம்முடைய நீலகிரி மாவட்டத்து மக்களுடைய நெடு நாளைய கோரிக்கை ஒன்றை தங்கள் முன் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நமது நீலகிரி மாவட்டத்தில் மின்சார உற் பத்தி பல பகுதிகளில் செய்தாலும்கூட, நீலகிரி மாவட்டத்தில் மின்சார சர்க்கிள் அலுவலகம் இல்லை. சர்க்கிள் அலுவலகம் கோவை மாவட்டத்தில்தான் இருக்கிறது. மாவட்டத்தினுடைய மக்களாகட்டும், மாவட்டத்தினுடைய அதிகாரிகள் ஆகட்டும் கோவை மாவட்டத்திலுள்ள மின்சார சர்க்கிள் அலுவலகத்திற்குட் பணிக்காகச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே மாண்பு மிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டிலாவது நீலகிரி மாவட்டத்தில் ஒரு மின்சார சர்க்கிள் அலுவலகத்தைக் கண்டிப்பாக அமைத்துக் கொடுக்கும்படி மாவட்டத்து மக்களின் சார்பாக வேண்டுகிறோம்.

அடுத்து முக்கியமாக மின்சாரத் துறை அலுவலகங்கள் ஓரே இடத்தில் இருக்கும் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில் உதகையில் மின்சார வாரியத்தின் புதிய காம்ப்ளெக்ஸ் கட்டிடம் ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறோம்.

தென்னாற்காடு மாவட்டம், மாண்புமிகு உறுப்பினர் திரு. புரட்சிமணி அவர்களின் தொகுதியில் பெண்ணாடம்நகரில்அடிக்கடி மின்சாரம் தடைபடுகிறது என்று கூறுகிறார். எனவே பெண்ணாடத்திற்குப் புதிதாக 2 அல்லது 3 டிரான்ஸ்பார்மர்களை உடனடியாக அமைத்து, அந்த நகரத்தில் ஏற்படும் மின் தடையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். எஸ். இராமசுப்பு அவர்களின் ஆலங்குளம் தொகுதியில் கீழபாவூர் நகரில் மின்சாரம்குறைந்த அழுத்தத்துடன் வழங்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு துணை மின் நிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்குமாறு வேண்டிக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் மீண்டும் நன்றியைக் கூறி விடைபெறு கிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்.



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரம், விவேகம், இணைந்த வெற்றிகளின் கருவூலம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றின் கனிந்த வடிவம், தென்னக தீபம், திராவிட இயக்கத்தின் தன்னிகரில்லா தங்கத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி), 6 கோடி தமிழ் மக்களின் நலன் காக்கும் அன்புத் தெய்வம், உலக அரசியல் வரலாறு கண்டிராத சாதனைக்கு ஒரு சரித்திரம் இவற்றின் கருவூலமாக விளங்கி, எங்களைக் காத்து நிற்கும் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வணக்கத் தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பதிலுரையை மிகச் சுருக்கமாகச் சொல்ல விழைகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1992–93 ஆம் ஆண்டுக் கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1991–92 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றின்மீதான விவாதத்தில் பல் வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். 1957லிருந்து செயல் பட்டுக்கொண்டி ருக்கிற தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய சிறப்பு இயல்பு களையும் எடுத்துச் சொன்னார்கள். அதிலே இருக்கிற குறை பாடுகளையும் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். பொதுவாக மின்சாரம் என்பது இன்றைக்கு மக்களுடைய அன்றாட வாழ்க் கைக்குத் தேவையான ஆதாரம் என்ற அளவுக்கு இன்றைக்கு மிகப் பெரியதொரு தேவையாக கருதப்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் இன்று பொற்கால ஆட்சியைப் படைத்துக் கொண்டிருக்கும் ஒப்பற்ற தலைவியான புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற நேரத்திலே, மின்சார வாரியத்திலே, இருந்த சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்று உத்தரவு விட்டு இன்றைக்கு 10 மாதக்கால ஆட்சியிலே என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத் திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். பொதுவாக மின்சார வாரியத்திலே பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இன்றைக்குப் பல்வேறு பிரச்சினைகளை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னாலும், அந்தக் குறைபாடு களைக் களைய, இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே என்னென்ன நடவடிக்கைகளை....

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதி யோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : என்னென்ன நட வடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதையும் நீங்கள் உணர்ந்து பார்க்கவேண்டும். நம்முடைய தேவைகள்

ஏராளம். ஆனால் அந்தத் தேவை அனைத்தையும் பூர்த்தி செய்
யக்கூடிய நிதி ஆதாரங்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்
பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.
மின் மாற்றிகள், துணை மின் நிலையங்கள், ஆகிய பல்வேறு
பிரச்சினைகள் நமது கிராமங்களில் இருக்கின்றன என்பது இந்த
அரசு நன்றாகத் தெரியும். அதற்கான பல்வேறு நடவடிக்கை
களை எடுத்துக்கொண்டதன் காரணமாக, பல்வேறு இடங்களில்
துணை மின் நிலையங்களையும், மின் மாற்றிகளை சீர் திருத்தி
அமைக்கின்ற பணிகளையும், குறைந்த மின் அழுத்தத்தைப்
போக்குகின்ற வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த
அரசு எடுத்திருக்கிறது. ஆண்டுக்காண்டு நமக்கு மின்சாரத்
தேவை அதிகரித்து வருகிறது. தேவைக்கேற்ற மின்சாரத்தை
உற்பத்தி செய்யவேண்டிய கடமையும் நமக்கு இருக்கிறது.
ஆகவே மின் இணைப்புகளைக் கேட்கின்ற நேரத்திலே மின்
சாரத்தை உற்பத்தி செய்யவேண்டிய இலக்கையும் நாம் நிர்ண
யிக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக இந்த ஆண்டு 5,200
மெகாவாட் மின்சாரம் தேவை என்று சொன்னால், அடுத்த
ஆண்டு அதில் மேலும் 10 சதவீதம் அதிகரிக்கும் என்ற வகையில்
அதற்கேற்ப உற்பத்தி செய்யவேண்டிய சூழ்நிலையில் இன்றைக்கு
நாம் இருக்கிறோம். அதற்கான வழிமுறைகளையும் இந்த
அரசு கையாளவேண்டிய மிகப் பெரிய பொறுப்பும் இருக்கிறது.
திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில், அரசாங்கமே
மின் உற்பத்தி முழுவதையும் செய்து, மின் உற்பத்தியைப்
பெருக்குவதற்கு அரசிடம் வாய்ப்பு இல்லை. அதற்கான நிதி
ஆதாரமும் அரசிடம் இல்லை. ஆகவேதான் மத்திய அரசு மின்
சாரத்தை உற்பத்தி செய்கின்ற பொறுப்பை தனியாருக்கு
விட்டுவிட வேண்டுமென்று சொல்லி, அதற்கான திட்டங்களை
ஊக்கப்படுத்தவேண்டுமென்று பல திட்டங்களை அறிவித்திருக்
கிறார்கள். தமிழக அரசு அந்த அடிப்படையைப் பின்பற்றி மின்
உற்பத்தியைப் பெருக்க தனியார் முன்வந்தால் அதற்காக தனி
யாருக்கு அதைக் கொடுக்கிற ஒரு நிலைமையையும் நாம் உரு
வாக்கியிருக்கிறோம். மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில்
தொலைநோக்குப் பார்வையோடு, நமது மாண்புமிகு முதல்வர்
அவர்களும், நமது அரசும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்
கள். தேவைக்கேற்ப, உதரணமாக கி.பி. 2000 ஆண்டிலே
நமக்கு 4,300 மெகாவாட் மின்சாரம் தேவை என்ற அளவுக்கு
மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல்வேறு திட்டங்களை
அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்
தான் ஜெயங்கொண்டத்தில் கிடைக்கிற பழுப்பு நிலக்கரியைப்
பயன்படுத்தி திட்டமிடப்பட்ட மின் உற்பத்தியைச் செய்கிற
திட்டம் போடப்பட்டிருக்கிறது. வட சென்னையில் உருவாகின்ற
திட்டம், தூத்துக்குடியில் உருவாகின்ற திட்டம் போன்றவை
களைச் சொல்லலாம். அன்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்
கள் தூத்துக்குடியில் 420 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும்.



திட்டம் துவக்கிவைத்திருக்கின்றார்கள் என்றால் அது ஒரு
வரலாற்றுச் சாதனை என்பதை இந்த நேரத்தில் தெவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆகவே அதன் காரணமாகத்தான் மிகவும் வேகமான முனைப்
போடு முன் ஏற்பாட்டோடு நடவடிக்கை எடுத்ததன் காரண
மாகத்தான், திட்டங்கள் எல்லாம் விரைவு படுத்தப்பட்டு, இன்
றைக்கு பல பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்
பதை இன்றைக்கு எல்லா உறுப்பினர்களும் நன்றாக அறிவார்கள்.
ஆகவே மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் நாம் 2
வழிகளில் உற்பத்தி செய்கிறோம். ஒன்று ஹைடல், மற்றொன்று
தெர்மல். கடந்த காலங்களில் புனல் மின் நிலையங்கள்
(ஹைடல்) மூலமாக 80 சதவீதம் மின் உற்பத்தியைச் செய்
தோம். ஆனால் இப்போது அதன் மூலம் 20 சதவீதம் மின்
உற்பத்திதான் செய்ய முடிகிறது. ஆனால் அனல் மின்சார
நிலையங்களில் மூலமாக இப்போது 80 சதவீதம் மின்
உற்பத்தி செய்கிறோம். தூத்துக்குடி அனல் மின் நிலையம்,
எண்ணூர் அனல் மின் நிலையம், மேட்டூர் அனல்
மின் நிலையம் போன்றவைகள் இன்றைக்கு செம்மையாகச்
செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க
முடியாது. கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்ட தொய்வாக
இருந்த அனல் மின் நிலையங்கள் எல்லாம் இன்றைக்கு நமது
புரட்சித்தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றுக்
கொண்டதற்குப் பின்னாலே அந்தப் பணிகள் எல்லாம்
முடுக்கிவிடப்பட்டு, செம்மையாகப் பணியாற்றிக் கொண்டிருக்
கின்றன என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்றாக அறி
வார்கள். அதன் விளைவாகத்தான், தொடர்ச்சியாக தூத்துக்
குடி அனல் மின் நிலையம் பல்வேறு சாதனைகளைப் படைத்து
பரிசுகளைப் பெற்றிருக்கிறது. அதேபோல் எண்ணூரில் இருக்
கின்ற அனல் மின் நிலையம் நம்முடைய ஆட்சியில் முடுக்கிவிடப்
பட்டு உற்பத்தியில் நல்ல நிலைமையைப் பெற்றிருக்கிறது
என்பதையும், அதேபோல் மேட்டூர் அனல் மின் நிலையம்
சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு சிறந்தமுறையில் செய
லாற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில் நமக்கு
முக்கியமான பிரச்சினையாகவும், தேவையாகவும் இருப்பது
நிலக்கரிதான். நிலக்கரியை வெளிமாநிலங்களிலிருந்து கப்பல்கள்
மூலம் கொண்டுவரவும், பின்னர் அதை ரயில்களில் ஏற்றிச்
செல்லவும் நமக்கு அதிகமான செலவாகின்றது. நம்மிடத்திலே
தேவையான நிலக்கரி கிடைக்கவில்லை. இதற்காக பல்வேறு
செலவுகளை நாம் ஏற்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக
350 ரூபாய்க்கு வாங்கப்படுகின்ற நிலக்கரி நமக்குக் கிடைக்

கிறபோது 1,000 ரூபாய் ஆகிவிடுகிறது. அப்படியே கொண்டு வருகிற நிலக்கரி பூராவும் பயன்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. கொண்டு வருகிற நிலக்கரியில் 50 அல்லது 60 சதவீதம்தான் நாம் மின் உற்பத்திக்காகப் பயன்படுத்துகிறோம். ஏனென்றால் அதில் சாம்பல் சத்து அதிகமாக இருக்கிறது.

பிற்பகல் 1-35

நம்முடைய இந்தியாவில் இருக்கின்ற நிலக்கரியை ஹால்
டியா, பாரதீப் போன்ற துறைமுகங்களிலிருந்து கொண்டு
வருகிறோம்; விசாகப்பட்டினத்திலிருந்து கொண்டுவருகிறோம்.
அப்படி கொண்டுவருகிற நேரத்தில் அந்த நிலக்கரியில் ஐம்பது
சதவீதத்திற்கு மேலே சாம்பல் சத்து இருக்கிறது. அந்த
சாம்பல் சத்தையும் சேர்த்துதான் ஏற்றிக்கொண்டு வருகிறோம்.
அதற்கும் சேர்த்துதான் வாடகையை கொடுக்கிறோம். ஆகவே
தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தோனேஷி
யாவிலிருந்தாவது ஆஸ்திரேலியாவில் இருந்தாவது களோரிக்
வால்யூ அதிகமாக இருக்கின்ற நிலக்கரியைக் கொண்டுவர
வேண்டும் என்று இன்றைக்கு நடவடிக்கை எடுத்திருக்
கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காக மைய
அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். அதன் மூலம்
நமக்கு ஏறத்தாழ நாற்பது நாற்பத்தைந்து கோடி ரூபாய்
மிச்சப்படும். அதற்கான கணக்கை எடுத்து மின்சார வாரியத்தி
னுடைய உயர் அதிகாரிகளோடு விவாதிக்கப்பட்டு வெளி
நாட்டிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்தால் எந்த
அளவிற்கு மின்சார வாரியம் இலாபம் ஈட்ட முடியும் என்ற
கணக்கை எடுத்துப் பார்க்கிற நிலையை இந்த அரசு எடுத்துக்
கொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை நமது
மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்
கிறார்கள் ஆகவே நிலக்கரியை பொறுத்த வரையில்
நமக்குத் தேவையான நிலக்கரியை வெளிநாட்டிலிருந்து
கொண்டு வருவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்
திருக்கிறது. உள்நாட்டிலிருந்து வருகிற நிலக்கரி தேவையை
நிறைவு செய்கின்ற அளவிலே இருக்கிறது. எனக்கு முன்பு
பாராட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னது
போல ஒரு காலத்திலே இரண்டு நாட்களுக்கு, மூன்று
நாட்களுக்கு நிலக்கரி இருப்பு இருந்தது என்ற நிலைமையை
மாற்றி இன்றைக்கு இருபது நாட்களுக்குத் தேவையான நிலக்கரி,
ஒரு மாதத்திற்குத் தேவையான நிலக்கரி, பல இலட்சக்
கணக்கான டன் நிலக்கரியைக் கொண்டு வந்து அடுக்கி
வைத்திருக்கிற அரசு புரட்சித் தலைவியினுடைய அரசு
என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். (மேசை
யைத் தட்டும் ஒலி).



கோடை காலத்திலே கூட மின்சார வெட்டு இல்லை என்று
மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்
கிறார்கள். கோடை என்று சொன்னாலே எந்த நேரம் டிரான்ஸ்
பார்மர் போகுமோ, எத்தனை மணிக்கு கரண்ட் இல்லாமல்
போகுமோ, ஃபேன் ஓடாமல் போகுமோ என்ற அவலநிலை
இருந்தது கடந்த காலத்திலே. இன்றைக்கு அந்த நிலை இல்லை
அதை மாற்றியமைத்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்கள். எதனால் அந்த நிலை மாறியிருக்கிறது
என்று கேட்டால், அவருடைய திறமையான அடுக்கடுக்கான
நடவடிக்கைகள், இந்த வாரியத்தை மக்கள் தொடர்புடைய
வாரியமாக மாற்றியிருக்கின்ற பாங்கு, மின்சார வாரியத்தில்
இருக்கின்ற அதிகாரிகள் அரசுக்குக் கட்டுப்பட்ட அதிகாரிகள்
என்று கொண்டு வந்திருக்கின்ற நிலைமை, இப்படி அடுக்
கடுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாகத்
தான், உற்பத்தியை பெருக்கி, நிலக்கரியை அதிகமாக
கொண்டு வரச் செய்து, தொழிலாளர்களுக்கு உற்சாகத்தைக்
கொடுத்து, மின்சார வாரியத்தின் நிர்வாகத்தைச் சீரமைத்த
தன் விளைவாகத்தான் இன்றைக்கு நிலை மாறியிருக்கிறதே
தவிர ''மந்திரத்திலே மாங்காய் காய்த்துவிடவில்லை''.
(மேசையைத் தட்டும் ஒலி).

எத்தனை ஆண்டுக் காலம்
தேவைகளைச் சொல்லலாம். தொடர்புடைய மின்சார
மின்சார வாரியம் மக்களோடு இருந்தது என்பதை
வாரியமாக கடந்த ஆட்சிக் காலத்திலே வேண்டும். மாண்புமிகு உறுப்
நீங்கள் எண்ணிப் பார்க்க
பினர்கள் நன்றாக அறிவார்கள். இது மக்கள் தொடர்புடைய
இலாக்காவாக இல்லை என்று சொல்லி குறைபட்டுக் கொண்
டார்கள். குறை இருக்கிறது, ஒத்துக்கொள்கிறேன். அத்தனை
பேரும் மாறிவிட்டார்கள் என்று நான் ஏற்றுக்கொள்ள
மாட்டேன். அதை சொல்ல நான் தயாராக இல்லை. மின்
சார வாரியத்தில் உள்ள குறைபாடுகளை, மாண்புமிகு
தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்
பேற்றுக் கொண்ட பின்னாலே எந்த அளவிற்குச் சீர்படுத்தி
யிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.
குறைகளே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால்
அந்தக் குறைகளோடு நாங்கள் எடுத்துள்ள நிறைவுகளையும்
நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு
உறுப்பினர் பழனிசாமி போன்றவர்களுக்கு சொல்லிக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி)

மின்சார வாரியத்தை மக்களோடு தொடர்புடைய ஒரு
வாரியமாக ஆக்கி, இன்றைக்கு மின்சார அலுவலகங்களுக்குப்
போனால் ஓரளவிற்கு மதிக்கக் கூடிய அளவிற்கு நிலைமைகளை

உருவாக்கியிருக்கிறோம். இந்த ஆறு மாத காலத்திலே நீங்கள்
சொல்லக்கூடிய குறைகள்கூட இல்லாமல் மின்சார வாரியம்
முழுக்க முழுக்க தமிழக மக்களுடைய நலனுக்காக பாடுபடக்
கூடிய ஒரு துறையாக மாற்றிக் காட்டுவோம் என்பதை, புரட்சித்
தலைவியின் அரசு செய்து காட்டும் என்பதை இந்த நேரத்திலே
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
ஆகவேதான் சில நேரங்களிலே அதிகாரிகளை மாற்றும்போது
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்காக குறைபட்டுக்
கொள்ளக் கூடாது. ஒரு நிர்வாகத்தை நடத்துகிறபோது
அதிலே இருக்கின்ற பிரச்சினைகள் அந்த நிர்வாகத்தை நடத்து
கிற தலைமைக்கும், அதன் கீழ் பணியாற்றுகிறவர்களுக்கும்
தான் தெரியும். ஆகவே அதிகாரிகள் மாற்றம் என்பது
அரசின் நிர்வாகத்தினுடைய பிரச்சினை. ஆகவே சட்ட
மன்ற உறுப்பினர்கள் பிரச்சினைகளைச் சொல்லுகிற
நேரத்தில் நிறையவே காரியங்களைச் செய்ய வேண்டும் என்
கிறீர்கள், அதிகாரிகளையும் மாற்றக் கூடாது என்றும் சொல்லு
கிறீர்கள். ஆகவே நீங்கள் சொல்லுகிற நேரத்தில் ஒரு நிலையை
எடுத்தாக வேண்டும். இந்த அரசு முனைப்போடு செயல்பட
வேண்டுமென்றால் அதிகாரிகள் செயலாற்ற வேண்டும் என்று
சொல்ல வேண்டுமே தவிர, அதிகாரிகளை மாற்றும் விஷயத்
தில் தயவு செய்து சட்ட மன்ற உறுப்பினர்கள் மாற்று கருத்து
தெரிவிக்கக் கூடாது. அரசினுடைய நிர்வாகத்திற்காக சில
நடவடிக்கைகளை எடுக்கிற போது அதை குறை சொல்லக்
கூடாது என்று உங்களை நான் மன்றாடிக் கேட்டுக் கொள்
கிறேன். ஆகவே எந்த அதிகாரியை மாற்றினாலும் நாங்கள்
மக்களுடைய நலனுக்காக, மக்களுடைய தேவைக்காக, மக்க
ளுடைய பிரச்சினைகளுக்காகத்தான் மாற்றுகிறோமே
தவிர தனி நபர் நலனுக்காக அல்ல என்பதை நான் இங்கே
சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக மின்சார வாரியத்தில் 'லைன் லாஸ்' பிரச்சினை
மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இந்தியாவில் 21
சதவீதம் லைன் லாஸ் இருக்கிறது. தமிழ்நாட்டில் 18 சத
வீதமாகக் குறைத்திருக்கிறோம். இருந்தாலும் மேலும் குறைக்க
வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்
களைத் தெரிவித்திருக்கிறார்கள். உற்பத்தி செய்கின்ற மின்
சாரம் வீணாவதைத் தடுக்க வழி முறைகள் கண்டாக வேண்டும்;
ஏற்கெனவே இருந்த ஒயர்களைக் கொண்டு இன்றைக்கு பிரச்
சினைகளை உடனடியாகச் சந்திக்கக் கூடிய நிலைமை இந்த
அரசுக்கு வந்திருக்கிறது. நிதி நெருக்கடி உள்ள இந்தக் காலத்
தில் டிரான்ஸ்பார்மர் புதிதாகப் போட வேண்டும்.



பிற்பகல் 1–40

துணை மின் நிலையங்கள் போட வேண்டும் ; லோ வோல்
டேஜ் நீக்க வேண்டும் ; புதிதாக கம்பிகள் எல்லாம் போட
வேண்டும் ; கன்டக்டர் புதிதாக போட வேண்டும். இப்படி
பல்வேறு பிரச்சினைகள், இவைகளை எல்லாம் உடனடியாகத்
தீர்ப்பது என்பது ஒரு அரசுக்கு இயலாத காரியம். இன்றைக்கு
இருக்கிற தேவைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்
றால் பல கோடி ரூபாய்களை நாம் செலவழித்து அதற்கான
நடவடிக்கையில் இறங்கினால் கூட ஏறத்தாழ இரண்டு ஆண்டுக்
காலம் அதற்கு கால அவகாசம் பிடிக்கும். உடனடியாக ஒரு
காரியத்தை செய்ய வேண்டுமென்று நாம் இறங்குகிற நேரத்துல்
கூட மெட்டீரியல்ஸ் ஷார்ட்டேஜ் என்று சொல்லப்படுகிறது.
உடனடியாக நாம் டெண்டர் வைத்து கொடுத்தாலும் கூட,
உடனடியாக பொருட்கள் வந்துவிடுவதில்லை. இன்றைக்கு
கூட சொன்னார்கள், குறை இருக்கிறது என்று. டிரான்ஸ்
பார்மர் இல்லை என்று சொன்னார்கள். பல்வேறு டெண்டர்கள்
கோரப்பட்டு உடனுக்குடன் இன்றைக்கு உத்திரவிடப் படு
கின்றது. ஒரு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு, வேலிடிட்டி
டேட் என்று சொல்லப்படுகின்ற அந்த டெண்டரில் குறித்த
காலம் என்றால் அதற்குள்ளாகவே கையெழுத்து இடப்படுகிறது.
மற்ற ஆட்சிக் காலத்தைப் போல 6 மாதம், ஓராண்டு காலத்திற்கு
டெண்டர்களை வைத்துக் கொண்டு காத்து இருக்கின்ற அரசு
அல்ல இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி). குறிப்பிட்ட காலக் கெடுவிற்கு
முன்னாலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்
உத்திரவிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, பொருட்
களை உற்பத்தி செய்து போடுகின்ற நேரத்திலே அவை வந்து
சேருவதற்குக் கொஞ்ச கால தாமதம் ஆகின்றது. ஆனால்,
அதற்கு முனைப்பான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்
கொண்டு இருக்கின்றோம். பொருட்கள் பற்றாக் குறை
என்பது இந்த அரசினுடைய காலத்திலே இருக்காது. தேவை
களை அனுசரித்து, இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்துக்
கொண்டு உடனுக்குடன் அதற்கான பொருட்களை சேக
ரித்து, கிராமப் புறங்களுக்கு வேண்டிய பொருட்களை
நாங்கள் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு விவசாயத்தைப் பற்றிச் சொன்னார்கள். விவ
சாயிகளுக்கு மின்சார கட்டணத்தைப் பற்றி பல்வேறு கருததுக்
களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொனனார்
கள். டில்லியில் மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே
கலந்து கொண்ட நேரத்திலே, தமிழகத்திலே இருந்து நாங்கள்
செல்கின்ற போது அங்கே, அனைத்து மாநிலங்களிலே இருந்து

வந்த சில முதலமைச்சர்கள் கூட கலந்து கொண்டார்கள்; மாநிலங்
களின் மின்சாரத் துறை அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள் :
இன்றைக்கு இந்தியாவில் ஒரு நிலையை எடுக்க வேண்டுமென்று
அவர்கள் நினைக்கிறார்கள். எந்தப் பொருளுக்கும் இலவசம்
என்று வைத்தால் அதற்கு ஒரு மரியாதை இல்லாமல் போய்
விடுகின்றது. ஆக, உலக வங்கி மற்றும் கடன் கொடுப்பவர்கள்
எல்லாம் இலவசமாக கொடுப்பதற்கு எங்களிடத்தில் ஏன் கடன்
கேட்கின்றீர்கள் என்று கேட்கின்ற, மாறி வருகின்ற ஒரு சூழ்
நிலையை இன்றைக்கு இந்தியப் பொருளாதாரத்தில் நாம் பார்க்
கின்றோம். ஆக, இந்திய பொருளாதாரத்திலே மாறிவரு
கின்ற சூழ்நிலை உருவாகின்ற நேரத்திலே அனைத்து மாநிலங்
களுக்கும் அதை அமல்படுத்த வேண்டுமென்று இந்திய அரசு
இன்றைக்கு நினைக்கின்றது. அப்படி வருகின்ற சூழ்நிலையில்
நாம் கடன்களை வாங்கித்தான் இன்றைக்கு பல்வேறு
திட்டங்களைப் போட்டுக் கொண்டு இருக்கிறோம். ஏ.டி.பி.
என்று சொல்லுகின்ற ஏசியன் டெவலப்மென்ட் பேங்க், உலக
வங்கி போன்ற பல்வேறு நிறுவனங்களிடத்திலே கடன்களை
வாங்கி, சென்ட்ரலிலே இருக்கின்ற பவர் ஃபைனான்ஸ் கார்
பரேஷனிடத்திலேயும் இப்படி பல்வேறு நிறுவனங்களிடத்தி
லேயும் கடன்களை வாங்கி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக்
கொண்டு இருக்கிறோம். அவர்கள் போடுகின்ற அந்த நிபந்
தனைகளுக்கு உட்பட்டு சில காரியங்களை ஆற்ற வேண்டிய
பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது ; மத்திய அரசுக்கும்
இருக்கிறது. ஆகவேதான் அவர்கள் எடுத்துச் சொல்கின்ற
நேரத்திலே நியாயமான பிரச்சினைகளை நாம் பரிசீலிக்க
வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். இருந்தாலும்
நம்மைப் பொருத்தமட்டில் மின்சாரக் கட்டணம் என்பது ஒரு
மீட்டருக்கு என்று வைப்பதோ, ஒரு யூனிட்டுக்கு என்று வைப்
பதோ, இப்படி உடனுக்குடன் செய்வதற்கு சாத்தியம் இல்லை
என்பதை நாங்கள் சொல்லிக் கொண்டு இருக்கின்றோம்.
ஏனென்றால் விவசாயிகளினுடைய பிரச்சினையை படிப்படியாக
அணுக வேண்டும். புரட்சித் தலைவர் காலத்தில் இருந்த
நடைமுறையை கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் இன்
றைக்கு அதற்கு ஒரு முடிவை எடுக்கவில்லை. அதற்கான
ஒரு வழிமுறைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். எப்படி,
ஹார்ஸ் பவருக்கு ரூபாய்களை வைத்து, கணக்குகளை வைத்து
புரட்சித் தலைவர் காலத்தில் இருந்ததோ அதைப்போல ஒரு நடை
முறைக்குகொண்டு வரலாம் என்ற ஒரு உணர்வினை இன்றைக்கு
உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், பெரிய விவசாயி
கள் கூட இன்றைக்கு சென்னையிலே வசதியாக வாழ்பவர்கள்
கூட, கோயம்புத்தூர், சேலம், பெரியார் மற்றும் பல்வேறு
மாவட்டங்களில் இருப்பவர்கள் எல்லாம் இலவச மின்சாரத்தைப்
பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் இந்த
அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆக, அப்படிப்பட்ட பெரிய



விவசாயிகளுக்கு, பெரும்தனக்காரர்களுக்கு ஹார்ஸ் பவருக்கு
இவ்வளவு என்று நிர்ணயம் செய்து அதற்கான ஒரு தொகையை
வசூல் செய்தால் ஏறத்தாழ 90 கோடி ரூபாய் வரலாம் என்ற
கணக்கை நாங்கள் எடுத்து இருக்கின்றோம். அந்த மாதிரி
முயற்சியில் தான் இந்த அரசு இயங்கிக் கொண்டு இருக்கிறதே
தவிர, விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை ரத்துச் செய்கின்ற
திட்டம் இந்த அரசிடம் தற்போது இல்லை என்பதை நான்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். என்
றைக்குமே ஏழைகளினுடைய அரசாக, ஏழைகளை பாது
காக்கின்ற அரசாக, ஏழை விவசாயிகளினுடைய நலனில் அக்கறை
கொண்ட அரசாகத்தான் இருக்கிறது; டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, எல்லாவற்றையும்
இலவசம் என்று சொல்லிவிட முடியாது. ஆகவே, சில நடை
முறைகளை, வசதி படைத்தவர்களிடத்திலே, வாய்ப்பு உள்ள
வர்களிடத்திலே, வருமானத்தைப் பெருக்குகின்ற விதத்திலே
இன்றைக்கு வசூல் செய்யலாமா என்பதை இந்த அரசு
பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மின் கட்டண உயர்வினைப் பற்றி சொன்னார்கள். மின்
கட்டண உயர்வினைப் பற்றி, பெரும்பாலான டொமஸ்டிக்
பர்பஸ் என்று சொல்லப்படுகின்ற வீட்டு உபயோகத்திற்கு ஏழை
எளியவர்களுக்கு மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. இன்
றைக்கு இந்தியத் திருநாட்டில் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது
தமிழ்நாட்டிலே தான் இன்றைக்கு மின் கட்டணங்கள் குறை
வாக இருக்கிறது. ஹார்ஸ் பவர் என்று எடுத்துக் கொண்டால்
கூட பல்வேறு மாநிலங்களை நான் ஒப்பிட்டுச் சொல்ல முடியும்.
ஆக, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டிலே
தான் எளிய முறையிலே இன்றைக்கு ஏழைகளுக்கு பயன்படு
கின்ற விதத்திலே மின்சாரம் வழங்கிக் கொண்டு இருக்கிறோம்
என்பதை சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

எதிர் காலத்தில் திட்டங்களைப் பற்றி நான் சிலவற்றை
சொல்லியாக வேண்டும். நம்முடைய அரசு எதிர் காலத்திலே
என்னென்ன திட்டங்களை எடுக்கப் போகிறது, எதிர்காலத்
தேவைகளை உணர்ந்து என்னென்ன காரியங்களை ஆற்ற முடி
யும் என்ற ஒரு முடிவோடு இன்றைக்கு பல்வேறு திட்டங்களை
நாம் வைத்து இருக்கின்றோம்.

ஆகவே, எண்ணூரிலே ஒரு துறைமுகத்தை அமைத்து, சாட
லைட் போர்ட் என்று சொல்லப்படுகின்ற அந்தத் துறைமுகத்தை
அமைத்து, அதன் மூலம் எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு
நிலக்கரியைக் கொண்டு வருகின்ற அளவிற்கு ஒரு பெரிய திட்டத்
திற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித்
தலைவி, மத்திய அரசோடு இன்றைக்குத் தொடர்பு கொண்டிருக்

கிறார்கள். இது சம்பந்தமான நிலையை மத்திய அரசு இன்றைக்கு ஆய்ந்து, அதற்கான ஒரு முடிவை அறிவிப்பதாக மாண்புமிகு அமைச்சர் ஜகதீஷ் டைட்லர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

பிற்பகல் 1-45

அதைப் போல, பேசின் பாலம் வாயுச் சுழலி என்று சொல்லப் படுகின்ற 120 மெகாவாட், 4×30 என்று சொல்லப்படுகின்ற அந்த மின் உற்பத்தி நிலையத்தைக் கொண்டு வருவதற்கு ஏற் பாடு செய்திருக்கிறார்கள்.

அதைப்போல, தூத்துக்குடியில் அடிஷனலாக, இது போக, 500 மெகா வாட் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு திட்டத்தை வைத்திருக்கிறோம். நார்த் மெட்ராஸில் 210×3=630 மெகா வாட்டிற்கு இன்றைக்கு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் 1993-94 ஆம் ஆண்டு களிலே கொண்டு வரவேண்டும் என்று முடிவு எடுத்து, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து முனைப்பாக இன்றைக்கு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இது தவிர, வட சென்னையிலே உள்ள அனல்மின் நிலையத் தினுடைய மொத்த கெப்பாசிட்டி என்று சொல்லப்படுகின்ற அந்த அளவை 2,130 மெகா வாட்டாக உயர்த்துகின்ற அளவிற்கு ஒரு மிகப் பெரிய திட்டத்தை நம்முடைய அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, எதிர் காலத்திலே மின் உற்பத்தியினுடைய தேவையைக் கணக் கிட்டு, மின்சாரத்தினுடைய தேவையைக் கணக்கிட்டு, இப் போதே தொலைநோக்குப் பார்வையோடு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அதற்கான திட்டங்களை இன்றைக்குத் தீட்டிக் கொண்டு இருக்கிறது.

இன்றைக்கு அனல் மின் நிலையங்களையோ, மற்ற திட்டங் களையோ துவக்குகின்ற நேரத்திலே, நம்மிடத்திலே இருக்கிற நிதி ஆதாரத்தைப் பயன்படுத்த முடியவில்லை. அதற்காக வெளி நாட்டிலே இருந்து வருகின்ற என். ஆர். ஐ. என்று சொல்லப் படுகின்ற அவர்களை இன்றைக்கு அழைத்து, யார், யார் இதற்கு முன் வருகிறார்களோ, அவர்களை எல்லாம் உற்சாகப்படுத்தி, அவர்களை எல்லாம் வைத்து, இந்த மின் உற்பத்தியைப் பெருக்கு கின்ற திட்டங்களில் ஈடுபட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே போல், விண்ட் மில் என்று சொல்லப்படுகின்ற காற் றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம். இந்தியாவிலே மிகப் பெரிய ஒரு வெற்றியை நம்முடைய **தமிழகம்தான்,**



காற்றாலை மூலம் மின்சாரத்தைத் தயாரிக்கின்ற திட்டத்திலே வெற்றி பெற்று, அதற்கான மத்திய அரசினுடைய முதல் பரிசைப் பெற்று வந்திருக்கிற மாநிலமாக நம்முடைய மாநிலம் தான், புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில் விளங்குகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கி றேன். ஆகவே, நம்முடைய மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில், மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், கடந்த காலத்திலேயிருந்து குறைபாடுகள் எல்லாம் இன்றைக்கு ஒரு அளவிற்கு களையப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு நல்ல முயற்சிகள் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கின்றன என்பதை இதன் மூலமாக தெளிவாக நீங்கள் உணர முடியும், என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே, புரட்சித் தலைவி அவர்கள் தெளி வாக அறிவித்திருக்கிறார்கள். இப்போது 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு வருடத்திற்குக் கொடுக்கிறோம். 40 ஆயிரம் மின் இணைப்புகளைக் கொடுக்கிற நேரத்திலே, புதிதாக இப் போது 25 ஆயிரம் ரூபாய் கட்டினால் கொடுக்கலாம் என்று ஒரு முறையை உண்டாக்கி இருக்கிறோம். இந்தத் திட்டத்தை எதற் காகக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் கொஞ்சம் விளக்க கடமைப்பட்டு இருக்கிறேன். ஏற்கெனவே இந்த 40 ஆயிரத்தோடு சேர்ந்து, இந்த 25 ஆயிரமும் சேருமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஏற்கெனவே நம்முடைய மினசார வாரியத்தின் மூலம் அப்படித் தான் ஒரு முறை இருந்தது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல் வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்து இருக்கிறார்கள். ஏற்கனவே 40 ஆயிரம் வழங்கப்படுகின்ற மின் இணைப்புகளைத் தவிர்த்து புதிதாக மின் இணைப்புக்காக பணம் கட்டுகிறவர்களுக்கு, தனி யாக வழங்கப்படும். இது அந்தக் கணக்கிலே சேராது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட, 40 ஆயிரம் மின் இணைப்புகளும் இந்த ஆண்டு முறைப்படி, வரிசைப்படி தனியாகத் தரப்படும். இது தவிர, இப்போது அதிகமாக முன்னுரிமை கொடுத்து,—ரூபாய் கட்டுகின்றவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு பெரியார், சேலம், தஞ்சாவூர், திருச்சி, போன்ற இடங்களிலே அதிகமான பேர்கள் பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். ஆகவே, பணத்தைக் கட்டி வாங்குவதற்கு தயாராக இருக்கிற பெரிய விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அதற்கான செலவை அவர்கள் ஏற்றுக்கொள்கிற நேரத்தில், மின்சார வாரியத்திற்கு நஷ்டம் இல்லாமல் இங்கே இருக்கின்ற நிதி நெருக்கடியை அவர் களிடத்திலே பகிர்ந்து கொண்டு, அவர்கள் செய்கின்ற அளவிற்கு

வருகின்றபோது, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து செய் வதிலே எந்தத் தவறும் இருக்காது. ஆகவே, ஏற்கெனவே இருக்கிற திட்டத்தினால், பாதிப்பு இல்லை என்பதை மாண்புமிகு உறுப் பினர் பழனிசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதிலே ஏழைகளுக்கு பாதிப்பு இல்லை (மேசையைத் தட்டும் ஒலி). ஏழைகளினுடைய அரசுதான் இந்த அரசு என் பதை அவர்களுக்கு நாங்கள் பல்வேறு காலகட்டங்களிலிருந்து ஏறத்தாழ புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே யிருந்து, 1977-லேயிருந்து நிரூபித்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. இந்த அரசு என்றைக்கும் ஏழைகளின் நலன் காக்கும் அரசாக இருக்கும் என்பதை நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உதாரணமாக இன்றைக்கு வங்கிகளிலே கடன் வாங்குகிறார் கள். 20 ஏக்கர், 15 ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு, கிணற்றை வெட்டுகிறார்கள். 3 லட்சம், 4 லட்சம் வங்கிகளிலே கடன் கொடுக்கிறார்கள். நிலத்தைச் சீர் செய்து, விவசாயம் செய்வதற்கு, இன்றைக்கு வாழை போடுகிறார்கள். கடலை போடுகிறார்கள். அதற்காக டீசல் என்ஜினை வைத்து அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதிகமாக செலவாகிறது. அப்படிப் பட்டவர்கள் உடனடியாக, ஒரு வருடத்திற்கு ஒரு வட்டி என்று வைத்துக் கொண்டால் கூட, அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய், 40 ஆயிரம் ரூபாய் என்று வட்டி வந்துவிடுகிறது. அவர்கள் உடனடியாக—நாங்கள் 25 ஆயிரம் ரூபாய் கட்டிவிடுகிறோம், எங்களுக்கு மின் இணைப்பு தாருங்கள் என்று கேட்பதற்கு எத்தனையோ பேர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுடைய நிலைமையையும் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது, ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு 5 ஆயி ரம் பம்புசெட்டுகளுக்கோ, 10 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கோ கனக்ஷன் கொடுத்தோம் என்றால், ஏறத்தாழ அதிலே ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் பாசன வசதி பெறுகிறது. உற்பத்தியும் பெருகுகிறது. ஆகவேதான் இந்த 25 ஆயிரம் ரூபாய் திட்டத் திற்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டு வந்தோமே தவிர, உற்பத்தியைப் பெருக்குகின்ற நோக்கத்தோடு, ஏற்கெனவே கடன் வாங்கி, சில இடங்களிலே வங்கிகளிலே கடன் வாங்கி, முதலீடு போட்டு, மின் இணைப்பு இல்லாமல் பாதிக்கப்படுகின்ற பெரிய ஒரளவிற்கு வசதி படைத்தவர்கள் இருந்தாலும் கூட, அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே, ஏழைகளை பாதிக்காத வகையிலே அவர்களுக்கும் ஒரு சாதகம் ஏற்படுகின்ற சூழ்நிலையிலே, நாட்டினுடைய உற்பத்தியைக் கருத்திலே கொண்டுதான், 25 ஆயிரம் ரூபாய் திட்டத்தைக் கொண்டு வந்தோமே தவிர, இந்தத் திட்டம் சோடையான திட்டம் இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் (மேசை யைத் தட்டும் ஒலி).



ஆகவே ஒரு திட்டத்தைப் போடுகின்றபோது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அதனுடைய சாதக பாதகங்களை அறிந்ததற்குப் பின்னாலேதான் இன்றைக்கு அந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். ஏதோ ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம் என்று சொன்னால், அந்தத் திட்டத்தினுடைய சாதக பாதகங்களை விவாதித்து, முடிவு எடுத்து, அதற்குப் பின்னாலே, அதனுடைய நலன்களை எல்லாம் கருத்திலே கொண்டுதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் எந்த ஒரு திட்டமும் நிறைவேற்றப் படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே விவசாயிகள் பிரச்சினையில் இந்த 40,000 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற கணக்கிலே குறைவு இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

வரவு-செலவு திட்டத்தைப் பற்றிப் பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். வருடா வருடம் நாம் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொன்னால், போன வருடம் 12 இலட்சம் பம்புசெட்டுகளுக்கு கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், இந்த வருடம் 12.40 லட்சத்திற்கு ஆன பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கிறோம். இந்த 40,000 பம்புசெட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுக்கிறோம். ஆகவே போன தடவை ரூ. 545 கோடியாக இருந்தது, இன்றைக்கு ரூ. 601 கோடியாக வந்திருக்கிறது என்று இன்றைக்கு கணக்கிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதிலே ஒன்றும் தவறு கிடையாது. ஆண்டுக்காண்டு நம்முடைய திட்டத்திலே இப்படி இலவசமாகக் கொடுத்துக் கொண்டே போனால், நஷ்டம் வராமல் என்ன செய்யும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்கள்கூட கேட்டார். சென்ற ஆண்டு குறைந்திருக் கிறதே. இந்த ஆண்டு கூடியிருக்கிறதே என்று. வருடத் திற்கு 40,000 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு இலவசமாகக் கொடுக்கின்றபோது, அந்த மின்சாரத்தினுடைய செலவு அதிக மாகத்தான் செய்யும். ஆகவேதான் இலவச மின்சாரம் கொடுக் கின்ற நேரத்திலே குடிசைகளுக்கு மின்சாரம் அதிகமாகக் கொடுக் கின்றோம். அதைப்போல பஞ்சாயத்து யூனியன்களிலே விளக்கு களுக்கு மின்சாரம் கொடுக்கின்றோம். ரூ. 1.57-க்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து, ரூ. 1-க்கு மின்சாரத்தை கொடுக்கிறோம். பஞ்சாயத்து யூனியன் விளக்குகளுக்கு, இப்படி ஒவ்வொன்றுக்கும் நாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அதைப்போல வாட்டர் டேங்குகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு மின்சாரத்தை இலவச மாக என்று சொல்லவில்லை. சலுகை விலையில் கொடுக்கிறோம். இப்படி ஒவ்வொன்றுக்கும் வருடத்திற்கு வருடம் ஒவ்வொரு

தேவையும் அதிகரித்துக் கொண்டு போகின்ற நேரத்தில், நம்
முடைய இலவச மின்சாரம், சலுகை விலையில் அதிகமாக கொடுக்
கின்ற காரணத்தினாலேதான் அதனுடைய செலவுகள் கூடிக்
கொண்டே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே சென்ற ஆண்டு
இருந்த செலவினத்தைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக
இலவசமாகக் கொடுக்கின்ற காரணத்தினாலேதான் இந்தச்
செலவினம் அதிகரித்திருக்கின்றது. மின்சார வாரியத்தைப்
பொறுத்த மட்டிலும் நாங்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்
கின்றோம். ஒரு கோடி ரூபாய்க்கு மேலே முன்பெல்லாம் டெண்
டர் என்று சொன்னால், மின்சார வாரியத்திலே முடிவு செய்து
விடுவார்கள். இதிலே அரசாங்கத்தினுடைய கட்டுப்பாடு இருக்
காது. இந்த அரசுக்குத் தெரியாது. மக்களுடைய பிரதிநிதிகளாக
இருக்கின்ற அரசுக்கு அதனுடைய நிலைமைகள் தெரி
யாது. ரூ. 15 கோடிக்கு டெண்டர் என்ற வகையில் ரூ. 800
கோடிக்கு கோல் ஹாண்டிலிங் என்று சொல்லப்படுகின்ற டெண்
டர்கூட மின்சார வாரியத்திலே முடிவு செய்யப்பட்டது. மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பின்னாலேதான்
மின்சார வாரியத்திலே நடக்கின்ற எந்த நிலையும் தமிழக அர
சுக்குத் தெரிந்தாக வேண்டும். நாளைக்கு ஒரு பிரச்சினை என்று
வருகின்றபோது அமைச்சர் பதில் சொல்கின்றார். மாண்புமிகு
முதலமைச்சரின் மீது ஒரு குற்றச்சாட்டு சொல்லப்படுகின்றது.
மின்சார வாரியத்திலே ஒரு டெண்டரிலே ஒரு பிரச்சினை என்று
சொன்னால் பத்திரிகையில் வேண்டுமென்றே எழுதுகிறார்கள்.
அதற்கான பொறுப்பினை இந்த அரசு ஏற்றுக்கொள்கின்ற
நேரத்திலே அதிலுள்ள குறைபாடுகளை மட்டும் இந்த அரசு
ஏற்றுக்கொள்கின்ற நேரத்திலே அதிலே உள்ள பிரச்சினைகளை
பார்க்கக் கூடாது என்பது என்ன நியாயம் என்ற அடிப்படை
யிலே வந்து, இன்றைக்கு ஒரு கோடி ரூபாய்த் திட்டத்திற்கு
மேலே எந்தத் திட்டம் என்று வைத்துக் கொண்டாலும், அதை
இந்த அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும்
ஒலி).

இந்த அரசினுடைய பரிசிலனைக்குப்பின்னாலே பொதுப்பணித்
துறைச் செயலாளர் பார்த்து, நிதிச் செயலாளர் பார்த்து,
அதற்குப் பின்னாலே அமைச்சர் பார்த்து, அதற்குப் பிறகு
மாண்புமிகு முதலமைச்சர் பார்த்து, முடிவு எடுத்ததற்குப்
பின்னாலேதான் இந்த டெண்டர்கள் வழங்கப்பட வேண்டுமென்று
இன்றைக்கு உத்தரவு இட்டிருக்கின்றார்கள். ஆகவே இதிலே
கண்காணிப்பு அதிகமாக இருக்கின்றது. ஆகவே இருக்கின்ற அதி
காரிகளிலே நியாயமான அதிகாரிகளும் இருக்கின்றார்கள். சில
நேரங்களிலே தவறுகள் என்று வருகின்ற நேரத்திலே அந்தத்
தவறை அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்ற நிலைமை துர்ப்
பாக்கியமான நிலைமை அன்றைக்கு இருந்தது. இந்த நிலைமை
இன்றைக்கு மாற்றியமைக்கப்பட்டு, ஒரு நியாயமான, நேர்மை



யான வழியிலே டெண்டர் விடப்பட வேண்டுமென்பதற்காக ஒரு சிறப்பான ஏற்பாட்டினை மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இது சரித்திரத்திலே ஒரு முக்கியமான சாதனை. இது வரை இல்லாத அளவிற்கு அவர்கள் செய்திருக்கிறார்கள். என்பதனை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே நம்முடைய மக்கள் வரியாகக் கட்டுகின்ற பணம் முறையாகச் செலவழிக்கப்படுகின்றதா என்பதனை கண்காணிப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கின்றது. இது புரட்சித் தலைவியின் காலத்திலேதான் நடந்திருக்கின்றது. இதிலே கூட சில விமர்சனங்கள், சில சில அங்கலாய்ப்புகள் இவைகள் எல்லாம் இருந்தன. ஆனால் அதைப்பற்றி எல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் கவலைப்படவில்லை. எதற்காக அரசுக்குச் சொல்லவேண்டும் என்கின்ற விமர்சனங்கள் எல்லாம் இருந்தன. ஊமைப் போராட்டங்கள் எல்லாம் இருந்தன. ஆனால் அவைகளை எல்லாம் மீறி புரட்சித் தலைவி அவர்கள் மக்களுடைய வரிப் பணம் மக்களுடைய பிரதிநிதிகளால் கண்காணிக்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு இந்த நிலையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. ஆகவே அரசினுடைய பணம் முறையாகச் செலவழிக்கப்படுகிறது என்பதும் கண்காணிக்கப்படுகின்றது என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த மட்டிலும் மின் விளக்குகள் கிராமங்களில் இல்லை என்று சொன்னார்கள். வருடத்திற்கு 20,000 விளக்குகள் முன்பு போட்டுக் கொண்டு இருந்தோம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பின்னாலே தன்னிறைவுத் திட்டத்தின் கீழே 1,75,000 விளக்குகளைப் போட வேண்டுமென்று உத்தரவிட்டு எந்தெந்த கிராமப் பகுதிகளிலே எத்தனை எக்ஸ்டென்ஷன் என்று சொல்லப்படுகின்ற நீட்டிப்பு கொடுக்கப்படுகின்ற அந்த விளக்குகள் ஒரு பஞ்சாயத்திற்கு 15, 20 என்று வகையில் கிராமங்களில் எத்தனையோ தேவை இருக்கின்றது. ஆகவே இரண்டு ஆண்டுக் காலத்திலே அவற்றையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று சொல்லி, இந்த ஆண்டு 85,000 விளக்குகள் போடவேண்டுமென்று அதற்கான அந்த 'ஃபிட்டிங்ஸ்' வாங்குவதற்கான டெண்டர்கள் கூட இன்றைக்கு உடனடியாக அப்ரூவ் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-55.

இன்றைக்கு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே விரைவிலே உங்கள் பகுதிகளிலே கிராமங்களிலே இருக்கிற அந்த குறைகள் தீர்க்கப்படும். அதற்கான நடவடிக்கைகளை இந்த மின்சார வாரியமும் உள்ளாட்சி துறையும் அமைச்சகமும் சேர்ந்து நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆகவே

விரைவிலே அந்தக் குறைகள் களையப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் பகுதியிலே மின்சாரம் இல்லாத பகுதிகளிலே, கம்பங்கள் இல்லாத பகுதிகளிலே புதிதாக கம்பங்களை நட்டு – ஏனென்றால் 1 லட்சத்து 75 ஆயிரம் மின்சார கம்பங்கள் நட வேண்டும் என்று சொன்னால் மின்சார கம்பங்கள் வேண்டும். அதற்கான பிட்டிங்ஸ் வேண்டும். அதற்கான சாதனங்கள் வேண்டும் அதற்கான கம்பிகள் எல்லாம் வேண்டும். அதற்கான டெண்டர்கள் கோரப்பட வேண்டும். அதற்கென்று சில திட்டங்கள் வரைமுறைகள் இருக்கின்றன. உடனடியாக நாம் அவைகளை வாங்கி விட முடியாது. ஆகவே இந்த நடைமுறை பிரச்சினைகளால் கொஞ்சம் காலதாமதம் ஏற்படலாமே தவிர, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கபட்டு இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உத்திரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே உடனடியாக தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து மின் விளக்குகளை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மின்சார வாரியமும் உள்ளாட்சி துறை அமைச்சகமும் சேர்ந்து செயல்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே மின்சார வாரியம் மிகச் சிறந்த ஒரு மின்சார வாரியமாக இந்திய திருநாட்டிலேயே – இன்றைக்கு டெல்லிக்கு சென்றாலும் கூட அங்கிருக்கிற உயர் அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். உங்களுடைய மின்சார வாரியம் பரவாயில்லை என்று சொல்லுகிறார்கள். நமக்கும் மகாராஷ்டிரம் குஜராத் போன்ற மாநிலங்களுக்கும் தான் மிகப் பெரிய பாராட்டு. ஆகவே சிலபல குறைபாடுகள் இருந்தால் கூட இந்திய நாட்டிலேயே ஒப்பிட்டு பார்க்கும்போது மிகச் சிறந்த ஒன்றிரண்டு மின்சார வாரியங்களிலே நம்முடைய தமிழகத்தினுடைய மின்சார வாரியம் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக குறைபாடுகளே இல்லை என்று சொல்லவில்லை. அந்தக் குறைபாடுகள் ஏறத்தாழ 30, 40 ஆண்டுகளாக இருக்கிற குறைபாடுகள். அவைகளைப் பற்றி கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவைகளையெல்லாம் களைவதற்கு கொஞ்சம் கால அவகாசம் வேண்டும். ஆகவே நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சி காலத்திலே அந்தக் குறைகள் எல்லாம் களையப்பட்டு நிறைகளோடு மின்சார வாரியம் பணியாற்றும். நம்முடைய எதிர் கால தேவைகளை கருத்தில் கொண்டு மின் உற்பத்தியை பெருக்கி தமிழகத்தை தலை சிறந்த மாநிலமாக, தொழில் துறையில் சிறந்த மாநிலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு – தொழில் துறையினுடைய முன்னேற்றத்திலே மிகப் பெரிய பங்கு மின்சார வாரியத்திற்கு இருக்கிறது, என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். ஆகவே நம்முடைய தமிழகத்தை தலை



சிறந்த மாநிலமாக மாற்றுவதற்கு மின்சார வாரியம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஒப்புதலோடு அவருடைய உத்திரவோடு மிகச் சீரிய முறையில் செயலாற்றும் என்பதைச் சொல்லி அமைகின்றேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு வி. கே. லட்சுமணன்.

<u>திரு. வி. கே. லட்சுமணன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதைக் காட்டிலும், 'போட்டோ வோல்டாக்ஸ்' மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்வது மிகப் பெரிய அளவிலே வெற்றி பெற்றிருக்கிறது. ஆதி வாசிகள் பழங்குடி மக்கள் வாழுகிற இடங்களிலே போட்டோ வோல்டாக்ஸின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து, ஸ்டோரேஜ் பிளான்டிலே அதை தேக்கி வைத்து இரவு நேரங்களிலே டியூப் லைட்டுகள் எரியவும் தொலைக் காட்சியை பார்க்கவும் பயன்படுத்துவதற்கு இந்த அரசு என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பல்வேறு வழிகளிலே மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். பெகாஸ் என்று சொல்லப்படுகிற சர்க்கரை ஆலை கழிவுகளிலிருந்து மின்சாரம், சோலார் எனர்ஜி என்று பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே அவருடைய கோரிக்கையையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விஞ்ஞான ரீதியாக இன்றைக்கு வளர்ந்து வருகிற சமுதாயத்திற்கு ஏற்ப புதிய தொழில் நுட்பங்களை புகுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் இப்போது எடுத்துச் சொல்வதற்கு கால அவகாசம் இல்லை என்ற காரணத்தாலே தான் சுருக்கமான முறையில் சில பிரச்சினைகளை மட்டும் எடுத்துச் சொன்னேன். ஆகவே எந்தெந்த வழிகளிலே மின்சார உற்பத்தியை பெருக்குவதற்கு சாதகமான அமைப்புகள் இருக்கிறதோ அவைகளையெல்லாம் ஆய்ந்து இந்த துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பல விஷயங்களைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு

இருக்கிற திறமைகளையெல்லாம் இதில் காட்டியிருக்கிறார்
கள். அதை நான் வரவேற்கிறேன். எங்கள் நிலக்கோட்டை
தொகுதியிலே ஏற்கெனவே துணை மின் நிலையம் அமைப்
பதற்கு அரசு முடிவு எடுத்து நடவடிக்கை எடுத்தது. இங்கே
டிபார்ட்மெண்டிலேயிருந்து எனக்கு கிடைத்த பதிலிலே
கூட நிலத்தை கையகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரி
வித்திருக்கிறார்கள். அடுத்த வரியிலே கையகப்படுத்த நட
வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்
கள். அது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. திடீரென்று
மின் அழுத்தம் குறைகின்ற காரணத்தாலே மோட்டார் ஓடிக்
கொண்டிருக்கிற போதிலேயே மோட்டார் பர்ன் ஆகி விடு
கிறது. அதைச்சரி செய்வதற்கு மோட்டாரை எப்படி எவ்வளவு
விலை கொடுத்து வாங்கினோமோ அநத அளவுக்கு செலவு
செய்ய வேண்டியிருக்கிறது. ஆகையினால் இந்த 1992 ஆம்
ஆண்டுக்குள்ளாகவே இந்த துணை மின் நிலையம் அமைப்ப
தற்கு நடவடிக்கை எடுப்பதோடு, நாம் பல இடங்களில் குழல்
விளக்குகள் போடுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
ஒரு லட்சத்து 75 ஆயிரம் குழல் விளக்குகளை போட ஏற்பாடு
செய்திருக்கிறார்கள். வரவேற்க வேண்டிய ஒன்று. இதிலே
ஏற்கெனவே எரிந்து கொண்டிருக்கிற விளக்குகள் பியூஸ் ஆகி
விட்டால் சென்னையிலே வந்துதான் லைட் வாங்க வேண்டும்
என்கிற நிலை இருப்பதாக சொல்லுகிறார்களே, அப்படி இல்
லாமல் பியூஸ் ஆகிப்போனால் அந்த மின்விளக்குகளுக்கு அந்
தந்த பகுதிகளிலேயே வாங்கி உடனடியாக மாற்றுவதற்கான
நடவடிக்கை எடுப்பதற்கு என்ன செய்ய அமைச்சர் அவர்கள்
முன் வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2–00

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே மாட்டுகின்ற மின்
விளக்குகளைப் பொறுத்தமட்டிலே நம்முடைய மாண்புமிகு
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு தெளிவான
நடவடிக்கை எடுத்தார்கள். தரம் குறைந்த விளக்குகளை
போடக்கூடாது என்று சொல்லி உள்ளாட்சித்துறை அமைச்
சகத்துக்கு உத்தரவிட்டு— தரமான மைசூர் லேம்ப், எச்.
எம்.டி., பிலிப்ஸ் போன்ற கம்பெனிகளிலே தான் வாங்க
வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்
உத்தரவிட்டு — இன்றைக்கு பல்புகள் எல்லாம் தரமான
கம்பெனிகள் மூலம் தான் வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்
கிறார்கள். மின்சார வாரியத்திலே கூட லோக்கல்
ஃபிட்டிங்ஸ் வாங்கலாம் என்று டெண்டர் கால்ஃபார்
செய்திருந்தார்கள். ஆனால் அதையெல்லாம் மாற்றி அந்த
உள்ளாட்சித் துறையிலே சொன்னதைப் போல தரமான
கம்பெனிகளிடம்தான் வாங்கவேண்டுமென்று இப்பொழுது மறுப



ரீ செய்துவிட்டு நம்முடைய அரசினுடைய
அதையெல்லாம் ரத்து செய்துவிட்டு நம்முடைய அரசினுடைய
கவனத்திற்கு கொண்டு வந்தவுடனேயே அதையெல்லாம் ரத்து
செய்து நல்ல கம்பெனிகளிடத்திலே குட் ரெப்புடேஷன்
உள்ள கம்பெனிகளிடத்திலே தான் இன்றைக்கு ஆர்டர்
செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்
தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே எதிர்காலத்திலே இந்த மாதிரி
பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு இல்லை. சென்னையிலே வந்து
அந்தப் பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டும் என்ற அவசி
யம் இல்லை. அதற்கான டெண்டர்கள் கோரப்பட்டு அந்தப்
பொருட்கள் வாங்கப்பட்டு அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற
ஒன்றிய அலுவலகங்களுக்கு சப்ளை செய்யப்படும். அங்கே
யிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே அதற்கான
நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. டி. சுதர்சனம்.

<u>திரு. டி. சுதர்சனம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே,
நிலக்கரியை அனல் மின் நிலையங்களுக்கு வெளிநாட்டிலே,
யிருந்து இறக்குமதி செய்வதாக அமைச்சர் அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். ஏற்கனவே அனல் மின் நிலையங்களுக்கு சிங்
கரேனி நிலக்கரி சுரங்கத்திலேயிருந்தும், மேற்கிந்திய நிலக்கரி
சுரங்கத்திலேயிருந்தும் மிகக் குறைந்த கிரேடான எஃப் கிரேட்
நிலக்கரி வந்துகொண்டிருக்கிறது. அதை மாற்றி உயர்ந்த ரக
நிலக்கரியை கிழக்கிந்திய நிலக்கரி சுரங்கத்திலேயிருந்து பெற
தமிழக அரசு முயற்சி செய்யுமா ? அதே போன்று மேற்கிந்திய
நிலக்கரி சுரங்கமாக இருந்தாலும் சரி, சிங்கரேனி நிலக்கரிச்
சுரங்கமாக இருந்தாலும் சரி எஃப் கிரேடிலிருந்து ஏ கிரேட்,
பி கிரேட் போன்ற நிலக்கரிகளைப் பெற்று சாம்பல் அதிகமாக
இருக்கின்ற நிலக்கரியை நாம் வாங்காமல் எரிகின்ற சக்தி
கொண்ட நிலக்கரியைப் பெறுவதற்கு அரசு முயற்சி செய்யுமா?
அப்படி முயற்சி செய்கின்ற போது மின்சார வாரியமே உரிய
கப்பல்களை.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கேள்வி.

<u>திரு. டி. சுதர்சனம்</u> : வாங்குகின்ற எண்ணம் தமிழக
அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய நாட்டிலே இருக்கின்ற
நிலக்கரியிலே லோ கலோரிக் வேல்யூ இருக்கின்ற காரணத்தினாலே
தான் இன்றைக்கு அதிகமான மின் உற்பத்தியை நாம் ஈட்ட
முடியவில்லை. வெளிநாட்டிலேயிருந்து வருகின்ற நிலக்கரியிலே
அதிகமான கலோரிக் வேல்யூ இருக்கின்ற காரணத்தினாலே மின்சார

வாரியத்திற்கு ஏறத்தாழ 40-லிருந்து 50 கோடி ரூபாய் வரை மிச்சமாகலாம் என்ற ஒரு கணக்கினை நம்முடைய அதிகாரி எடுத்திருக்கிறார். ஆகவே, நம்முடைய நாட்டிலே நாம் பெறு கின்ற நிலக்கரியிலே எந்த அளவுக்கு அதிகமான ஈல்டு என்று சொல்லப்படுகின்ற கலோரிக் வேல்யூ ஈல்டு இருக்கின்ற நிலக் கரிகளைத்தான் நம்முடைய மின்சார வாரியம் வாங்குகின்றது. நம்முடைய இயற்கைச் சூழ்நிலை அப்படி. இங்கே கிடைக் கின்ற நிலக்கரியிலே அந்த சாம்பல் சத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, ஒரு டன் நிலக்கரியை நாம் ஏற்றிக்கொண்டு வருகின்றபோது பாதி அதிலே சாம்பலாக போய்விடுகிறது. அதையும் நாம் வாடகை கொடுத்து ஏற்றிக்கொண்டு வரு கிறோம். அதனாலே நஷ்டம் ஏற்படுகிறது என்பதைத் தான் நான் சொன்னேன். ஆகவே, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்றபோது நம்முடைய மின்சார வாரியத்திற்கு லாபம் என்று கருதினால் அதிலே இறக்குமதி செய்வதிலே எந்தத் தவறும் இல்லை. நம் நாட்டிலே இருக்கின்ற நிலக்கரியிலே மிக நல்ல தரம் உள்ள நிலக்கரியைத் தான் நம்முடைய மின்சார வாரியம் இன்றைக்கு பெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளும். அதையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் விளக்கம் மட்டும். விரிவான உரை நிகழ்த்தக் கூடாது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரத் துறையினுடைய நிதிநிலை அறிக் கையிலே பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆகவே ஒரு சில கருத்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் மட்டும் தான். (குறுக்கீடு) இல்லை. இல்லை. இதோடு நிறுத்திவிடுவேன். விளக்கம் மட்டும் கேட்பீர்களானால் நான் அனுமதிக்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் மட்டும்தான. மின்துறையைப் பொறுத்தவரையில் நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு கடந்த ஆட்சியிலே பல்வேறு கோரிக்கைகளை கொடுத்திருக்கிறேன். அவை கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு பல்வேறு கோரிக்கைகளை என் தொகுதி சார்பாகவும், தமிழகத்தின் பல்வேறுசட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் கொடுத்திருக்கிறோம். மின்சாரத்தைவிட வேகமாகப் ...ராய்ந்து, மிகத் தீவிரமான முறையிலே நடவடிக்கை எடுத்து ...வப்போது காரியங்களைச் செயலாற்றியவர் நம்முடைய





மாண்புமிகு முதலமைச்சர், அவருக்குத் துணையாக இருக்கின் றவர் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் என்பதை நான் பாராட்டி (மேசையைத் தட்டும் ஒலி).

"ஒளிவிளக்கு நாயகியே வந்ததால்— ஆட்சிக்கு
ஒளிவிளக்கு நாயகியே வந்ததால்
விளக்குகள் கொஞ்சம் இல்லை
வெளிச்சத்திற்கு பஞ்சம் இல்லை
இதோ பொன்விளக்கு தெரிகிறது
அதோ மின்விளக்கு எரிகிறது
பவர்கட் ஆனவர்கள் கூட— ஆட்சிப்
பவர் கட் ஆனவர்கள் கூட
பவர்கட் இல்லாமல் பரவசமாய் வாழ்கிறார்கள்"

என்று நான் மனமாற இதயமாற முதலமைச்சர் அவர் களையும் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர் களையும் பாராட்டி (மேசையைத் தட்டும் ஒலி)

(பிற்பகல் 2-05)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கத்திற்கு வாருங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : ஆதி திராவிட மக்களுடைய தெரு விளக்குகளுக்கும், அவர்களுடைய இல்லத்திற்கு வழங் கப்படுகின்ற மின் இணைப்பு சீனியாரிட்டியை ஓவர் லுக் செய்து அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கவி மாண்புமிகு உறுப்பினரே கட்டியதா, அல்லது வேறு யாராவது எழுதிக் கொடுத்தார்களா? (சிரிப்பு-மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கூறியதைப் போல் மண்டபத்தில் ஒரு வேளை எழுதிக் கொண்டு வாங்கி வந்தாரோ என்னமோ தெரிய வில்லை. (சிரிப்பு) இருந்தாலும் திரு. சிங்காரம் அவர்கள் கவி நயத்தோடு. . . . . . . .

திரு. ஆர். சிங்காரம் : நானே எழுதியது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : தலைவர் அவர்
களே, ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரையில் மின்
இணைப்புக் கொடுக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு முன்னு
ரிமைக் தான் கொடுத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.
சீனியாரிட்டி அடிப்படையில் என்று அல்ல. ஆகவே, அது
மாதிரி குறைகள் எங்காவது இருக்குமானால் அதை இந்த
அரசினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கொண்டுவருவார்களானால் உடனடியாக ஆதி திராவிட மக்
களுடைய குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பால
கிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டை சுற்றியிருக்
கின்ற பாண்டிச்சேரி, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்
களில் உயர் அழுத்த மின்சாரத்திற்கு குறைந்த ரேட் வாங்கு
கிறார்கள். அதன் காரணமாக பல தொழில்கள் எல்லாம்
தமிழ்நாட்டை விட்டு மற்ற மாநிலங்களுக்குப் போகக்கூடிய
ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, நம்முடைய மின்
சாரத் துறை இந்தத் தொழில் தொடங்குபவர்களுக்கு ஒரு
அதிகப்படியான டெபாசிட் வாங்கிக் கொண்டாவது அந்த
உயர் மின் அழுத்தத்திற்குரிய ரேட்டினைக் குறைப்பார்களா?
மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு ரேட்டினை அமைப்பார்
களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கருத்து கூறியதுபோல் நம்முடைய மாநிலத்தி
லிருந்து வெளி மாநிலத்திற்குச் சிலபேர்கள் கூட தொழில்
செய்யப்போகிறார்கள் என்று சொன்னால் பாண்டிச்சேரி
மாநிலத்திலே சென்டிரல் கவர்ன்மெண்டு சப்சிடி கொடுக்
கிறார்கள். அதற்காகப் போகிறார்கள். மின்சாரக் கட்டணம்
என்பதற்காகப் போவது இல்லை. இந்த அரசைப் பொறுத்த
வரையில் தொழிலை தொடங்க வேண்டும், 3 மாதத்திற்குள்ளே
அவர்கள் அனைத்து வேலைகளையும் முடித்து 3 மாத
காலத்திற்குள்ளே தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்புக்
கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு தமிழக
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவினை
வழங்கியிருக்கிறார்கள். தொழிற்சாலைகள் அதிகமாக வர
வேண்டும் என்று தான் புதிய தொழில் கொள்கையினை நம்
முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து
இருக்கிறார்கள். ஆகவே, அதுபோன்ற பிரச்சினைகள் எழு
வதற்கு வாய்ப்பு இல்லை.



இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்லுகின்றபோது இந்த உற்பத்திச் செலவையும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே அவைகளை எல்லாம் இந்த அரசு பரிசீலித்துத் தான் முடிவு எடுக்க முடியும். பொதுவாக நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தொழில் துவங்குவதற்கு மின்சாரத் துறையிடத்திலே எந்தவித தடங்கலும் இருக்காது, உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திர சேகர்.

திரு. வி.பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்கு சாதகமாக பதிலைத் தரவேண்டும் என்று வேண்டி கேள்வியைக் கேட்கிறேன். நகர்ப்புறத்தில் இருக்கின்ற ஏழை விவசாயிகள் தங்களுடைய விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பைப் பெற்றிருக்கின்றார்கள். அந்த பம்பு செட்டுகளுக்கு இன்றைக்கும் மின் கட்டணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களுக்கும் சேர்த்து இலவச மின்சாரம் தரக்கூடாதா? என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதய குடிசைகளில் நிரந்தரமாய் ஏற்றி வைக்கப்பட்டிருக்கின்ற இலவச மின் விளக்காம் எங்களுடைய தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் வேலையில்லாத ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட இந்த எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் பட்டதாரிகள் யாருடைய சிபாரிசும் இன்றி அதிகாரிகளால் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, படித்து முடித்த 6 மாதத்திற்குள்ளாகவே இன்றைக்கு தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றியிருக்கின்ற அதிசயம் நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில் தான் என்பதை நான் மனதாரப் பாராட்டிக் கூறி இந்த 20 லட்சம் தெரு விளக்குகள் போடப்படுகின்ற வேளையில் அதை ஏற்றி வைக்கின்ற அந்த ஒயர்மேன்கள், எல்ப்பர்கள் மிகவும் வயதானவர்களாக இருப்பதால் அவர்களால் அந்த இடத்திற்குச் சென்று போட

முடியாமல் நமது தமிழக முதல்வர் அவர்கள் திட்டம் தீட்டியும் அதை செயல்படுத்துவதிலே தாமதம் ஆகியிருக்கின்ற காரணத்தால் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைவில் கொண்டு கொஞ்சம் இளைஞர்களை அதில் பணித்து அந்த லைட்டுகள் எல்லாம் சரியாக பொருத்தப்படுகிறதா என்று பார்க்க ஊரிலே ஒரு குழுவை அமைத்து அதைச் சரி செய்வதற்கு முயல்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே ஹெல்ப்பர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்ற குறைப்பாட்டினை இன்றைக்கு என்னிடத்திலே நிறைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் அதிகமாக செலவாகின்ற காரணத்தால், ஊதியத்திற்கே 400 கோடிக்கு மேல் போகின்ற காரணத்தால் தான் சில சிக்கன நடவடிக்கைகள் காரணமாக உடனடியாக செய்ய இயலவில்லை.

பிற்பகல் 2—10

ஆனால், இது நியாயமான தேவை என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. புதிதாக ஹெல்ப்பர்கள் எடுக்க வேண்டும். ஆகவே, கிராமப்புறங்களிலே பற்றாக்குறை இருக்கிறது. இரண்டு, மூன்று பஞ்சாயத்துக்களுக்கு ஒருவர் தான் வேலை பார்க்கிறார் என்கிற குறைபாடுகள் எல்லாம்—என்னைப் போன்றவர்களும் கிராமப்புறத்திலே இருந்து வந்திருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய குறைபாடுகளை நாங்கள் நன்றாக அறிவோம். அதற்கான நடவடிக்கைகளை, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கும்படி உத்தரவிட்டு இருக்கிறார்கள். மின்சார வாரிய அதிகாரிகளோடு கலந்து பேசி, இந்த ஹெல்ப்பர்களை தேர்வு செய்வதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். அப்படி எடுக்கும்போது நல்ல இளைஞர்களாக, தொழில் தெரிந்தவர்களாக, ஓரளவிற்கு திறமை மிக்கவர்களாக தேர்வு செய்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். நம்முடைய மின்சார வாரியத்திலே இன்றைக்கு விளையாட்டிலே சிறந்தவர்களுக்கு ஏறத்தாழ 25 பேர்களுக்கு வேலை கொடுத்து இருக்கிறோம். நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த ஆண்டிலே தான் இந்திய நாட்டிலேயே முதல் பரிசு பெற்று இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சார வாரியத்தில் இதுவரை அது பெறப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலேதான் தமிழக மின்சார வாரியம் விளையாட்டுத் துறையில் முதல் பரிசு இந்தியாவிலேயே பெற்று இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கடந்த வாரம் எங்கள் பகுதிக்கு வந்தபோது, கீழ்பவானி ஆயக்கட்டு விவசாயிகள் கடலை பயிரை பறித்து எடுப்பதற்கு இன்னும் ஒரு வார காலத்திற்கு கண்டிப்பாக தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று கேட்ட நேரத்தில், மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அவர்களோடு கலந்து, மேலே குந்தாவிலிருந்து தண்ணீர் திறந்து விட்டு நிச்சயமாக இந்தப் பயிர்களைப் பறிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, நம்முடைய இதய தெய்வம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமி, அது பொதுப்பணித்துறை அமைச்சர் செய்ய வேண்டிய வேலை. அவர் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் இப்போது முன்மொழிந்து பேசிக்கொண்டு இருப்பது மின்சாரத்துறை மீது இருக்கிற நிதிநிலை அறிக்கை பற்றி. ஆகவே, அது இப்போது வராது. உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினர்களும் என்னிடம் பேசி இருக்கிறார்கள். மின்சார வாரிய தலைவரோடு கலந்து பேசி விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத அளவிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 7. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சட்டமன்றப் பேரவையின் 30, 130 மற்றும் 132 ஆவது விதிகளைத் தளர்த்துவது பற்றிய தீர்மானத்தை முன்மொழிவார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 1992ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1992) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

8. சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தல்)

இந்திய முத்திரை தமிழ்நாட்டு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு,

1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவு ஆய்வு செய்தல். 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்தச்)சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46'1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும். '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@ 5-5-92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என் னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)
மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேர வையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்.)
மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை.)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்தச் ) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1992)நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-15

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் படாமல் ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக் கூட்டத்தை ஒத்திவைக்கும் பேரவை முன்னவரவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

" பேரவையின் 25 (1)-வது விதியின்படி பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம். " என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பிற்பகல் 2-15 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை



## இணைப்பு

( 69 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் காண்க.)

தமிழ்நாடு மின்வாரியத்தின் 1992 93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1991–92 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு ஆகியவற்றின் மீது தமிழ்நாடு சட்டப்பேரவையில் விவாதத்தைத் தொடங்கி வைத்து பொதுப் பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் ஆற்றும் உரை.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே,

அவையின் முன் வைக்கப்பட்ட தமிழ்நாடு மின்வாரியத்தின் 1992–93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1991–92 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு ஆகியவற்றை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென முன்மொழிகிறேன்

2. தமிழ்நாடு மின் ஆலோசனைக் குழுவின் ஒப்புதலை பெற்று 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61 ஆம் பிரிவிற்கிணங்க, தமிழ்நாடு மின்வாரியம் இந்த நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது. வாரியத்தின் செயல்முறை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை இவ்வரசும் மின்வாரியமும் கருத்தில் கொள்ளும்.

3. மின்சாரம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான ஓர் அடிப்படைத் தேவையாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப் பாகத் தொழில் மற்றும் விவசாயத் துறைகளில் முக்கியமான இடுபொருளாகவும் உள்ளது. தனிநபர் மின்பயனீட்டளவு நாட் டின் முன்னேற்றத்தை மதிப்பிடும் ஒரு அளவுகோலாக எல்லா நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மிகவும் சிக்கன மாகவும், சிறந்த முறையிலும் மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்வு ஆகிய ஒருங்கிணைந்த முன்னேற்றப் பணிகளை மாநிலத்தில் செய்யும் பொறுப்பு, 1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் கீழ் 1957 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்ட தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகளின் மீதான இவ்விவாதம், மாநிலத்தில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற் கான கொள்கைகளையும் இதன் பொருட்டு கவனத்தில்கொள்ள வேண்டிய கருத்துக்களையும் விரிவாக விவாதிப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை வழங்குமென நான் நம்புகிறேன். எதிர் நோக்கியுள்ள பணிகளையும், எதிர்காலத் திட்டங்களையும் விவரிப் பதற்கு முன்னர் இம்மாநிலத்தில் தற்போதுள்ள மின் வழங்கல் நிலையினைப் பற்றியும், மின் வாரியத்தின் செயல்பாடு குறித்தும் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

### மின்வழங்கல் நிலை.

4. 1991-92 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது நடப்பாண்டில் மாநிலத்தின் மின்சார நிலைமை பெருமளவு மேம்பட்டுள்ளது. தற்போது மின்விசை பயன்படுத்துவதிலும், மின் தேவையிலும் வெட்டு ஏதும் இல்லை. விவசாய பம்புசெட்டுகளுக்கு பகலில் இரு பிரிவுகளாகவும் மற்றும் இரவில் எட்டு மணி நேரமும் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

5. 1990—91 ஆம் ஆண்டில் புனல் மின் நிலையங்களின் நீர்வரத்து 3302 மில்லியன் யூனிட் அளவு இருந்தது. ஆயின் 1991-92 ஆம் ஆண்டில் சாதகமான பருவ நிலை காரணமாக புனல் மின் நிலையங்களில் நீர் வரத்து 3725 மில்லியன் யூனிட்டை எட்டியது. சமீபத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக நிலக்கரி இருப்பின் அளவு 22-12-1991 அன்று மிக அதிகமான 9.77 லட்சம் டன் அளவினை எட்டியது. இதனால் மின் வெட்டினை அகற்றிட இயன்றது. தற்போது நிலக்கரியின் இருப்பு 5.45 லட்சம் டன் ஆகும்.

### அனல் மின் நிலையங்களின் செயல்பாடு.

6. நமது மாநிலத்தில் உள்ள அனல் மின் நிலையங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. 1991—92 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களின் சராசரி செயல்பாட்டு திறன் 55.69 சதவீதம் ஆகும். இதே ஆண்டில் இந்தியாவில் உள்ள அனல் மின் நிலையங்களின் சராசரி செயல்பாட்டுத்திறன் 54.3 சதவீதம் மட்டுமே. நாட்டின் மிகச்சிறப்பாகச் செயல்படும் அனல் மின் நிலையங்களில் தூத்துக்குடி அனல் மின் நிலையமும் ஒன்றாகும். இந்நிலையம், 1990—இல் ஐந்தாவது முறையாக மைய அரசின் சிறப்பு விருதினைப் பெற்றுள்ளது. ஆறாவது முறையாக மின் உற்பத்திக்கான சிறப்பு விருதினை மைய அரசிடமிருந்து பெறறிடும் தகுதியினை 69.95 சதவீதம் அளவு செயல் திறனை 1991-இல் எட்டியதன் மூலம் இந்நிலையம் பெற்றுள்ளது

7. தற்போது நிறைவேற்றப்படும் மின் உற்பத்திதிட்டங்களின் இன்றைய நிலை குறித்து இப்போது நான் எடுத்துரைக்க விழைகிறேன்.

### தூத்துக்குடி அனல் மின்நிலையம் விரிவாக்கம்.

8. ஏற்கனவே 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று மின் உற்பத்திப் பிரிவுகள் செயலில் உள்ள இந்நிலையத்தில் மேலும் 210 மெகாவாட்டுத் திறனுள்ள இரண்டு பிரிவுகள் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளது. இரு பிரிவுகளும் முறையே 31—3—1991, 11—2—1992 ஆகிய தேதிகளில் இயக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 30—4—1992 அன்று இப்பிரிவுகளை முறைப்படி துவக்கி வைத்துள்ளார்கள்.



### வடசென்னை அனல் மின் திட்டம்.

9. இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம் எண்ணூரில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மூன்று பிரிவுகளை அமைப்பதாகும். இத்திட்டத்திற்கு மையத் திட்டக்குழு 1986ல் ஒப்புதல் அளித்தது. இப்பிரிவுகளுக்கான நிலக்கரி ஒரிஸ்ஸா மாநிலம் கலிங்கா சுரங்கங்களிலிருந்து பெறப்படும். இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ. 844 கோடி ஆகும். முதல் பிரிவு 1993 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலும், இரண்டாம் பிரிவு அதே ஆண்டு டிசம்பர் திங்களிலும், மற்றும் மூன்றாம் பிரிவு 1994 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலும் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.

10. ஆசிய வளர்ச்சி வங்கி இத்திட்டத்திற்கென சுமார் 250 மில்லியன் டாலர் அளவுக்கு இரண்டு கடன் உதவிகளை வழங்கியுள்ளது. வெவ்வெறு கட்டங்களில் இந்நிலையத்தின் மொத்த நிறுவுத்திறனை 2130 மெகாவாட் வரை விரிவாக்க வேண்டும் என்பது மின் வாரியத்தின் இலக்காகும்.

### எண்ணூர் துணைத் துறைமுகம்.

11. வட சென்னை அனல் மின் நிலையத்திற்கான நிலக்கரி இறுதியாக தால்ச்சர் பகுதியிலிருந்து கப்பலில் கொண்டு வரப்பட வேண்டும். இதற்கான திட்டப் பகுதியில் ஒரு துணைத் துறைமுகம் அமைக்க மைய அரசு திட்டமிட்டுள்ளது. நிலக்கரியைக் கொண்டு வரும் திட்டத்திற்கென ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவி வழங்க உத்தேசித்துள்ளது. இத்திட்டம் பொதுத்துறை முதலீட்டு குழுமத்தின் பரிசீலனையிலுள்ளது.

### பேசின் பாலம் வாயுச் சுழலி.

12. ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட நான்கு வாயுச் சுழலிகளை ரூ. 123 கோடி மதிப்பீட்டில் நிறுவுவதற்கான இத்திட்டத்திற்கு 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில மையத் திட்டக் குழுவினரின் ஒப்புதல் பெறப்பட்டது. ஜப்பானிய அரசு இத்திட்டத்திற்கான 11450 மில்லியன் யென் கடன் உதவி வழங்க இசைந்துள்ளது. 1993—94 ஆம் ஆண்டில் இப்பிரிவுகளை இயக்கி வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

13. ஒவ்வொன்றும் 4 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு உற்பத்திப் பிரிவுகளைக் கொண்ட கீழ்பவானி வலது கரைக் கால்வாய்த்திட்டம் 7.5 மெகா வாட் திறனுடைய சாத்தனூர் திட்டம் மற்றும் ஒவ்வொன்றும் 50 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட மூன்று பிரிவுகளையுடைய பைக்காரா இறுதி நிலைத் திட்டம் போன்ற நீர்மின் உற்பத்தி திட்டங்கள் திட்டமிட்டுள்ளபடி நிறுவப்பட்டு வருகின்றன.

14. கி. பி. 2000-ம் ஆண்டின் இறுதியில் மின் தேவை 8558 மெகா வாட்டாகவும் மின்சக்தி 44982 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருக்கும் என்று எதிர்நோக்கப்படுகிறது. இந்த அளவிலான மின்தேவையை பூர்த்தி செய்ய, தனியார் மற்றும் கூட்டுத்துறைகளின் மூலம் மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு கீழ்க்கண்ணுற்ற புதிய திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| (1) செயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி நிறுவனம் .. | 3×500 மெகா வாட் |
| (2) பிள்ளைப்பெருமாள் நல்லூரில் வாயுச் சுழலி .. | 300 மெகா வாட் |
| (3) தூத்துக்குடி நான்காம் நிலை .. | 500 மெகா வாட் |
| (4) கடலூர் அனல் மின்திட்டம் .. | 2×500 மெகா வாட் |
| (5) திருமுட்டணத்தில் பழுப்பு நிலக்கரியைச் சார்ந்த அனல் மின் நிலையம் .. | 250 மெகா வாட் |
| மொத்தம் .. | 3550 மெகா வாட். |



மையத் தொகுப்பில் கீழ்க்கண்ட திட்டங்கள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன.

| (1) | மின் திறன். (2) | தமிழ்நாட்டின் பங்கு. (3) |
|---|---|---|
| | (மெகாவாட்டில்.) | |
| 1. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் முதல் அனல் மின்நிலையத்தின் விரிவாக்கம். | 2×210 | 133 |
| 2. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாம் அனல் மின்நிலையத்தின் விரிவாக்கம். | 2×210 | 133 |
| 3. கோதாவரி வாயுச் சுழலித் திட்டம் (ஆந்திர மாநிலம்) | 400 | 88 |
| 4. கைகா அணுமின்நிலையத் திட்டம் (கர்நாடகம்) | 2×235 | 103 |
| 5. மங்களூர் அனல் மின்நிலையம் (கர்நாடகம்) | 2×210 | 92 |
| 6. காயங்குளம் அனல்மின் நிலையம் (கேரளம்) | 2×210 | 92 |
| மொத்தம் .. | 2,550 | 641 |

மேலும் நம் நாட்டிலுள்ள தொழில் நுட்பத்தினையே முழுவதும் பயன்படுத்தி ஒவ்வொன்றும் 500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு பிரிவுகளடங்கிய ஒரு அணுமின் நிலையத்தை கூடங்குளத்தில் நிறுவுவதற்கு அணுமின் கழகம் ஆலோசித்து வருகிறது.

உலக வங்கியின் கடன் வசதியுடன் தனியார் துறையில் ஐந்து நுண்புனல் மின் திட்டங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

53-140—20

## காற்றிலிருந்து மின்சக்தி உற்பத்தி

15. 1991–92ஆம் ஆண்டு புலியங்குளத்தில் 1.5 மெகா வாட் திறனுடைய புதிய காற்றுப்பண்ணை நிறுவப்பட்டது. இத்துடன் காற்றுப் பண்ணைகளின் மொத்த நிறுவுத்திறன் 15.5 மெகா வாட் டாக உயர்ந்துள்ளது. மேலும், தனியார் துறையில் ஒவ்வொன்றும் 250 கிலோ வாட் திறன் கொண்ட ஏழு காற்று மின் உற பத்திப் பிரிவுகள் இயக்கி வைக்கப்பட்டன. இவற்றுடன தனி யார் துறையில் உற்பத்தித் திறன் 6.7 மெகா வாட்டாக உயர்ந் துள்ளது.

1990–91ஆம் ஆண்டில் காற்றின் மூலம் மின் உற்பத்தி செய் வதில் தமிழ்நாடு மின்சார வாரியமும் தமிழ்நாடு சக்தி வளர்ச்சி நிறுவனமும் இணைந்து முதல் இடத்தைப் பெற்று மைய அரசின் பரிசைப் பெற்றுள்ளன. தொடர்ந்து இரண்டாம் முறையாக இவ்விருதினை நாம் பெற்றுள்ளோம். மேலும், 1989–90ஆம் ஆண்டிலும் 1990–91ஆம் ஆண்டிலும் காற்று மின் உற்பத்திப் பிரிவுகளை செம்மையாகப் பயன்படுத்தியமைக்கான ஒவ்வொரு ஆண்டும் ரூ. 75 ஆயிரம் பரிசாகப் பெறப்பட்டது.

கோவை மாவட்டம் கேத்தனூரில் இரண்டு மெகா வாட் திறன் கொண்ட ஒரு புதிய காற்றுப் பண்ணை நிறுவ திட்டமிடப் பட்டுள்ளது. கயத்தாறு இரண்டாம் நிலை காற்றுப் பண்ணை யில் 1.5 மெகா வாட் திறனிற்கு கூடுதல் உற்பத்தி செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## மின் அனுப்புகை

16. 1991–92ஆம் ஆண்டில் வரலாறு படைக்கும் அளவில் நாம் 41 புதிய துணை மின் நிலையங்களை நிறுவியுள்ளோம். இதற்கு முன் நாம் அடைந்துள்ள சிறப்பு 1987–88ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 40 துணை மின் நிலையங்களாகும். மின் விசை யூட்டப்பட்ட புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகளின் விவரம் வருமாறு :—

| (1) | (கிலோ மீட்டரில்.) (2) |
|---|---|
| (1) 230 கிலோ வோல்ட் பாதைகள் .. | 166.8 |
| (2) 110 கிலோ வோல்ட் பாதைகள் .. | 239.9 |
| (3) 33 கிலோ வோல்ட் பாதைகள் .. | 13.2 |
| ஆகக் கூடுதல் .. | 419.9 |



தென் மண்டலத்தில் உள்ள மற்ற மாநிலங்களின் மின் கட்ட மைப்புகளுடன் தமிழ்நாடு மின் கட்டமைப்பு இணைந்து செயல் படுகிறது. இவ்விதம் இணைக்கப்பட்டுள்ள மின் கட்டமைப்பை இணைக்குவதில் சில சிக்கல்கள் எழுகின்றன. ஏப்ரல் 4ஆம் தேதி டில்லியில் நடைபெற்ற மின்துறை அமைச்சர்களின் கூட்டத்தில் இச்சிக்கல்கள் விவாதிக்கப்பட்டன.

1992–93 ஆம் ஆண்டிற்கான மின் அனுப்புகைப் பற்றிய இலக் குகள் வருமாறு :—

| | |
|---|---|
| (1) புதிய துணை மின் நிலையங்கள் .. | 33 கி.மீ |
| (2) 230 கிலோ வோல்ட் மின்பாதைகள் | 143 கி.மீ |
| (3) 110 கிலோ வோல்ட் மின்பாதைகள் | 406.6 கி.மீ |
| (4) 66 கிலோ வோல்ட் மின்பாதைகள் | 36.0 கி.மீ |
| (5) 33 கிலோ வோல்ட் மின்பாதைகள் | 12.0 கி.மீ |
| ஆகக் கூடுதல் .. | 597.6 கி.மீ |

## மின் பகிர்வு

17. 1991–92ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள வெவ் வேறு வகையான இலக்குகள் முழுவதும் எட்டப்பட்டன.

| பிரிவு. (1) | இலக்கு. (2) | அடைவு. (3) |
|---|---|---|
| விவசாய மின் இணைப்புகள் .. | 40,000 | 40,108 |
| குடிசைகளுக்கான மின் இணைப்பு | 40,000 | 40,007 |
| புதிய தொழில் இணைப்புகள் (உயர் மற்றும் தாழ் மின் அழுத்தம்) | 12,700 | 14,409 |
| கிராம மின் மயமாக்கம் .. | 7 | 7 |

[1992 மே 5

தமிழ்நாட்டில் 100 விழுக்காடு கிராம மின்மயமாக்கம் எட்டப்
பட்டுள்ளது என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்
துக் கொள்கிறேன். 1992–93ஆம் ஆண்டிற்கான இலக்குகள் பின்
வருமாறு :—

| பிரிவு. | இலக்கு. |
|---|---|
| விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு | 40,000 |
| குடிசைகளுக்கு மின் இணைப்பு .. | 40,000 |
| (இவற்றில் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான 30,000 குடிசைகளும் அடங்கும்.) | |
| தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு (உயர் மற்றும் தாழ் மின் அழுத்தம்). .. | 14,100 |
| தெரு விளக்குகள் :— | |
| இயல்புத் திட்டம் .. | 20,000 |
| தன்னிறைவுத் திட்டம் .. | 75,506 |

## விவசாயத்திற்கு மின் வசதி

18. விவசாயத்திற்கு புதிய மின் இணைப்பு கோரி சுமார்
5 இலட்சம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. ஒவ்வொரு
வருடமும் கிடைக்கும் கட்டுப்பாடான நிதி நிலையைக் கருத்திற்
கொண்டு 40,000 வேளாண்மைப் பம்பு செட்டுகளுக்கு புதிதாக
மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. மின்சார வாரியத்தின்
நிதி நிலைமையைக் கருதி புதியதொரு திட்டம் வகுக்கப்பட்
டுள்ளது. இத்திட்டத்தின்படி பயன்பெற விரும்பும் விண்ணப்பத்
தாரர்கள் ரூபாய் இருபத்தைந்தாயிரம் அல்லது இணைப்புக்குண்
டான செலவு இவற்றில் எது அதிகமோ அதைச் செலுத்தி
முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு பெற்றுக் கொள்ள
லாம். இத்திட்டத்தின் கீழ் மின் இணைப்புப் பெற இதுவரை
2,051 விண்ணப்பதாரர்கள் முன் வந்துள்ளனர். இத்திட்டத்
தின் மூலம் பயன்பெறும் மின் பயனீட்டாளர்கள் மின்வாரிய
இயக்கச் செலவுக்கென ஆண்டொன்றுக்கு ஒரு குதிரைத்திறனுக்கு
ரூ. 150 வீதம் செலுத்த வேண்டும்.



1992 மே 5]

நாட்டிலுள்ள அனைத்து விவசாயப் பிரிவினருக்கும் சீரான
ஒரே கட்டண விகிதமாக யூனிட்டுக்கு 50 பைசா வசூலிக்கப்பட
வேண்டும் என்று மைய அரசு வற்புறுத்தி வருகிறது. இது
குறித்து ஒரு முடிவு காண மேலும் விவாதம் தேவை.

## தொழில் நிறுவனங்கள்

19. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்
கள் அறிவித்துள்ள புதிய தொழிற்கொள்கையின்படி நூறு சத
வீத ஏற்றுமதி நிறுவனங்கள் எதிர்காலத்தில் மின்வெட்டிலிருந்து
முழு விலக்கு பெறும். மேலும், விரிவாக்கப் பிரிவுகளும் புதிய
தொழிற்சாலைகளுக்குண்டான கீழ்க்கண்ட கட்டண விகித சலு
கைகளைப்பெறும்.

(1) முதல் வருடம் 40 சதவீதம்.

(2) இரண்டாம் வருடம் 30 சதவீதம்.

(3) மூன்றாம் வருடம் 20 சதவீதம்.

புதிய தொழில் நிறுவனங்களுக்கு அவர்கள் மின் இணைப்
பினைப் பெற்றுக்கொள்ளத் தயார் நிலையில் இருக்கும் பட்சத்
தில் மூன்றுமாதங்களுக்குள் மின் இணைப்பு வழங்கிட அனைத்து
முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

20. சர்க்கரை ஆலைகள் போன்றவற்றில் கூட்டு மின் உற்
பத்திக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. தனியார் நிறுவும் சொந்த
உபயோகத்திற்கான மின் காற்றாலைகளிலிருந்து மின்சாரத்தை
எடுத்துச்செல்ல இரண்டு சதவீதம் மின்சாரமே சலுகை முறையில்
வசூலிக்கப்படுவதால் இத்தகைய மின் உற்பத்தி
பெருமளவு அதிகரித்துள்ளது.

21. சென்ற ஆண்டு தமிழ்நாடு மின்சார கட்டமைப்பு 3,100
மெகா வாட் மின் சுமையுடன் இயங்கி வந்தது. தற்போது
கட்டமைப்பின் மின்சுமை 3,400 மெகா வாட்டிலிருந்து 3,500
மெகா வாட் வரை உள்ளது. மின் வெட்டு நீக்கம் மற்றும்
தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி ஆகிய காரணங்களினால் மின்
கட்டமைப்பின் மின் சுமை அதிகரித்து, காலையிலும் மாலை
யிலும் உச்ச மின் சுமை நேரங்களில் சில பகுதிகளில் மின் அழுத்தம்
குறைவாக உள்ளது. இந்நிலையைச் சீர் செய்ய மின் உற்பத்தி
நிலையங்களிலும், துணை மின் நிலையங்களிலும் உச்ச அளவிற்கு
மின் அழுத்தத்தை நிலை நிறுத்த பல்வேறு நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின்பகிர்வுக் கட்டமைப்பை
சீராக்க 1992–93இல் இயன்ற அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது. மேலும், மின் இழப்பினை தற்போதுள்ள 18.4
விழுக்காட்டிலிருந்து குறைப்பதற்கு மின்சார வாரியம் சிறப்பு

நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்போதுள்ள 18.4 விழுக்
காடு மின் இழப்பு தேசீய சராசரி அளவான 21.8 விழுக்காட்
டிற்கும் குறைவானதேயாகும்.

## 1991–92ஆம் ஆண்டுத் திட்டம்

22. 1991–92ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு மையத்
திட்டக் குழுவின் ஒப்புதல்படி ரூ. 425 கோடியாகும். மேலும்,
மின் நிதி வழங்கும் கழகத்தின் மூலம் ரூ. 100.29 கோடி கடன்
உதவி பெறுவதாக இருந்தது. மதிப்பிடப்பட்ட செலவு
மொத்தம் ரூ. 525.29 கோடியானாலும், வாரியம் ரூ. 536.95
கோடி செலவு செய்துள்ளது. மேற்கூறிய திட்ட மதிப்பீடு
செலவுகளுக்குப் புறம்பாக கிராமிய மின் வளர்ச்சிக் கழகம் நிதி
உதவியுடன் விவசாய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வரு
கின்றன; இதற்காக ரூ. 39.22 கோடி செலவு செய்யப்பட்டது.
மேலும், சிறப்புத் தன் நிறைவுத் திட்டத்தின்கீழ் அரசு, ஊராட்சி
ஒன்றியங்கள் மூலம் ஒதுக்கீடு செய்துள்ள ரூ. 14 கோடியில்
ரூ. 10.96 கோடி அளவிற்கு தெரு விளக்குகளுக்கு மின்சாரம்
வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவியுடன், மேற்குத்
தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தையும் மின் வாரியம்
செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆக, 1991–92ஆம் ஆண்
டுக்கான மொத்த முதலீட்டுச் செலவுகள் ரூ. 591.39 கோடி
ஆகும்.

## 1992–93ஆம் ஆண்டுத் திட்டம்

23. 1992–93ஆம் ஆண்டுத் திட்டத்தில் மொத்த திட்ட
முதலீடு ரூ. 456.40 கோடியாகும்; இதில் மைய அரசின் மின்
வளர்ச்சி நிதி வழங்கும் கழகத்தின் கடன் நிதி உதவி ரூ. 94.20
கோடி அடங்கும். இதற்கும் மேலாக, விவசாய மின் இணைப்
புகள் கொடுப்பதற்காக, கிராமிய மின் வளர்ச்சிக் கழகம்,
''நபார்டு'' மற்றும் வங்கிகளிடமிருந்து, வாரியம் ரூ. 48.8 கோடி
பெறுவதாக உள்ளது. சுமார் 10,000 விவசாயிகள் சுய நிதித்
திட்டத்தின் கீழ் சுமார் ரூபாய் 25 கோடி செலுத்தி விவசாய
மின் இணைப்புப் பெற முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்
படுகிறது. இவை தவிர, சிறப்புத் தன் நிறைவுத் திட்டத்தின்
கீழ், தெரு விளக்கு இணைப்புகள் கொடுப்பதற்கு ரூ. 16 கோடி
பெறப்படும். மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட மின் உற்
பத்தித் திட்டங்களின் கீழ் மதிப்பீடு ரூ. 0.69 கோடி செலவிடப்
படும். தமிழ்நாடு சக்தி மேம்பாட்டுக் கழகம் மற்றும் மத்திய
அரசின் முறை சாரா மாற்று சக்தித்துறை ஆகியவற்றிடமிருந்து
மொத்தம் ரூ. 27.75 கோடி பெற்று காற்று மின் உற்பத்திப்
பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன. 1992–93ஆம் ஆண்டில்
மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 668.84 கோடியாகும். இதுவே,
சென்ற ஆண்டு ரூ. 591.39 கோடியே ஆகும் என்பது இவ்வி
நோக்கற்பாலது.





## வரவும் செலவும்

24. இப்போது மின்சார வாரியத்தின் நிதி நிலைமை பற்றி
கூற விழைகிறேன். 1990–91ஆம் ஆண்டில் வரவு ரூ. 1,447.86
கோடியாகவும் வரவின்பாற்பட்ட செலவு ரூ. 1,808.41 கோடி
யாகவும் இருந்தன. 1991–92ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட
மதிப்பீட்டின்படி வரவு ரூ. 1,723.86 கோடியாகவும் வரவின்
பாற்பட்ட செலவு ரூ. 2,062.89 கோடியாகவும் உள்ளன.
1992–93ஆம் ஆண்டு வரவு ரூ. 1,948.78 கோடியாகவும் வரவின்
பாற்பட்ட செலவு ரூ. 2,407.14 கோடியாக இருக்கும் எனத்
தோன்றுகிறது. வரவிற்கும் வரவின்பாற்பட்ட செலவிற்கும்
இடையே துண்டு விழும் அளவு ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக்
கொண்டே போகிறது. 1989–90ஆம் ஆண்டில் இவ்விடை
வெளி ரூ.. 480.42 கோடியாக இருந்தது. 1990–91ஆம் ஆண்டு
இது ரூ. 360.55 கோடியாகவும், 1991–92ஆம் ஆண்டு ரூ. 339.03
கோடியாகவும் 1992–93ஆம் ஆண்டு ரூ. 458.36 கோடியாகவும்
இருக்கும். மின்சார வாரியத்தின் திறமைக் குறைவினால் ஏற்
படுவதல்ல இந்த இடைவெளி. மின் உற்பத்தியில் புனல் மின்
உற்பத்தியை விட அனல் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாலும்
நிலக்கரி, எண்ணெய் இவற்றின் கொள்முதல் விலை உயர்வாலும்,
மைய அரசின் மின் நிலையங்களிலிருந்து வாங்கப்படும் மின் விசை
யின் விலை அதிகரிதுள்ளதாலும், மின்சார வாரியம் பெறும்
நிதிக்கடன்களின் வட்டி விகிதம் உயர்ந்துள்ளதாலும், விவசாயி
களுக்கும் குடிசைகளுக்கும் இலவசமாக மின்விசை வழங்குவ
தாலும், மற்ற பல வகையான மின் நுகர்விற்குக் குறைவான
கட்டணத்தில் மின் விசை வழங்குவதாலும் இந்நிலைமை ஏற்
பட்டுள்ளது. 1992–93ஆம் ஆண்டில் அனல் மின் நிலையங்களில்
பயன்படுத்தப்பெறும் எரிபொருளுக்கு ரூ. 1,020.25 கோடியும்,
மையத் தொகுப்பிலிருந்து பெறப்படும் மின்சக்திக்கு ரூ. 435.61
கோடியும், இயக்கம் மற்றும் பராமரிப்புப்பணிகளுக்கு ரூ. 62.57
கோடியும், நிர்வாகம் மற்றும் ஊழியர்கள் ஊதியத்திற்கு
ரூ. 427.32 கோடியும், தேய்மானத்திற்கு ரூ. 121.39 கோடியும்,
அரசு மற்ற நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி
ரூ. 340.00 கோடியாகவும் இருக்கும். பருவமழை சரியாக
அமைந்தால், 1992–93ஆம் ஆண்டில் விழும் துண்டு எதிர்பார்க்
கப்பட்டுள்ள ரூ. 458.36 கோடியை விடக் குறைவாக இருக்கும்.

## கட்டண மாற்றம்.

25. இந்திய அரசு 28—12—1991 முதல் நிலக்கரிச் சுரங்
கங்களிலிருந்து வாங்கப்படும் நிலக்கரியின் விலையை உயர்த்தி
யுள்ளது. அதாவது டன் ஒன்றுக்கு ரூ. 64 முதல் ரூ. 145
வரை உயர்த்தியுள்ளது. இதனால் வாரியத்திற்கு ரூ. 79.79
கோடி அதிகமாக செலவிட வேண்டியுள்ளது. இந்த நிலக்கரி
விலை உயர்வினால் ஏற்படும் கூடுதல் செலவினை மின்சார
வாரியம் ஈடுகட்டும் பொருட்டு, வீட்டு உபயோகம், விவசாய

[1992 மே 5]

மற்றும் குடிசை இணைப்புகள் நீங்கலாக மற்ற மின் உபயோகிப் பாளர்களுக்கு ஒரு யூனிட்டிற்கு மின் கட்டணம் 1-2-1992 முதல் 10 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்விசை இலவசமாக வழங் கப்படுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நிலக்கரி மற் றும் இரயில் கட்டணம போன்ற இனங்களில் ஏற்பட்டுள்ளக் கூடுதல் செலவினால் (மின் உற்பத்தி மற்றும் விநியோகச் செலவு உட்பட) குறைந்த மின் அழுத்த முனையில் யூனிட் ஒன்றிற்கு 157 பைசா அடக்கமாகிறது. விவசாயிகளுக்கு இலவசமாக மின் சாரம் வழங்குவதின் மூலம் இந்த ஆண்டு ரூ. 610.89 கோடி அளவிற்கு இழப்பு ஏற்படும். இவ்விழப்பினை ஈடு செய்வதற்காக அரசு மின்சார வாரியத்திற்கு மானியம் வழங்குகிறது. இவ் வாண்டு ரூ. 350.00 கோடி அளவிற்கு இம்மானியம் வழங்கப்பட உள்ளது.

26. மின்சார வாரியம் குறைந்த பட்ச ஊக்கத் தொகையான 8.33 விழுக்காட்டினை ஊழியர்களுக்குத் தொடர்ந்து வழங்கி வருகிறது. 1990-91ஆம் ஆண்டில் கருணைத் தொகை சென்ற ஆண்டின் அளவான 4.92 விழுக்காட்டிலிருந்து 5.67 விழுக் காடாக உயர்த்தி வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன். இதற்கான மிகக் குறைந்த அளவு ரூ. 750 கோடி ஆகும். ஊக்கத் தொகை பெற முடியாத அலு வலர்களுக்கு கருணைத் தொகையாக ரூ. 450 வழங்கப்பட் டுள்ளது.

27. 1991-92ம் ஆண்டில் 78 உதவிப்பொறியாளர்கள் மின்னியல் 60 உதவிப்பொறியாளர்கள் (எந்திரவியல்) 144 உதவிப்பொறியா ளர்கள் (பொதுவியல்), 146 தட்டச்சர்கள், 23 சுருக்கெழுத்தாளர் கள் 41 வேதியியல் ஆய்வாளர்கள் புதிதாகப் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர். வாரியத்தின் பணியில் இருக்கும்போது இறந்து போனவர்களின் குடும்பங்களைச் சார்ந்த 440 பேர்களுக்கும் வெவ்வேறு நிலைகளில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வடசென்னை அனல் மின்திட்டம் மற்றும் கீழ் மேட்டூர் புனல் மின்திட்டத்திற்கு நிலத்தை கையகப்படுத்தும் போது வெளியேற்றப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த 138 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

28. பலதிறப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கும் நிறுவன மாக தமிழ்நாடு மின்சார வாரியம் இயங்குகிறது. எனவே, பணித் திறமையை மேம்படுத்த வாய்ப்பு தொடர்ந்து இருக்கிறது. மின்சார வாரியத்தின் பணிகள் பற்றி குறிப்பாக மின் தேவை யையும் மின் உற்பத்தியையும் ஈடு கட்டும் பிரச்சினையையும், வரவிற்கும் செலவிற்குமான இடைவெளியைக் குறைப்பதற்கான பிரச்சினையையும் மின்சார வாரியம் எதிர்நோக்கி இருப்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்கி உள்ளேன். மின் சார வ[illegible]னை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங் கள[illegible]த்தினைக் கூறுமாறு நான் இந்த அவையின் மாண்புமிகு உ[illegible]ர்களைக் கேட்[illegible]ள்கிறேன்.

164945
[illegible]-600 [illegible]